துக்கித்துச் சொல்வானாக.

௨ ஆ! எங்கள் மீறுதல்களை
அன்பாய் மன்னித்துக்கொள்ளும்.
அடியார் நம்பிக்கை நீரே,
சகாயஞ் செய்ய வாரும்.
கர்த்தாவே நல்ல தயவால்
மழையைத் தந்து அதினால்
நிலத்தைப் பூரிப்பாக்கும்.

௩ தயாபரா! நீர் உமது
நல்வாக்கின் படியாக

Digitized by Google

தயவாய்க் காய்ந்த பூமிக்கு
தண்ணீர் இறைப்பீராக.
நீர் வான வாசகத்தரே,
மழையை உம்மையன்றியே
ஆர் பெய்யப் பண்ணக் கூடும்?

32 L. M. Windham.

Public Calamity.

௧ மகா இக்கட்டாம் ஆபத்து
உண்டாகி எங்கள் மனது
ஓர் யோசனையும் இன்றியே
கலங்கிக்கொண்ட பொழுதே,

௨ கத்தாவே, மனத்தாழ்மையாய்
உம்மண்டையிற் சேர்ந்தேகமாய்
அனுக்கிரகத்தைக் கேட்பதே
எங்கள் ஆறுதலாகுமே.

௩ நொறுங்கிய நெஞ்சுடனே
வந்தோம்—இரங்குங் கத்தரே,
மன்னித்துக்கொள்ளும், மிகவும்
கோபமாயத் தண்டியாதிரும்.

௪ இக்கட்டில் யேசு மூலமாய்
மன்றாடினோரைத் தயவாய்

Digitized by Google

ரட்சிப்போமென்றுந் தேவரீர்,
நல் வாக்குத்தத்தம் பண்ணினீர்.

௫ ஆ! எங்கள் மீறுதல்களை
பாராமல் யேசுக் கிறிஸ்துவை
பார்த்தெங்கள் வாதை யாவையும்
அன்பாக நீக்கியருளும்.

33 7's. **Lancaster.**

Advent of Christ.

௧ வாரும், லோக மீட்பரே!
கன்னி பெற்ற மைந்தரே.
நீர் பிதாவில் வந்தவர்
லோகத்திற்கிரட்சகர்.

௨ தீபமாம் பிதாவுக்கு
சாயலாக நமது
௪ மேன்மையான ரட்சகர்
தாழ்மையாய்ப் பிறந்தனர்.

௩ எங்கள் மேற் பிரகாசியும்,
என்றென்றைக்கும் ரட்சியும்.
நீர் பலத்த தேவனார்,
எம்மைக் காக்கும் நாயனார்.

34 L. M. Sheel.

Advent of Christ.

௧ இரக்கமுள்ள யேசுவே,
நரரின் தன்மையாகவே
பிறந்ததாற் துதிக்கிறோம்,
சாரும் பாடக் கேட்கிறோம்.

௨ அகாதமான வல்லவர்
சமஸ்தத்தையுஞ் செய்தவர்
குழந்தையாய்ப் பிறந்தனர்,
ஸ்திரீ மார்பிலே கிடந்தனர்.

௩ அநாதி சோதி பூமிக்கு
பிரகாசந் தந்திருட்டுக்கு
சுடர் கொடுக்க ராவிலே
பிரவேசித்தார் - சந்தோஷமே!

௪ அவற்றை யாருஞ் சிந்தித்து
சந்தோஷத்தோடு பூரித்து,
அத்தீபத்தைப் பரவுங்கள்,
அதில் நடக்கப் பாருங்கள்.

35 L. M. Rothwell.

Advent of Christ.

௧ பரத்திலே இருந்துதான்
அனுப்பப்பட்ட தூதன் நான்

Digitized by Google

நற்செய்தி அறிவிக்கிறேன்,
பயப்படாதிருங்களேன்.

௨ இதே எல்லாச் சனத்துக்கும்
பெரிய நன்மையாய் வரும்,
சந்தோஷத்தைக் களிப்புடன்
நான் கூறுஞ் சுவிசேஷகன்.

௩ இன்றுங்கள் கர்த்தரானவர்
மேசியா உங்கள் ரட்சகர்,
தாவீதின் ஊரில் ஏழையாய்
ரட்சிப்புக்காகச் சனித்தார்.

௪ பரத்திலே நாம் ஏகமாய்
இனி இருக்கத்தக்கதாய்,
இக்கட்டும் பாவமும் எல்லாம்
இம்மீட்பரால் நிவிர்த்தியாம்.

36 7's. Wilmot.

Advent of Christ.

௧ கர்த்தருக்குத் தோத்திரம்
மீட்பன் என்ற வாசகம்
தப்பில்லாமல் நாயனார்
மீட்பரை அனுப்பினார்.

Digitized by Google

௨ முற்பிதாக்கள் யாவரும்
மற்ற மேன்மையோர்களும்
சொல்லி ஆசைப்பட்டது
வந்து நிறைவேறிற்று.

௩ வாழ்க, ஆதி தீபமே!
ஒசியன்னு! சீவனே!
என்னுடைய நெஞ்சிலும்
அன்புடன் பிரவேசியும்.

௪ உள்ளே வாரும் ராயரே!
அதுமக்குச் சொந்தமே.
பாவமான யாவையும்
நீக்கி என்னை ரட்சியும்.

37 L. M. Old Hundred.

Fall of Man and Salvation by Christ.

௧ ஒரே கர்த்தர் இருக்கிறார்—
பிதாக் குமாரன் ஆவியார்,
அவர் எல்லாம் படைத்தவர்
எப்போதுங் காத்துக்கொண்டவர்.

௨ படைப்பில் ஆதி மானிடர்
தெய்வீகச் சாயலானவர்,
அவர்களுக்குண்டானது
மெய் ஞானம் சுத்தங் களிப்பு.

௩ பசாசின் தந்திரத்தினால்,
அதை இழந்துபோனதால்;
இயல்பாய் யாரும் கெட்டோர்கள்,
நடத்தையாலும் பாவிகள்.

௪ அதற்குத் தேவ கோபமே
உண்டாகப் பேயின் கையிலே
விழுந்து சாவுக்குட்பட்டோம்,
நரகத் தீக்கு நேரானோம்.

௫ அதற்குத் தப்பி மோட்சத்தை
அடையப் பார்த்தும், ஓர்வகை
நம்மால் தோன்றாது-நாயனே,
ரட்சிப்புண்டாக்க வேண்டுமே.

38 **L. M.** **Hebron.**

Fall of Man and Salvation by Christ.

௧ மகா சினேகம்! அற்புதம்!
பிதா இரங்கி உலகம்
சீர்கொள்ள ஏக மைந்தனை
கொடுத்ததே மகா தயை!

௨ பொல்லாருக்காக இவரே
பலியாய்ச் சிலுவையிலே

Digitized by Google

மரித்துப் பாவம் நீக்குதல்
உண்டாக்கின இம்மானுவேல்.

ஈ கத்தாவின் அன்பை மீளவும்
மாளாத மோட்ச வாழ்வையும்
எல்லாருக்குஞ் சம்பாதித்தார்,
கொடுப்போமென்றும் நிற்கிறார்.

ச இவ்வாழ்வை நீ விரும்பினால்,
தேவாவி செய்யுந் துணையால்
உன் பாவத்தை விட்டழுது,
மெய் மனஸ்தாபப்பட்டிரு.

ரு அதால் உன் பாவம் நீங்குமே,
குமாரன் நீதி உன்னதே.
பிதாவின் பிள்ளையாகுவாய்,
தேவாவியையும் பெறுவாய்.

39 8, 7, 4. Littleton.

Fall of Man and Salvation by Christ.

க லோகத்தாரின் வாஞ்சையான
கத்தர் யேசுக் கிறிஸ்துவே,
தேவரீருக்கேற்றதான
சித்தத்தோடு போற்றவே,
என்னிடத்தில்
அருளைக் கடாட்சியும்.

Digitized by Google

௨ நானும் மற்ற மக்கள் யாரும்
மோட்சமற்றுப் போயினோம்,
லோகத்துள்ளவர் எல்லாரும்
சாபத்தில் அகப்பட்டோம்.
அதை நீக்கி
மோட்சம் ஈயத் தோன்றினீர்.

௩ பாவியாக நான் கிடந்தேன்,
கட்டவிழ்க்க ஏற்பட்டீர்.
துன்ப பாரத்தைச் சுமந்தேன்,
ஆற்றல் செய்திரட்சித்தீர்.
நான் எளியன்,
என்னைச் செல்வனாக்கினீர்.

௪ அப்பொருட்டு நீர் பிறந்து
ஏழைமையில் உட்பட்டீர்,
நீதியுடன் நீரே வந்து
துன்பத்திற் பிரவேசித்தீர்.
இந்த அன்பு
யோசனைக்கெட்டாதது.

௫ அதை நான் நினைப்பேனாக,
கத்தரே என் மனசு
அதினால் நிறைந்ததாக
செய்ய வேண்டுகின்றது.

Digitized by Google

ஆ! என் கர்த்தர்
ஸ்தோத்திரிக்கப்பட்டவர்.

40 P. M. Luther's Hymn.

Pardon through Faith in Christ.

க தாழ்வில் இருந்து கூப்பிட்டும்
என் சத்தங் கேட்டன்பாக
என் அழுகை எல்லாத்துக்கும்
செவி கொடுப்பீராக.
கர்த்தாவே பாவமானதை
நீர் மன்னியாமல் நீதியை
பார்த்தால் ஆர் நிற்கக் கூடும்?

உ மன்னிப்பை எவனாகிலும்
தன் புண்ணியங்களாலே
அடையான்-உம்மை யாவரும்
யேசுவின் வழியாலே
தேடி நம்பிக்கையுடனே
வந்தால், மாதயவாகவே
மன்னிக்கிறீர் கர்த்தாவே.

ங நான் யேசுவைக் கண்ணோக்கிறேன்,
என் புண்ணியம் அபத்தம்,
தேவன்பையே நான் நம்புவேன்,
அதற்கு வாக்குத்தத்தம்
மெய்யான தேவ வார்த்தையில்

Google

உண்டாகுமே என் மனதில்
அதற்குக் காத்திருப்பேன்.

41 S. M. Watchman. Dover.

Christ our Righteousness.

௧ என் நீதி யேசுவே,
அவர் இல்லாவிட்டால்
பிதாவுக்கு முன்பாகவே
நான் பாவியானதால்,

௨ விழிக்கக் கூடாது.
என் யேசுவின்றியே
இரட்சிப்புங் கிடையாது,
என் மீட்பர் அவரே.

௩ என் சாவு யேசுவால்
விழுங்கப்பட்டது,
இவர் காருண்ணியத்தினால்
என் பாவக்கேட்டுக்கு

௪ விலகி விடுவேன்.
நான் நியாயத் தீர்ப்புக்கும்
பயப்படாதவனுவேன்,
வாழ்வெனக்குண்டாகும்.

௫ கடவுள் தயவால்
அவர் நியமித்தமே

Digitized by Google

கடாட்சம் பண்ணி ரட்சித்தால்
என் ஆவி தேறுமே.

42

C. M. Howard's. Arlington.

Justification through Christ alone.

௧ சிறையுற்றோரின் மீட்பரே,
என் யேசுவே நீர் தாம்
தயையால் என்னைத் தேற்றவே
மகா இரக்கமாம்.

௨ பராக்கிரமத்தைச் செய்பவர்
பலத்த தேவன் நீர்.
ரட்சிப்புக்கே நீர் சாரணர்,
பொல்லாங்கை நீக்குவீர்.

௩ நான் சொந்த நீதியற்றவன்,
என் நீதி கந்தைதான்.
உம்மால் நான் நீதியுள்ளவன்
மிகுந்த புண்ணியவான்.

௪ இம்மேன்மையை நினைக்கையில்
உம்மை எந்நேரமும்
துதிக்க நீர் என் உள்ளத்தில்
பலத்தை அளியும்.

Digitized by Google

43 L. M. Uxbridge. Wells.

Justification through Christ alone.

௧ எவ்விதமாகக் கத்தரே,
உம்மை வணங்கத் துணிவேன்?
உமது தயை பெறவே
ஈடாக என்ன கொடுப்பேன்?

௨ அனேக காணிக்கைகளை
மேலான தேவன் ஏற்பாரோ?
தகனப் பலி கோபத்தை
தணித்துத் தயை பெறுமோ?

௩ நீதியைச் செய்திரக்கத்தை
காண்பித்துச் சுத்தனாகவே
எப்போதுஞ் சீவித்தால், தயை
கத்தாவிற் பெற்றுக்கொள்வேனே.

௪ ஆயினும் இனிப் பத்தனாய்
நடந்துகொண்டும், முன்னமே
நான் செய்த பாவம் பாரமாய்
போக்கப்படாமல் நிற்குமே.

௫ என் பாவநாசர் யேசுவே,
இரத்தஞ் சிந்தி மரித்தார்.
அதால் என் பாவம் நீக்கவே
வெற்றி சிறந்தெழும்பினார்.

௯ பிதாவின் சன்னிதானத்தில்
எப்போது வேண்டிக்கொள்ளுகிறார்,
காயங்களைத் தன் தேகத்தில்
காண்பித்து என்னை நினைப்பார்.

44 8, 7. Sicilian Hymn.

Trust in God through Christ.

௧ தேவரீரை விசுவாச
பத்தியோடே பணிகிறேன்,
தாழ்மையாக நேசமாக
உம்மையே நான் அண்டினேன்.
நீர் மன்றாடினை பாண்டமான
என்னை அன்பாய்ப் பாருமேன்.

௨ என்னைச் சுத்த சீர்ப்படுத்த
தயைபண்ணுங் கத்தரே,
என்னைச் சொந்த ஆடாய்க்கொண்ட
மேய்ப்பரான உம்மையே
சேர்வேனாக-நீர் அன்பாக
என்னைப் பாரும் யேசுவே.

௩ நேசத்துடன் நீர் உம்மோடே
ஐக்கமாக்கி எல்லோர்க்கும்
ஈவதான ரட்சிப்பான
தயை என் மேல் அருளும்.

Google

யாவும் நீரே! தேவரீரே
என்னைப் பார்த்திரட்சியும்.

௪ ஆ! என் ஞான ஒளியான
தேவ ஆட்டுக்குட்டியே!
எனதாவி உம்மைத் தாவி
சேரும் மணவாளனே,
பட்சத்தோடுந் தயவோடும்
என்னைப் பாரும் மீட்பரே.

45 C. M. **Windsor. Dundee.**

Trust in God through Christ.

௧ மிகுந்த பாவச் சேற்றிலே
அமிழ்ந்தவனானேன்,
விஸ்தார பூதலத்திலே
சகாயத்தைக் காணேன்.

௨ ஆ! கத்தரே என் நோவிலே
சகாயராயிரும்,
தெய்வீக அன்பை நெஞ்சிலே
நிறுத்திரட்சியும்.

௩ அதே அன்புள்ள யேசுவே
என் ஆவியிற் பயம்

Digitized by Google

நில்லாமல் விட்டுப் போகவே
பலத்த எத்தனம்.

௪ என் தேகமும் என் ஆவியும்
பிரியும் போதிலே
நான் உம்மைக் கண்டு என்றைக்கும்
சந்தோஷங் கொள்வேனே.

46 112 Hymn **C. M.** **Dundee. Mear.**

The Atonement the only Ground of Pardon.

௧ எங்கள் முயற்சிப்பலனால்
நாஞ் சயங்கொள்ளோமே,
நீர் சிந்தின இரத்தத்தால்
வெல்வோம் நல்மீட்பரே.

௨ நாம் மீறிப்போட்ட கற்பனை
இடிமுழக்கமாய்
நாசப்படுத்தும் எங்களை
கர்த்தாவின் முனிவாய்.

௩ என்றாலும் நமக்காகவே
நீர் வந்து மரித்தீர்,
பாவத்தைப் போக்கும் பலியே
என்றைக்கும் வாழ்வீர்.

Digitized by Google

௪ கர்த்தாவே, நீர் மரித்ததால்
நாம் வாழ்ந்து பிழைக்கிறோம்,
இந்த ஒரே நம்பிக்கையால்
ரட்சிப்பை அடைவோம்.

௫ இவ்வாழ்வு, சீவன், முத்தியும்
கிடைக்குங் காரணம்
நீர் பட்ட பாடு மரணம்,
உமக்கே தோத்திரம்.

47 P. M.

Sufferings and Death of Christ.

௧ அதோ மரத்திற் சாக
உன் தேவன் உனக்காக
நின்றார் உலோகமே,
குரூரமான நிந்தை
சகித்த மா கர்த்தாவை
கண்ணோக்குங்கள் நரர்களே.

௨ நானே கை கால் கட்டுண்டு
சிறையிலே தள்ளுண்டு
கிடக்க நியாயமே.
தானே இடைவிடாமல்

Digitized by Google

சந்தோஷத்தைக் காணாமல்
வாதை அடைய நீரே.

௩ அதற்கு நான் அகன்று,
நியாயாக்கினையை வென்று,
இருக்கச் செய்ய, நீர்
துன்மார்க்கர் கைக்குள்ளாகி,
மரத்திற் சாபமாகி,
எத்தீமையையுந் தாங்கினீர்.

௪ நீர் என்னை மீட்டதாலே,
யேசு நான் உமதாளே,
என் முழு உள்ளமும்
நீர் செய்த நன்மைக்காக
துதிக்கும் படியாக
தேவாவியைக் கடாட்சியும்.

௫ நீர் சாந்தத்தோடும் பட்டு
தீயோர்மேற் கோபமற்று
அநியாயம் யாவையும்
சகித்ததை நான் நோக்கி,
என் துற்குணத்தைப் போக்கி
உமக்கொப்பாய் நடக்கவும்,

Digitized by Google

௩ கர்த்தாவே, நீர் வெறுக்கும்
பொல்லாங்கை என்றென்றைக்கும்
வெறுத்துத் தள்ளவும்,
என் நெஞ்சிலே பலத்தை
நற் சிந்தையைத் திடத்தை
அநுக்கிரகித்திரட்சியும்.

48 7, 6. Missionary.

Sufferings and Death of Christ.

௧ இரத்தங் காயங் குத்தும்
நிறைந்த நிந்தைக்கே
முண் முடியாலே சுற்றும்
குத்துண்ட சென்னியே!
முன் மாட்சிமையைக் கொண்ட
நீர் லச்சை காண்பதேன்?
அன்பாய் வருந்தி நொந்த
உம்மைத் துதிக்கிறேன்.

௨ நான் உம்மைத் தாழ்மையாக
வணங்கி நித்தமே
நீர் பட்ட கஸ்திக்காக
துதிப்பேன் யேசுவே!
நான் உம்மில் ஊன்றி நிற்க
சகாயமாய் இரும்,

Digitized by Google

நான் உம்முடன் மரிக்க
நீர் கட்டளையிடும்.

௩ என் மூச்சுப் போகும் அந்த
கடை இக்கட்டிலும்,
நீர் எனக்காய் இறந்த
உருவைக் காண்பியும்.
அப்போதே உம்மைப் பார்த்து
கண்ணோக்கி நெஞ்சிலே
நினைக்க ஓடிவந்து
ரட்சிப்பீர் யேசுவே.

49 8, 7, 4. **Calvary. Greenville.**

Sufferings and Death of Christ.

௧ எனக்காகுஞ் சாவின் சாவே!
என் உயிர்க்குஞ் சீவனே!
என்னை மீட்க நீர் கர்த்தாவே
தேவ கோபத் தீயிலே
பாய்ந்ததாலே,
உமக்கே இஸ்தோத்திரம்.

௨ கேட்டுக்கான பாவத்துக்கு
என்னை நீங்கலாக்கவே
உம்மைத் தீயோர் இஷ்டத்துக்கு
நீரே ஒப்புவிக்கவே

Digitized by Google

கள்ளன் போல
கட்டப்பட்டுப் போனீரே.

௩ நான் உபத்திரப்படாமல்
பூரிப்பாய் மகிழவே,
சொந்த இன்பத்தைப் பாராமல்
வாதிப்பாரின் இச்சைக்கே
நீர் இணங்கி
ஆக்கப்பட்டுப் போனீரே.

௪ மீட்பரே, மகா அன்பாக
நீர் புறம்பும் உள்ளேயும்
சீவன் போகும் அளவாக
பட்டபாடனைத்துக்கும்
என்ன சொல்வேன்!
என்றென்றைக்கும் போற்றுவேன்.

50 L. M. Windham. Armley.

Sufferings and Death of Christ.

௧ மரித்த கிறிஸ்தின் ஆவியும்
வதைக்கப்பட்ட தேகமும்
என் ஆவியை உயிர்ப்பித்து,
என்றைக்குங் காக்கத் தக்கது.

Digitized by Google

௨ அவர் விலாவின் காயமும்
பொழிந்த நீரும் ரத்தமும்
என் ஸ்நானமாகிப் பாவமே
இராமற் போக்கத் தக்கதே.

௩ அன்புள்ள யேசுக் கிறிஸ்துவே,
ஒதுக்கம் உம்மிடத்திலே,
விரும்பித் தேடும் என்னையும்
மறைத்துக்கொண்டிரட்சியும்.

௪ என் ஆவி போகும் நேரத்தில்
அதை நீர் தேற்றி மோட்சத்தில்
என்றைக்கும்உம்மைப்போற்றவே
அழைத்துக்கொள்ளுங் கர்த்தரே.

51 C. M. Walsal. Windsor.

"Alas and did my Saviour bleed."

௧ மரித்தாரோ, என் ஆண்டவர்
சிலுவையில் தானே?
மரித்தாரோ, என் ரட்சகர்?
ஆ! எனக்காகவே.

௨ மரத்தில் தூங்கிச் சீவனை
விட்டார் என் யேசுவே,

Digitized by Google

உனக்குத்தான் இப்பலியை
கொடுத்தார் பாவியே.

௩ நான் எண்ணி எண்ணி வருகில்
என் நேசம் ஊக்கமாய்
கொழுந்துவிட்டு நெஞ்சத்தில்
எரியும் பத்தியாய்.

௪ எனக்கு மீட்பு யேசுதாம்
இவ்வருள் செய்தாரே,
நான் என்ன பதில் தரலாம்?
தருமொன்றில்லையே.

௫ என் தேகஞ் செல்வஞ் சுகமும்
என் சீவன் நெஞ்சோடே
உயிருள்ள பலியாகவும்,
ஈவேன் என் யேசுவே.

52 8, 7, 4. Greenville.

"Sweet the moments, rich in blessing."

௧ கிறிஸ்துநாதர் பட்ட காயம்
தோன்றும் நேரம் அருமை,
சுத்தஞ், செல்வம், சற்சகாயம்
சீவன் காட்டுஞ் சிலுவை

Google

என்றும் பார்ப்பேன்,
என்னை மீட்ட யேசுவை.

௨ அன்பு பாயும் ஊற்றைக் கண்டு
ஐந்து காயஞ் சிந்திப்பேன்,
பிதாவோடே சமாதானம்
எனக்கிதால் ஆகுமே,
என்றும் பார்ப்பேன்
என்னை மீட்ட யேசுவை.

௩ அவர் கண்ணுற்றோன்றும் நேசம்
எனக்கேற்ற செல்வமே,
பாடுபட்ட காயத் துக்கம்
ஈயும் அருள் மோட்சமே.
என்றும் பார்ப்பேன்
என்னை மீட்ட யேசுவை.

௪ நேசத் துக்கங் களிப்புடன்
நெஞ்சிற் பலன் கொள்ளுமே,
கறை, குற்றம், பாவக் கடன்,
தீருமென்றிருக்கிறேனே.
அல்லேலூயா!
உம்மால் முத்தி யேசுவே. ஓ.

Digitized by Google

53 7's. Hampton. Wilmot.

Resurrection of Christ.

க தேவ மைந்தனானவர்
யேசு என்னும் ரட்சகர்
தேவ தத்துவத்தினால்
கல்லறையை விட்டதால்,

உ சாபத் துன்பம் பாவையும்
நீக்கிப்போட்டு வாழ்வையும்
மாந்தர்க்கீந்திரட்சித்தார்,
பேயின் மேன்மை தாழ்த்தினார்.

௩ அதனாலே மாந்தரே,
கிறிஸ்துவின் ரட்சிப்பையே
வாஞ்சையுடன் நாடுங்கள்,
அதை ஏற்றிப் பாடுங்கள்.

௪ தேவருக்கிஸ்தோத்திரம்!
அல்லேலூயா! கீர்த்தனம்!
மீட்கப்பட்ட கூட்டமே
உம்மைப் போற்றிக்கொள்ளுமே.

Digitized by Google

54 P. M.

"Sweet spices they brought, &c."

௧ நற்போளத்தைக் கொண்டு வைகறையிலே
கற்பாறைக்கு வந்தாய் முதலோரே

௨ நற்பேர்க்கத் திராணியுடையவன் ஆர்?
உரைத்துக் கலங்கிக் கண்ணீரும் விட்டார்.

௩ என்றாலுங் கற்பாறை திறபட்டதே
இயேசுவும் விட்டுக் காணாப்போனாரே.

௪ மா திகில் அடைந்து சந்தேகப்பட
இதோ கிறிஸ்து வந்து நீர் வாழ்கவென்க,

௫ ஆ! யேசுவே வந்து கடாட்சம் பண்ணும்
என் நெஞ்சமதாவியால் சுத்தஞ் செய்யும்.

௬ இக்கூட்டத்தார் யாரும் மா களிப்புடன்
இஸ்நானம் பெற்றோர்கள் வணங்கச் செய்யும்.

௭ விண்ணோரைப் போல் நாமும் வெள்ளங்கி கொ
ண்டே
துதித்து வணங்கிப் பின்செல்லுவோமே.

௮ மெய்யாய் வருகிறேனென்ற கத்தாவைப் பார்
எக்காளந் தொனிக்க இதோ வருவார். மெய்யாய

55 L. M. Shoel.

Resurrection and Triumph of Christ.

௧ இந்நாளிற் கிறிஸ்து வெற்றியை
அடைந்து வல்ல தீயரை

Google

சிறைப்படுத்திப்போனவர்
இஸ்தோத்திரிக்கப்பட்டவர்.

௨ பசாசு சாவு மயக்கம்
எத்துன்பமும் அன்றைத்தினம்
எழுந்த கிறிஸ்தின் காலிலே
விழுந்து கெட்டுப்போயிற்றே.

௩ அந்நாளிற் சீஷர் கர்த்தரின்
சரீர சேமஞ்செய்தபின்
கிலேசத்தோரின் நெஞ்சுக்கு
சந்தோஷம் பூரிப்பாயிற்று.

௪ மிகுந்த தேற்றல் செய்யவே
எழுந்த யேசுக் கிறிஸ்துவே,
செய்ததற்காக உமக்கு
துதி உண்டாகத்தக்கது.

56 L. M. Duke Street.

Ascension and Triumph of Christ.

௧ இந்நாளில் யேசு தேவனார்
மகத்துவத்தைக் காட்டினார்,
தாரதலம் விட்டேகினார்
புகழை ஏற்கத்தக்கவர்.

Digitized by Google

௨ பசாசின் சத்தியை அவர்
அழித்துப்போட்டுப்போனவர்,
அனைவரும் அதற்குண்டாம்
குரூரத்துக்கு நீங்கலாம்.

௩ சிறையுற்றோரின் மீட்பரே,
சயித்த யேசுக் கிறிஸ்துவே,
பசாசின் கீழே நாங்களும்
இராமற்போக ரட்சியும்.

௪ அதிற் சந்தோஷமாகிறோம், (ம்.
கர்த்தாவின் அன்பைப் போற்றுவோ
திரியேகரே, எப்போதும் நீர்
துதிப்பை ஏற்கக் கடவீர்.

57 L. M. Uxbridge.

Ascension and Reign of Christ.

௧ பரத்திற் போன யேசுவே,
நரர்களுக்கும் விண்ணிலே
இடங் கொடுக்கும் உமக்கு
புகழ் செலுத்தத் தக்கது.

Digitized by Google

உ பிதாவின் ஆசனத்திலே
இருந்து தாழ்மையாரையே
கண்ணோக்கி ஆதரித்து நீர்
இழிந்த எங்களை விடீர்.

௩ பசாசின் மூர்க்கம் எத்தனை
மிகுந்திருந்தும், எங்களை
கெடுத்துப் போடப் பலமே
அதற்கு சற்றும் இல்லையே.

௪ அதில் மகிழ்ந்து, மாந்தர்க்கு
சம்பந்தமான உமக்கு
இஸ்தோத்திரஞ் செலுத்தவோம்,
உம்மாற் சயங்கொண்டாடுவோம்.

58 L. M. Uxbridge.

Ascension, Triumph, and Reign of Christ.

௧ மிகுந்த கஸ்தியுள்ளோரே,
விளங்கிடுஞ் சந்தோஷமே
மகா விசேஷமானது,
அதை விரும்பத்தக்கது.

உ தரையில் வைக்கப்பட்டவர்
சயித்துச் சீவனுளவர்,

Digitized by Google

மகிழ்ச்சியோடே தோத்திரி,
என் உள்ளமே அன்பாய்த் துதி.

௩ அவர் மரித்த போது பேய்
அநேகமாய் மகிழ்ந்ததே,
அவர் எழுந்த பொழுது
அது பயந்ததிர்ந்தது.

௪ எழுந்த மா இரட்சகர்
பகைஞரை ஒடுக்கினர்,
சயத்தைக் கொண்டு ஏறினர்,
எதிர்க்க வல்லவர்கள் ஆர்?

௫ உயர்ந்த மேன்மையாந் தலம்
இப்போதவரின் ஆசனம்,
அவரைப் பற்றினோர் அங்கே
செல்வார்கள், மா சந்தோஷமே!

59 7's. Lancaster.

Ascension and Reign of Christ the Church's joy.

௧ மீட்கப்பட்ட கூட்டமே,
உங்கள் மீட்பர் பேரிலே
பாடி வாழ்த்தல் செய்யுங்கள்,
மீட்ட அன்பைச் சொல்லுங்கள்.

௨ பாவத்தாலே கஸ்தியை
பட்டோரே, இரட்சிப்பை
ஏற்றுங்கள்-நல் யேசுவே
மீட்பதற்கிறந்தாரே.

௩ அந்தகாரப் பேயினை
கிறிஸ்து தாழ்த்தி எங்களை
அதினின்றிரட்சித்தார்,
மீட்க யேசு தேவனார்.

௪ அதால் மகிழ்வுடனே
போற்றிப் பாட மக்களே,
தூதரோடே கூடுங்கள்,
மீட்பையே உயர்த்துங்கள்.

60 L. M. Rothwell.

Christ's triumph the Christian's joy.

௧ மகிழ், கத்தாவின் கூட்டமே!
மகா கம்பீரமாகவே,
பரத்துக்குன் அதிபதி
எழுந்துபோனதால் துதி.

௨ பரத்தின் சேனை ஓசையாய்
கொண்டாடி மா வணக்கமாய்

Google

பணிந்து யேசு சுவாமிக்கு
வணக்கத்தைச் செய்கின்றது.

௩ நரர்களே, விண்ணோரைப் போல்
சந்தோஷமாகப் பாடுங்கள்!
என்றைக்குமுள்ள வாழ்த்தலே
கத்தாவினுக்குண்டாகவே.

௪ உன்னதமான யேசுவே!
வெற்றிசிறந்த தேவனே!
இடைவிடாது உமக்கே
இஸ்தோத்திரம் உண்டாகவே.

61 L. M. Wells. Portugal.

Union with Christ.

௧ ஆ! யேசுவே நான் வானத்தில்
உயர்த்தப்பட்டிருக்கையில்
எல்லாரையும் என் பக்கமே
இழுத்துக்கொள்வேனென்றீரே.

௨ என் மனசை இழுக்கையில்
அது இக்கெட்ட உலகில்
உள்ளானதை அரோசிக்கும்,
அனந்த நன்மையிற் படும்.

௩ தராதலத்தில் உம்முடன்
உபத்திரப்படாதவன்
உம்மோடு விண்ணில் வாழ்ந்திரான்,
சகிப்பவன் சந்தோஷிப்பான்.

௪ மகா தலத்தில் தேவரீர்
இருப்பிடம் உண்டாக்கினீர்,
அங்கே வசிக்கும் நீதியர்
இக்கட்டும் நோவுமற்றவர்.

62 C. M. Harborough. Coronation. "

Christ crowned as Lord of all.

"All hail the power of Jesus' name"

௧ போற்றுங்கள் யாரும்! யேசுவின்
நாமத்தின் மேன்மையை
தூதர்கள் கூறிக் கர்த்தரின்
மேற்சூட்டும்முடியை.

௨ சூட்டும் இரத்தச் சாட்சிகாள்
ஸ்தேவானின் கூட்டமே,
துதிசெய்தூன் மா நாயனார்
மேற்சூட்டும்முடியை.

௩ தாவீதின்வேரும் வித்துமாம்
தெய்வீக யேசுவை

Digitized by Google

அன்பரே போற்றி யெகோவா
மேற்சூட்டும்முடியை.

ச இஸ்ரவேலே, நீ கர்த்தரால்
ரட்சிப்படைந்ததை
சிந்தித்துக்கொண்டும்மானுவேல்
மேற்சூட்டும்முடியை.

ரு சிற்றின்பப் பாவிகாள், நீர்தான்
உலோக இச்சையை
முழுதும் நீக்கி எம்பிரான்
மேற்சூட்டும்முடியை.

சா பூவின் சிருட்டிக்கோத்திரம்
யாவும் மகிமையை
செலுத்தி எங்கள் மெய்ப் பரன்
மேற்சூட்டும்முடியை. *Rockwin*

63 P. M. Luther's Hymn.

Christ the True Way.

க கடாட்சமுள்ள யேசுவே,
என் நெஞ்சை நீர் நன்றாக
சந்தோஷிப்பித்து, என்னிலே
மிகுந்த ஊக்கமாக
தெய்வீக அன்பை ஊற்றிய

தயையினாலே உத்தம
புகழ்ச்சிசொல்வேனாக.
உ கதிக்குப் போகும் மார்க்கம் நீர்,
அதற்குள்ளான யாரும்
தப்பார்கள் - கைகொடுக்கிறீர்,
பிரிந்துள்ளோர் எல்லாரும்
அழிந்துபோகுவார்களே,
நடத்துஞ் சுவாமி உம்மிலே
நிலைக்க என்னை ஆளும்.
ங யதார்த்தம் நீர், நான் உம்மையே
தெரிந்துகொண்டிருப்பேன்,
பொருளும் சாரமும் நீரே,
பொய்யானதை வெறுப்பேன்.
உம்மாலே பாக்கியம் வரும், [கும்
மெய்யே! என் நெஞ்சை என்றைக்
உமக்கு நான் கொடுப்பேன்.

64 S. P. M. Dalston.

Christ the Light of men.

க கர்த்தாவாம் யேசுவே,
அடியார் நெஞ்சிலே
புதிய சீரைச் சிட்டியும்,
பெரு வெளிச்சமாய்

Digitized by Google

விளங்கி நித்தமாய்
அதிலே பிரகாசியும்.

௨ உம்மாலே ஈவெல்லாம்
பூரணமாய் உண்டாம்,
பிதாவின் சாயலாய் நீரே,
எல்லாஞ் சீராக்கிறீர்,
முற்றுமே மாற்றுவீர்,
என்நன்மையும் அளிப்பீரே.

௩ பெரு வெளிச்சமே!
அனுதி பொழுதே!
நாங்கள் உம்மாலே மிகவும்
சீர்ப்படக் கூடுமே.
நீர் எங்கள் நெஞ்சிலே
தினமும் ஒளி அருளும்.

௪ அடியார் பத்தியாய்
உமக்கு மேன்மையாய்
வெளிச்சத்தில் நடக்கவே,
நீர் உமக்கேற்கவும்
புதுக் குணத்தையும்
மென் மேற் கொடுப்பீராகவே.

Digitized by Google

சிறைப்படுத்திப்போனவர்
இஸ்தோத்திரிக்கப்பட்டவர்.

௨ பசாசு சாவு மயக்கம்
எத்துன்பமும் அன்றைத்தினம்
எழுந்த கிறிஸ்தின் காலிலே
விழுந்து கெட்டுப்போயிற்றே.

௩ அந்நாளிற் சீஷர் கர்த்தரின்
சரீர க்ஷேமஞ் செய்தபின்
கிலேசத்தோரின் நெஞ்சுக்கு
சந்தோஷ பூரிப்பாயிற்று.

௪ மிகுந்த தேற்றல் செய்யவே
எழுந்த யேசுக் கிறிஸ்துவே,
செய்ததற்காக உமக்கு
துதி உண்டாகத்தக்கது.

56 L. M. Duke Street.

Ascension and Triumph of Christ.

௧ இந்நாளில் யேசு தேவனார்
மகத்துவத்தைக் காட்டினார்,
தராதலம் விட்டேகினர்
புகழை ஏற்கத்தக்கவர்.

Google

௨ பசாசின் சத்தியை அவர்
அழித்துப்போட்டுப்போனவர்,
அனைவரும் அதற்குண்டாம்
குரூரத்துக்கு நீங்கலாம்.

௩ சிறையுற்றோரின் மீட்பரே,
சயித்த யேசுக் கிறிஸ்துவே,
பசாசின் கீழே தாங்களும்
இராமற்போக ரட்சியும்.

௪ அதிற் சந்தோஷமாகிறோம், (மீ.
கர்த்தாவின் அன்பைப் போற்றுவோ
திரியேகரே, எப்போதும் நீர்
துதிப்பை ஏற்கக் கடவீர்.

57 L. M. Uxbridge.

Ascension and Reign of Christ.

௧ பரத்திற் போன யேசுவே,
நரர்களுக்கும் விண்ணிலே
இடங் கொடுக்கும் உமக்கு
புகழ் செலுத்தத் தக்கது.

 Digitized by Google

௨ பிதாவின் ஆசனத்திலே
இருந்து தாழ்மையாரையே
கண்ணோக்கி ஆதரித்து நீர்
இழிந்த எங்களை விடீர்.

௩ பசாசின் மூர்க்கம் எத்தனை
மிகுந்திருந்தும், எங்களை
கெடுத்துப் போடப் பலமே
அதற்கு சற்றும் இல்லையே.

௪ அதில் மகிழ்ந்து, மாந்தர்க்கு
சம்பந்தமான உமக்கு
இஸ்தோத்திரஞ் செலுத்துவோம்,
உம்மாற் சயங்கொண்டாடுவோம்.

58 L. M. Uxbridge.

Ascension, Triumph, and Reign of Christ.

௧ மிகுந்த கஸ்தியுள்ளோரே,
விளங்கிடுஞ் சந்தோஷமே
மகா விசேஷமானது,
அதை விரும்பத்தக்கது.

௨ தரையில் வைக்கப்பட்டவர்
சயித்துச் சீவனானவர்,

Digitized by Google

மகிழ்ச்சியோடே தோத்திரி,
என் உள்ளமே அன்பாய்த் துதி.

௩ அவர் மரித்த போது பேய்
அநேகமாய் மகிழ்ந்ததே,
அவர் எழுந்த பொழுது
அது பயந்திர்ந்தது.

௪ எழுந்த மா இரட்சகர்
பகைஞரை ஒடுக்கினர்,
சயத்தைக் கொண்டு ஏறினர்,
எதிர்க்க வல்லவர்கள் ஆர்?

௫ உயர்ந்த மேன்மையாந் தலம்
இப்போதவரின் ஆசனம்,
அவரைப் பற்றினோர் அங்கே
செல்வார்கள், மா சந்தோஷமே!

59 7's. Lancaster.

Ascension and Reign of Christ the Church's joy.

௧ மீட்கப்பட்ட கூட்டமே,
உங்கள் மீட்பர் பேரிலே
பாடி வாழ்த்தல் செய்யுங்கள்,
மீட்ட அன்பைச் சொல்லுங்கள்.

உ பாவத்தாலே கஸ்தியை
பட்டோரே, இரட்சிப்பை
வற்றுங்கள்-நல் யேசுவே
மீட்பதற்கிறந்தாரே.

ங அந்தகாரப் பேயினை
கிறிஸ்து தாழ்த்தி எங்களை
அநினின்றிரட்சித்தார்,
மீட்க யேசு தேவனுர்.

ச அதால் மகிழ்வுடனே
போற்றிப் பாட மக்களே,
தூதரோடே கூடுங்கள்,
மீட்பையே உயர்த்துங்கள்.

60 L. M. Rothwell.

Christ's triumph the Christian's joy.

க மகிழ், கத்தாவின் கூட்டமே!
மகா கம்பீரமாகவே,
பரத்துக்குன் அதிபதி
எழுந்துபோனதால்த் துதி.

உ பரத்தின் சேனை ஓசையாய்
கொண்டாடி மா வணக்கமாய்

Digitized by Google

பணிந்து யேசு சுவாமிக்கு
வணக்கத்தைச் செய்கின்றது.

௩ நரர்களே, விண்ணோரைப் போல்
சந்தோஷமாகப் பாடுங்கள்!
என்றைக்குமுள்ள வாழ்த்தலே
கர்த்தாவினுக்குண்டாகவே.

௪ உன்னதமான யேசுவே!
வெற்றிசிறந்த தேவனே!
இடைவிடாது உமக்கே
இஸ்தோத்திரம் உண்டாகவே.

61 L. M. Wells. Portugal.

Union with Christ.

௧ ஆ! யேசுவே நான் வானத்தில்
உயர்த்தப்பட்டிருக்கையில்
எல்லாரையும் என் பக்கமே
இழுத்துக்கொள்வேனென்றீரே.

௨ என் மனசை இழுக்கையில்
அது இக்கெட்ட உலகில்
உள்ளானதை அரோசிக்கும்,
அனந்த நன்மையிற் படும்.

ங தராதலத்தில் உம்முடன்
உபத்திரப்படாதவன்
உம்மோடு விண்ணில் வாழ்ந்திரான்,
சகிப்பவன் சந்தோஷிப்பான்.

ச மகா தலத்தில் தேவரீர்
இருப்பிடம் உண்டாக்கினீர்,
அங்கே வசிக்கும் நீதியர்
இக்கட்டும் நோவுமற்றவர்.

62 C. M. Harborough. Coronation.

Christ crowned as Lord of all.

"All hail the power of Jesus' name"

க போற்றுங்கள் யாரும்! யேசுவின்
நாமத்தின் மேன்மையை
தூதர்கள் கூறிக் கர்த்தரின்
மேற்சூட்டும்முடியை.

உ சூட்டும் இரத்தச் சாட்சிகாள்
ஸ்தேவானின் கூட்டமே,
துதிசெய்துன் மா நாயனார்
மேற்சூட்டும்முடியை.

ங தாவீதின்வேரும் வித்துமாம்
தெய்வீக யேசுவை

Digitized by Google

அன்பரே போற்றி யெகோவா
மேற்சூட்டும்முடியை.

௪ இஸ்ரவேலே, நீ கர்த்தரால்
ரட்சிப்படைந்ததை
சிந்தித்துக்கொண்டிம்மானுவேல்
மேற்சூட்டும்முடியை.

௫ சிற்றின்பப் பாவிகாள், நீர்தான்
உலோக இச்சையை
முழுதும் நீக்கி எம்பிரான்
மேற்சூட்டும்முடியை.

௬ பூவின் சிருட்டிக்கோத்திரம்
யாவும் மகிமையை
செலுத்தி எங்கள் மெய்ப் பரன்
மேற்சூட்டும்முடியை. Rockwood

63 P. M. Luther's Hymn.

Christ the True Way.

௧ கடாட்சமுள்ள யேசுவே,
என் நெஞ்சை நீர் நன்றாக
சந்தோஷிப்பித்து, என்னிலே
மிகுந்த உருக்கமாக
தெய்வீக அன்பை ஊற்றிய

ம

தயையினாலே உத்தம
புகழ்ச்சிசொல்வேனாக.

உ கதிக்குப் போகும் மார்க்கம் நீர்,
அதற்குள்ளான யாரும்
தப்பார்கள்-கைகொடுக்கிறீர்,
பிரிந்துள்ளோர் எல்லாரும்
அழிந்துபோகுவார்களே,
நடத்துஞ் சுவாமி உம்மிலே
நிலைக்க என்னை ஆளும்.

ங யதார்த்தம் நீர், நான் உம்மையே
தெரிந்துகொண்டிருப்பேன்,
பொருளும் சாரமும் நீரே,
பொய்யானதை வெறுப்பேன்.
உம்மாலே பாக்கியம் வரும், [கும்
மெய்யே! என் நெஞ்சை என்றைக்
உமக்கு நான் கொடுப்பேன்.

64 S. P. M. Dalston.

Christ the Light of men.

க கர்த்தாவாம் யேசுவே,
அடியார் நெஞ்சிலே
புதிய சீரைச் சிட்டியும்,
பெரு வெளிச்சமாய்

Digitized by Google

விளங்கி நித்தமாய்
அதிலே பிரகாசியும்.

௨ உம்மாலே ஈவெல்லாம்
பூரணமாய் உண்டாம்,
பிதாவின் சாயலாய் நீரே,
எல்லாஞ் சீராக்கிறீர்,
முற்றுமே மாற்றுவீர்,
எந்நன்மையும் அளிப்பீரே.

௩ பெரு வெளிச்சமே!
அறுதி பொழுதே!
நாங்கள் உம்மாலே மிகவும்
சீர்ப்படக் கூடுமே.
நீர் எங்கள் நெஞ்சிலே
தினமும் ஒளி அருளும்.

௪ அடியார் பத்தியாய்
உமக்கு மேன்மையாய்
வெளிச்சத்தில் நடக்கவே,
நீர் உமக்கேற்கவும்
புதுக் குணத்தையும்
மென் மேற் கொடுப்பீராகவே.

Digitized by Google

65 7's. German Air.

Christ the Light of men.

க என் மெலிந்த மனதை
திடமாக்கிக்கொண்டிரும்,
தாகிக்கும் என் உள்ளத்தை
தேற்றி ஆசீர்வதியும்,
அருளைக் கடாட்சியும்,
விரைவாய் வந்தருளும்.

உ சூரியன் உதிக்கையில்
அந்தகாரம் நீங்குமே,
நீர் என்னிற் தோன்றுமையில்
விசனம் பிறக்குமே.
கிருபையின் கிரணம்
ஆத்துமாவுக்கின்பமாம்.

௩ பாவமான இருளை
நீக்கிப் பிரகாசியும்,
தேவ சோதியால் என்னை
நிறைவாக்கியருளும்,
பட்டப் பகல் வரைக்கும்
பெருஞ் சோதியாய் இரும்.

66 L. M. Dresden. Eaton.

Christ the Light and Joy of men.

க ஆ! உலகத்தின் ஒளியாய்
உதித்த யேசுக் கிறிஸ்தவே,

Digitized by Google

இருள் அடைந்த மாந்தர்க்காய்
பிறந்த சீவ சோதியே,
எங்களிற் பிரவேசியும்,
பிரகாசமாக்கியருளும்.

உ சொல்லுக்கெட்டாத அன்பினால்
தேவ சொரூபமானவர்
இப்பூமியிற் பிறந்ததால்
நிற்பந்தமுள்ள மனிதர்
மகிழ்ச்சியாகப் பாடவே
இடம் உண்டாக்கப்பட்டதே.

ஈ கர்த்தர் இவ்வளவன்பினால்
காண்பித்த நல்ல யோசனை
நம்மிற் பலிக்க அதினால்
குழந்தைக்கேற்ற சிந்தனை
நமக்குண்டாகும்படிக்கே
இரங்குந் தேவ சுதனே.

67 P. M. Luther's Hymn.

Christ the Bread and Water of life.

க தெய்வீக அன்னமாகும் நீர்,
உம்மாலே ஆசை ஆறும்,
வஞ்சகமான லோகத்தில்
என் நெஞ்சம் உம்மை நாடும்
பிதாவின் சுவாமி மன்றே வ!

Digitized by Google

என்னைப் பொல்லாத இச்சைக்கே
விலக்கிக் காத்துக்கொள்ளும்.

௨ உயிர் பொருந்தும் ஊற்று நீர்!
என் தாகம் உம்மால்த் தீரும்,
நிறைந்த ஈவுண்டாக்கினீர்,
அது எப்போதும் ஊறும்.
என்னையும் ஆற்றிப் போஷித்து
நற்சீரைத் தந்து மோட்சத்து
சுகிர்தத்தை உண்டாக்கும்.

68 125 Hymn C. M. Dedham.

Christ the Way, Truth, and Life.

௧ மெய்வழி நீரே யேசுவே,
நீர் பாவ நாசராம்.
பிதாவிடத்திற் சேர்வதே
உமதிரக்கமாம்.

௨ சுத்த பிதாவிடத்திலே
செல்பவர் யாவரும்
உமது வழியாகவே
அன்பாய்ச் சேரவேண்டும்.

௩ சத்தியம் நீரே, உம்து
வார்த்தை மெய்ஞானமும்

நெஞ்சில் உண்டாக்கிச் சகல
கறை அகற்றிடும்.
௪ ஜீவனும் நீர்-உம்மை நம்பும்
தேவ பத்தர்களை
மரணந் நரகந் தானும்
அணுக மாட்டாதே.
௫ நீர் வழி, சத்தியமும், ஜீவன்
வழியைக் காட்டிடும்,
சத்தியத்தைப் போதித்தென்றும்
சாகாச்ஜீவன் தாரும்.

69 P. M. Luther's Hymn.

Fullness of Christ.

௧ என் மேய்ப்பராய் இருக்கிறீர்,
என் மேய்ச்சலும் நீர் தாமே,
சிறையிற்போன என்னை நீர்
அன்பாக மீட்டோராமே,
இவ்வாறு மீண்டும் என்றைக்கும்
அலையவே விடாதிரும்,
உமக்குள்ளானேன் நானே,
௨ இராவில் நீர் நட்சத்திரம்,
இருட்டிலே விளக்கு,

Digitized by Google

குறைவில் நீர் என் பொக்கிஷம்,
என் தாழ்விலே உயர்ச்சி,
கசப்பிலே மா ரசமும்,
இளைத்துப்போம் என் மனமும்
பெலக்க நீர் என் சத்தி.

௩ உயிர் தரும் விருட்சம் நீர்,
என் ஆத்துமா பிழைக்கும்,
மகிழ்ச்சிக்கேற்ற சோலை நீர்,
அமிழ்தமே கிடைக்கும்.
வருத்தமுள்ள பள்ளத்தில்
என் யேசுவால் என் நெஞ்சத்தில்
சம்பூரணம் தழைக்கும்.

௪ நிகரில்லாத சோதியே!
எப்போதும் பேசினாலும்,
பொருளடங்கவில்லையே,
விரும்பிக்கொள்ளும் யாவும்
உம்மால் உண்டாகும் யேசுவே,
மா தயவுள்ள நேசரே,
என்றைக்கும் என்னை ஆளும்.

Digitized by Google

70 P. M.

Fullness of Christ.

க யேசுநாதரே,
என் சுகிர்தமே,
நீர் என் பூரிப்பென்றென்றைக்கும்
உம்மிற் பாக்கியந் தழைக்கும்,
உம்மை நோக்குவேன்,
என்னைச் சேருமேன்.

உ நல் மறைவின் கீழ்
நான் ஒதுங்க நீர்
என்னைக் காத்துக்கொள்வீராக,
சாத்தானை அழிப்பீராக,
அப்போதேழையேன்
தப்பி மீளுவேன்.

௩ தேவரீருக்கு
மேன்மை தக்கது,
உம்முடைய சோதியாலே
நான் பிரகாசமானதாலே
என்றுந் தாழ்மையேன்
உம்மைப் பற்றுவேன்.

Digitized by Google

71 8, 7, 4. Littleton. Smyrna.

Aid and sanctification from Christ implored.

க இளைருக்கு மா பெலனும்
துக்கப்பட்டிருக்கிற
பாதகர்க்கு மா திடனும்
அன்புள்ளோருமாகிய
எசமானே,
எனக்கூக்கம் அளியும்.

உ என் இதயஞ் சென்ம பாவம்
ஊறும் ஊற்றேயுளது,
என்னுடைய முழுச் சுபாவம்
தீமையால் நிறைந்தது.
பாவத்தோடு
நான் பிறந்தோன் யேசுவே.

௩ உம்முடைய ரத்தத்தாலே
குற்றம் நீங்கப் புரியும்,
என்னை உமதாவியாலே
சுத்திகரித்தருளும்.
ஆ! கர்த்தாவே,
என்னைத் தேற்றி ஆண்டிடும்.

Digitized by Google

௪ என்னுடைய நெஞ்சில் வந்து
தங்கும் என் சகாயனே,
அதால் துக்கத்தை மறந்து
வெற்றியை அடைவேனே.
உமக்கேற்ற
வாழ்த்தலை நான் சொல்லுவேன்.

72 8, 7, 4. Calvary. Greenville.

Aid from Christ implored.

க யேசு கர்த்தரே, பசாசை
எங்கள் கால்களின் கீழாய்
நீர் நசுக்கி உம்முடைய
ஆட்டுக்கூட்டத்துக்கன்பாய்
உணக்கர்ந்து
ஆறுதலைச் செய்திடும்.

உ நல்ல பாதையில் நடந்து
போக எங்களை நீரே
கைகொடுத்தணைத்துக்கொண்டு
ஆதரிக்க வேண்டுமே.
எந்த மோசம்
தோன்றினாலும் ரட்சியும்.

Digitized by Google

௫ அன்பினாலே எவப்பட்டு
உம்மைப் பற்றிக்கொள்ளவே
உமதாவியின் பலத்தை
தாரும் நேச யேசுவே,
எங்கள் நெஞ்சை
செம்மையாக்கிக்கொண்டிரும்.

௬ அதினாலே எங்கள் நெஞ்சும்
எங்கள் வாயும் நித்தமே
உமக்கேற்ற வாழ்த்தல் சொல்லும்,
உம்மைப் பாடும் யேசுவே.
அதே எங்கும்
தோன்ற வேண்டுங் கீர்த்தனம்.

73 S. M. Shirland. St. Thomas.

Prayer for divine aid.

௧ ஜெபத்தின் தாகத்தை
என் நெஞ்சில் அருளும்,
உலோக கெட்ட பாசத்தை
என் மனதில் எடும்.

௨ உலோக சிந்தையால்
கலக்கமடையேன்,

Digitized by Google

மோட்சானந்தத்தை உண்மையால்
நான் தேடக் கடவேன்.

௩ எனக்குத் துணையாய்
சீக்கிரம் வந்திடும்.
நான் அலையாதபடிக்காய்
நிலைக்க அருளும்.

௪ தேவன்பின் பாசத்தால்
கட்டுண்டு என்றைக்கும்
உம்மை என் முழு மனதால்
பின்பற்றச் செய்திடும்.

74 7, 6. Missionary.

Pardon and sanctification.

௧ அருளின் சோதியான
அன்புள்ள யேசுவே,
நரரின் சீவனான
உயர்ந்த நாயனே,
என் பாவத்தை மன்னித்து
சந்தோஷத்தைக் கொடும்,
சினத்தை நீக்கிவிட்டு
என்மேல் இரங்கிடும்.

Digitized by Google

உ நீர் தேவ ஆவியாலே
மகிழ்வும் வன்மையுந்
தந்தென்னிலே அன்பாலே
எல்லாம் நடப்பியும்.
என் நெஞ்சினாலே கெட்டோன்,
என் சென்ம பாவத்தால்
நன்மை யாதொன்றுமற்றேன்,
பொல்லாங்குக்குள்ள ஆள்.

௩ தயாபரா! ரட்சித்து
துற்செய்கை பாவையும்
என் ஆத்துமாவை விட்டு
விலக்கிப் போக்கிடும்.
என் நெஞ்சு சுத்தமாக
நல் வார்த்தைக்கேற்கவே
நடக்கத்தக்கதாக
இரங்குங் கத்தரே.

75 L. M. Wells. Hebron.

Dependence on the Spirit acknowledged:

௧ தேவாவியே, என் நெஞ்சை நீர்
திருப்பிப் புதிதாக்கிநீர்,

Digitized by Google

என்னென்ன நன்மை என்னிலே
உண்டோ உம்மாலேதான் உண்டே.

௨ உம்மால் கத்தாவை அறிவேன்,
உம்மால் பிதாவேயென்கிறேன்,
நீர் என்னைச் சத்தியத்திலே
முடியவுந் தற்காப்பீரே.

௩ என் பாதகங்கள் யாவையும்
நீக்கி, என் நெஞ்சைக் கழுவும்,
என் விசுவாசம் நேசமும்
மென்மேல் வளரச் செய்திடும்.

௪ இவ்வருள் செய்யும் உமது
அளவிறந்த அன்புக்கு
இப்போதெப்போதும் உமக்கே
இஸ்தோத்திரம் உண்டாகவே.

76 8, 7, 4. Littleton. Sicilian Hymn.

Prayer for victory through the Spirit.

௧ எங்களைப் பிதாவிடத்தில்
முழுப் பத்தியோடேயும்
சேரப்பண்ணி ஆத்துமாவில்
ஆவியே தரித்திடும்.

Digitized by Google

அதினாலே திடன் அன்பும்,
நம்பிக்கையும் பெருகும்.

௨ நாங்கள் வழுவாதிருக்க
பண்ணும் வல்ல ஆவியே,
லோக மாயத்துக்கு நீங்க
அருளை அளிப்பீரே.
நாங்கள் நித்த நித்தமும்
வெல்லக் கட்டளையிடும்

௩ சாகுங் காலம் வர நாங்கள்
நித்திய மகிழ்ச்சியாய் [கள்
வாழ்வோம் நாங்கள் மோட்சவான்
என்பதை விசேஷமாய்
எண்ணும் பலம் நெஞ்சிலே
தாரும் நல்ல ஆவியே.

77 C. M. Peterborough. Mear.

The Spirit implored to enlighten and sanctify.

௧ தேவாவி வாரும் எங்களை
ஏவிவிட்டருளும்,
சிநேகம் சீவன் பெலனை
எங்களுக்களியும்.

Digitized by Google

௨ வானப் புறுவே! எங்களில்
இறங்கித் தங்கிடும்,
இருளை நீக்கி மனதில்
வெளிச்சங் காட்டிடும்.

௩ நீர் சோதியாகத் தோன்றினால்
கத்தாவை அறிவோம்.
தேவன்பின் பூரணத்தினால்
பரத்திற் சேருவோம்.

78 S. M. Shirland. Dover.

Prayer for the Spirit to reveal Christ.

௧ வாரும் நல் ஆவியே,
யேசுவைக் காண்பியும்,
அவரை வெளியாக்கியே
சாட்சியால் ரூபியும்.

௨ ரத்தத்தால் தெளித்து
யேசுவின் தயவில்
என் பங்கையே காண்பிப்பது
உமது நற்செயல்.

௩ யாவரும் அவரை
அறியும் படிக்கே

Digitized by Google

அவர் மிகுந்த அருளை
காட்ட இறங்கவே.
௪ எல்லாருக்கும் அன்பால்
சுத்தம் ரட்சிப்பையும்
தந்து பலத்த சாட்சியால்
ரூபிக்க அருளும்.

79 **L. M.** **Portugal.**

Prayer for the Spirit to convert the world.

௧ இறங்குந் தேவ ஆவியே,
தொழும்பர் ஆத்துமாவிலே
பரத்தின் நன்மையைக் கொடும்,
மிகுந்த அன்பை ஊற்றிடும்.

௨ உம்மாலே தோன்றுஞ் சோதியால்
எத்தேசத்தாரையும் அன்பால்
சம்பந்தமாக்கி யாவர்க்கும்
நம்பிக்கையைக் கொடுத்திடும்.

௩ பரத்தின் தூய தீபமே,
உம்மாலே யேசுக் கிறிஸ்துவை
எல்லாரும் பற்றிக்கொள்ளவும்
துதிக்கவுஞ் செய்தருளும்.

Digitized by Google

௪ எல்லாரும் யேசுக் கிறிஸ்துவை
அல்லாமல் வேறு மீட்பரை
பற்றாமல் நல்ல உண்மையும்
புகழ்வுங் காட்டச் செய்திடும்.

௫ விழிப்புண்டாக்கி மோட்சத்தை
குறித்த நல்ல புத்தியை
எல்லோர்க்கும் அன்பாய் அளியும்,
எளிஞரை இரட்சியும்.

௬ களிப்பிலுந் தவிப்பிலும்
பிழைப்பிலும் இறப்பிலும்
எப்போதும் ஊக்கமாகவே
இருக்கச் செய்யும் ஆவியே.

80 8, 7, 4. Greenville. Zion.

Presence and aid of the Spirit implored.

௧ வாருந் தேவ ஆவி வாரும்,
எங்கள் ஆத்துமாவிலே
தேவ சீவ நன்மை தாரும்
வாருஞ் சுத்த ஆவியே,
ஞான தீபம்,
உம்மால்த்தானே ஆகுமே.

௨ எங்கள் நெஞ்சில் நல்ல புத்தி
தேவ பத்தி தோன்றவே
அதைத் நீர் நன்றாய்த் திருத்தி
தப்புச் சிந்தையானதை
மாற்ற வாரும்,
நல்ல தேவ ஆவியே.

௩ மோட்ச மார்க்கத்தைக் குறித்து
எவ்வகைவிரோதமும்
நீங்க என்னை நீர் பிடித்து
வல்லனாகச் செய்திடும்.
கால் முடங்கி
போகில் நீர் இரட்சியும்.

௪ நெஞ்சும் என்னிலே கலங்கி
நாயனே இரட்சியும்
என்று கெஞ்சும் போதிரங்கி
என்னைத் தேற்றிக்கொண்டிடும்.
துன்பம் போக
நீர் சகாயராய் இரும்.

81 C. M. Bangor. Reading.

Presence and aid of the Spirit implored.

௧ நல் ஆவியே, நான் பாழ் நிலம்!
இரக்கமாய் இரும்,

Digitized by Google

இயேசுவின் நிமித்தியம்
என்னிற் பிரகாசியும்.
௨ இருள் பகை விரோதமும்
உம்மாலே நீங்கவே
நற்புத்தி அன்பு சாந்தமும்
உண்டாக்கும் ஆவியே.
௩ என் மனதை இரக்கமாய்
சுத்திகரித்திடும்.
அதை என் மீட்பர் சாயலாய்
திருத்தி ஆண்டிடும்.
௪. சத்தியமுள்ள மார்க்கத்தில்
நிலைமையாகவும்
நடக்கப்பண்ணி மோட்சத்தில்
என் ஆவியை எடும்.

82 C. M. Stephens.

Prayer for light and comfort from the Spirit.

௧ தேவாவியே, இரக்கமாய்
என்னிற் பிரகாசியும்,
என் நெஞ்சின் இருளை அன்பாய்
விலக்கி ரட்சியும்.
௨ யேசுவின் திரு முகத்தை
எனக்குக் காண்பியும்.

Digitized by Google

நான் உம்முடைய மனதை
உணரப்பண்ணிடும்.
௩ அனேக காலம் பாவத்தில்
நான் கேடாய்ப் போனேனே.
அதைக் கர்த்தாவே நீக்கிடில்
உம்மிற் களிப்பேனே.
௪ என் துக்கப்படும் மனதை
சந்தோஷிப்பித்திடும்,
என் காயப்பட்ட உள்ளத்தை
சவுக்கியமாக்கிடும்.
௫ தேவாவியே, இரக்கமாய்
என் நெஞ்சில் தங்கிடும்,
பசாசின் அதிகாரத்தை
விலக்கி ஆண்டிடும். Muller

83 L. M. Old Hundred.

Guidance and sanctification from the Spirit.

௧ கர்த்தாவின் சுத்த ஆவியே,
நீர் எங்கள் ஆத்துமாவிலே
இறங்கிப் பரசோதியாய்
நம்மை நடத்துந் தயவாய்.
௨ உம்மாலே நாங்கள் சீர்ப்பட
கண் நெஞ்சும் முற்றுந் தெளிய

Digitized by Google

நற்குணம் நடை யாவையும்
திருத்தமாய்ச் செய்தருளும்.
௩ நீர் தெளிவிக்கும் வார்த்தையே
எப்போதும் எங்கள் நெஞ்சிலே
கொழுந்தெரியப் பெலனும்
நற்கிருபையும் அளியும்.
௪ பிதாக் குமாரன் ஆவியே,
திரியேக தெய்வம் உம்மையே
பணிந்து போற்ற எப்போதும்
நல் வாக்கை நமக்கருளும்.

84 C. M. St. Martin's.

"Come Holy Spirit heavenly dove."

க புறாவைப் போன்ற ஆவியே,
உயிர்ப்பிக்க வந்திடும்,
உம்மில் அன்பின் சுவாலையே
கொழுந்து செய்திடும்.
உ பூமியின் அற்ப பொருளை
ஆசித்தழுந்தினோம்,
நாமாக மோட்ச அருளை
அடைய அறியோம்.

Digitized by Google

௩ அடியார் கீதம் விருதா,
எங்கள் முயற்சியேன்!
நாவால் வீண் சொல்லு ஓசன்று,
விண்ணப்பமும் பாழ்தான்.
௪ நல் நேசரே, இச்சீரில் நாம்
என்றும் இருக்கவோ!
கல்நெஞ்சுருக்க யேசுதாம்
அன்புள்ளோர் அல்லவோ!
௫ புறாவைப் போன்ற ஆவியே,
உயிர்ப்பிக்க வந்திடும்,
சுத்தாங்க அன்பின் பெலனே,
பொழிந்தால் சிவனும். L.

85 204 Hymn 7's. Pleyel's Hymn.

Light and comfort from the Spirit.

௧ பரிசுத்த ஆவியே,
பாவ இருள்போக்கியே
என் இருதயத்திலே
காலப் பண்ணுஞ் சோதியே.
௨ யேசுவின் நல் முகத்தை
தரிசனம் பண்ணவே
அருளி நல் உண்மையை
காட்டுஞ் சுத்த ஆவியே.

Digitized by Google

௩ சாத்தான் என்னை ஆண்டது,
பாவம் என்னில் மிஞ்சிற்று,
என்னைச் சுத்தம்பண்ணியே
ஆண்டுகொள்ளும் ஆவியே.

௪ தேவ களிப்புடனே,
என்னை நிறைவாக்கியே,
நொருங்குண்ட நெஞ்சையும்
ஆற்றித் தேற்றியருளும்.

௫ அடியேனின் நெஞ்சிலே
வாசம்பண்ணி நீர்தாமே
என்றும் மேன்மையாகவே
ஆளுந் தேவ ஆவியே.

86 L. M. Uxbridge. Wells.

Sending forth of the Apostles.

௧ தேவாவியின் வரங்களால்
அப்போஸ்தலர் நிறைந்ததால்
அனேகம் பாஷைகளிலே
ரட்சிப்பைக் கூறினார்களே.

௨ மெய் வேத வாக்கைச் சகல
புறத்திலும் பிரசங்கிக்க

Digitized by Google

அன்புள்ள யேசு தேவனார்
அவர்களை அனுப்பினார்.

௩ தெய்வீக ஆவி என்கிற
வரத்தை வாங்கச் சகல
நல்லறிவையுந் தருவார்,
திடன் அருள் உண்டாமென்றார்.

௪ துரைகள் முன்னே உங்களை
நிறுத்தும் போது ஞானத்தை
பகரும் வாயைத் தருவார்,
பகர்வர் ஆவி தானென்றார்.

௫ சுத்தாங்கத்தின வரங்களை
கொடுக்குந் தேவ ஆவியை
எல்லா வணக்கத்துடனே
துதித்தல் செய்யும் மாந்தரே.
செயயுஙகள.

87 P. M. Luther's Hymn.

Renewal of Baptismal Covenant with prayer for aid.

க திரியேகரே தயாபரா!
தெய்வீக ஞானஸ்நான
முழுக்கால் எங்களை மகா
உயர்ந்த நிறைவான

Digitized by Google

அன்போடு சுத்தமாக்கின
இரத்தத்துக்கும் உன்னத
அருளுக்கும் புகழ்ச்சி.

௨ கத்தாவே, தேவரீரோடே
நான் இவ்விடத்திற் செய்த
உடன்படிக்கை எனக்கே
எப்போதும் மேன்மையாக
இருப்பதற்கு ஆவியை
கொடுத்துத் தேவ நன்மையை
என் ஞாபகத்தில் வையும்.

௩ உம்மோடு ஐக்கமாகவே
இஸ்நானம் பெற்றேனென்று
என் மேலே பாயுந் தீமையே
அகற்றிப் பேயைவென்று
என் ஆவி தேகம் யாவையும்
கத்தாவே உமக்கென்றைக்கும்
மெய்யாய்ப் படைப்பேனாக.

௪ மிகுந்த ஈனத்தாலே நான்
விழுந்தால் நீர் நிறுத்தும், [ன்
மென்மேலும் உம்மைப்போலத்தா
நான் சுத்தனாகச் செய்யும்.

Digitized by Google

கர்த்தாவே, மோட்ச கதியில்
நான் சேருமட்டும் நெஞ்சத்தில்
இரக்கமாகத் தங்கும்.

88 P. M. Luther's Hymn.

Import of Baptism.

௧ மெய் ஞானஸ்நானம் எத்தனை
சுகிர்தத்தைக் கொடுக்கும்!
தேவாவி ஆத்துமாக்களை
அழுக்கினின்றிழுக்கும்.
தண்ணீர் அதற்குச் சாயலாய்
கர்த்தாவின் சொல்லுக்கேற்றதாய்
பொருளை நன்றாய்க் காட்டும்.

௨ மகா அன்புள்ள ரட்சகர்
அசுத்தரை வெளுக்க
உயர்ந்த ரத்தஞ் சிந்தினார்,
அதாலே பாவம் போக்க
அதேற்படுத்தப்பட்டது,
அன்பே அதை உட்கொள்வது,
அதால் ரட்சிப்புண்டாகும்.

௩ அவ்வன்பினால் நிறைந்தோனாய்
நீ ஞானஸ்நானங் கொள்ளு,

Digitized by Google

அவரைப் பற்றிக்கொண்டோனாய்
திரியேகரை நீ விள்ளு.
அதாலே இந்த ஸ்நானமும்
மிகுந்த நன்மை அருளும்,
உன் பாவத்தை மன்னிப்பார்.

௪ இவ்வாறதனுக்காகவே
கத்தாவுக்குப் புகழ்ச்சி!
அதை நீ உண்மையாகவே
கத்தாவுக்குச் செலுத்தி
சன்மார்க்கத்தில் நிலைத்திரு,
அப்போது கத்தர் உனக்கு
கிரீடத்தைக் கொடுப்பார்.

89 P. M. **Luther's Hymn.**

Baptismal engagements.

௧ திரியேகரான உம்மையே
நான் முழுப் பத்தியாக
பணிந்து உமக்கேற்கவே
நடப்பேனென்பதாக
இஸ்நானத்தாலே அடியேன்
உடன்படிக்கை பண்ணினேன்,
இதை நினைப்பேனாக.

Digitized by Google

௨ பசாசை நான் தீர்மானமாய்
என் மனசால் வெறுத்தேன்
என்றப்போதுமக்கு முன்பாய்
நான்வார்த்தையைக் கொடுத்தேன்.
ஆ! அதின் தந்திரங்களை
நான் வெல்ல என் இதயத்தை
உமக்கே ஒப்புவிப்பேன்.

௩ பிதாக் குமாரன் ஆவியே,
நான் உம்மைப் பற்றிக்கொண்டு
நான் அன்று தந்த வார்த்தைக்கே
இசைவாயே நடந்து
முடியப் பாவத்துக்கென்னில்
இடங்கொடாமல் மோட்சத்தில்
உம்மண்டை சேர்வேனாக.

90 L. M. **Duke St. Uxbridge.**

The Lord's Supper instituted.

௧ நன் மேய்ப்பர் ஆடுகளுக்காய்
மரிக்க வந்து சாவிலே
கிடந்த நம்மைத் தயவாய்
நினைக்கும் அன்றிராவிலே

உ அன்பாகக் கையில் அப்பத்தை
எடுத்துப் பின்பு துதித்து
தமது சீஷர்கள் அதை
புசித்துக்கொள்ளும்படிக்கு

ங புசிக்க வாருங்கள் - இது
உங்களுக்காய்ப் படைத்ததும்
பங்கிட்டதுமாம் எனது
சரீரமென்று சொல்லியும்

ச பிறகு பாத்திரத்தையும்
எடுத்துத் தந்தன்பாகவே
தம்மை நினைக்க யாவரும்
இதிற் குடிப்பீரென்றாரே.

ரு ஆ, யேசுவே உமக்கென்றும்
துதி உண்டாவதாகவே,
இப்பந்தியாலே யாவரும
பிழைத்துக்கொள்வோமாகவே.

91 8, 7, 4. **Greenville. Littleton.**

Desire and preparation for the Lord's Supper.

க ஆத்துமாவே உன்னைச் சோதி,
துக்கம் யாவையும் விடு.

Digitized by Google

மீட்பரினிடத்தில் ஓடி
சேரச் சாக்கிரதைப்படு.
கத்தர் உன்னை
பந்தியில் அழைக்கிறார்.

௨ இந்தப் போசனத்தின் மேலே
வாஞ்சையாய் இருக்கிறேன்,
மா மகா இம்மானுவேலே,
உம்மையே உட்கொள்ளுவேன்.
தேவரீரே,
சீவ அப்பம் அல்லவோ?

௩ மாசில்லாத ரத்தத்தாலே
என்னை அன்பாய் ரட்சித்தீர்,
அதை மா தயையினாலே
நெஞ்சத்துக்கு ஈகிறீர்.
இந்தப் பானம்
என்னை என்றுங் காக்கவே.

௪ உம்முடைய சாவின் லாபம்
மாட்சிமை சிறந்தது,
என்னிடத்திலுள்ள சாபம்
நீங்குதற்கு ஏற்றது.
அப்பம் போல
அதை நான் புசிக்கவே.

Digitized by Google

ரு நீருந் தேவ சொற்படிக்கு
இங்கிரும் நல்நாதரே,
இந்தப் பந்தி மோட்சத்திற்கு
ஏதுவாய் இருக்குமே.
தேவ அன்பை
என்னில் ஊற்றி ரட்சியும்.

92 S. M. Watchman, Dover.

Prayer at the Lord's table for steadfastness.

௧ நான் முழு ஆசையாய்
விருந்துக்கு வந்தேன்,
என் யேசுக் கிறிஸ்துவே அன்பாய்
நீர் என்னை நோக்குமேன்.

௨ ஆ! என்னைத் தயவாய்
இப்போதுயிர்ப்பியும்,
நான் உம்மைச் சேர்ந்த சீஷனாய்
பின்சென்றென்நேரமும்

௩ உறுதியுடனே
முடியும் அளவும்
உம்மில் நிலைப்பேனாகவே,
என்னைக் காத்தருளும்.

Digitized by Google

620541A

௱

Meditation on Christ at his table.

க ஆ! யேசுவே உம்மாலே
நான் மீட்கப்பட்டேனே
நீர்செய்த நீதியாலே
நான் சுத்தமானேனே.
மிகுந்த கஸ்தியாலே
என் குற்றத்தைத் தீர்த்தீர்,
நிறைந்த வாதையாலே
நீர் என்னையும் மீட்டீர்.

உ உம்மால் நான் என்றும் வாழ
இப்போசனத்தில் நீர்
மிகுந்த பாவியான
என்னைச் சந்திக்கிறீர்.
அன்புடன் என்னைச் சேர்த்து
இரக்கமாய் இரும்,
என்னுள்ள ஈனத்துக்கு
அன்பாய் பொறுத்திடும்.

௩ நீர் இன்னும் என்னிற் காணும்
பொல்லாங்கு யாவையும்
அகற்றிப்போட வாரும்,
என்றைக்கும் ரட்சியும்.

Digitized by Google

நான் உம்மைப் பற்றிக்கொள்ள
நீர் என்னை ஏவுமேன்,
மிகுந்த தாழ்மையுள்ள
மனமுண்டாக்குமேன்.

௪ நல் மீட்பரே, உம்முடன்
நான் ஐக்கமாகவும்
நாடோறும் வாஞ்சையுடன்
உம்மில் நிலைக்கவும்
மிகுந்த அன்பினாலே
துணைசெய்தருளும்,
திவ்விய அப்பத்தாலே
என் நெஞ்சைப் போஷியும்.

94 L. M. Duke St. Uxbridge.

The Lord's Supper.

௧ உலோகத்தாரின் பாவத்தை
நிவிர்த்திசெய்யச் சீவனை
கொடுத்துச் சிலுவையிலே
மரித்த தேவ மைந்தனே!

௨ எல்லாருக்கும் நீர் ரட்சகர்,
தவிப்புள்ளோருக்கூற்றுநீர்,

Digitized by Google

தவித்தயர்ந்த என்னையும்
தாகந்தணித்திரட்சியும்.

௩ இந்த விருந்தில் வாருமேன்,
என்னை அன்பாக நோக்குமேன்,
அசுத்தமான யாவையும்
நிவிர்த்தியாக்கி ரட்சியும்.

௪ பரத்தில் வந்த அப்பமே,
நிறைந்த உண்மையாகவே
உம்மைப் புசிக்கச்செய்திடும்,
என்னை அன்பாய் உயிர்ப்பியும்.

௫ மரிக்கும்போதென் ஆவியை [தை
நீர் சேர்த்துக்கொண்டு மோட்சத்
அடையச் செய்யுங் கத்தரே,
புகழ் உமக்குண்டாகவே.

95 **S. M.** **St. Thomas. Dovar.**

Benefits from the Lord's Supper.

௧ கர்த்தாவின் நேசத்தை
இப்பந்தி காட்டுமே,
தமது பலவீனத்தை
உணர்ந்தவருக்கே

Digitized by Google

௨ இதாலே பெலனும்,
தீமையைப் பத்தியால்
அடக்க மனத்திடனும்
உண்டாம் இவ்விருந்தால்.

௩ நாம் தாழ்மையுடனே
இருந்து பாவத்தை
மெய் மனஸ்தாபத்துடனே
வெறுத்து நீதியை

௪ மா வாஞ்சையுடனே
தொடர்ந்தால் அடைவேன்,
அளவில்லாத நன்மையே
கிடைக்கும் எனக்கே.

96 C. M. Rochester. Cambridge.

The Lord's favours acknowledged at his table.

௧ உம்மலேதான் என் யேசுவே,
ரட்சிக்கப்படுவேன்,
உம்மாலேதான் பேரின்பத்தை
அடைந்து களிப்பேன்.

௨ இப்பந்தியில் நீர் ஈவது
ஞானத் திரவியம்,

Digitized by Google

இனிநான் பெற்றுக்கொள்வது
பரம பொக்கிஷம்.

௩ இவ்வேழை அடியேனுக்கு
பூரணத்தைத் தந்தீர்,
சஞ்சலம் வரும் பொழுது
நீர் என்னைத்தேற்றுவீர்.

௪ பூமியில்த் தங்கும் அளவும்
நான் உம்மைப் பற்றுவேன்,
என் வேலைசெய்யும்பொழுதும்
தினமுந் துதிப்பேன்.

௫ முடிவிலே நான் மரித்து
உயிர்த்தெழும்புவேன்,
மெய்யான முத்தி அடைந்து
என்றைக்கும் வாழுவேன்.

97 L. M. Hebron.

Feeding on Christ at his table.

௧ ஆ! யேசுவே நான் பண்ணின
நல் நிண்ணயம் பலப்பட
பசாசை ஓட்டியருளும்,
எப்போதும் என்னை ஆண்டிடும்.

Digitized by Google

௨ நான் உம்மில், வானத்தப்பமே!
மகா வணக்கத்துடனே
புசித்து உம்மை என்றைக்கும்
நினைத்துக்கொள்ள அருளும்.

௩ நான் இவ்விருந்தின் நன்மையால்
சுத்தாங்களுயிப் பிதாவினால்
மன்னிக்கும் கிருபையையும்
அடையக் கட்டளையிடும்.

௪ ஆ! உமக்கென்னை யாவிலும்
நீர் ஏற்றேறுக்கிக்கொண்டிரும்,
தினமும் என்னை உம்மிலே
தரிக்கப் பண்ணுங்கத்தரே.

௫ மரிக்கும் போதென் ஆவியை
மோட்சானந்தத்தில் உம்மண்டை
சேர்த்தென்னை உம்மால் என்றைக்
திருத்தியாக்கியருளும். [கும்

98 L. M. Windham.

Unworthiness to partake of the Lord's Supper.

௧ என் பாவத்தின் நிவிர்த்தியை
உண்டாக்க அன்பாய்ச் சிலனே

Digitized by Google

கொடுத்துச் சிலுவையிலே
மரித்த தேவ சுதனே
௨ அனேக பாவஞ் செய்தோனும்
மா நீசனும் ஏழையுமாய்
திரு விருந்துக்கு வரும்
அடியேனைத் தள்ளாதிரும்.
௩ உமக்குவந்தோனாகவே
குணம் அளியும் யேசுவே,
அசுத்தமான யாவையும்
நிவிர்த்தியாக்கியருளும்.
௪ இருண்ட நெஞ்சில் ஒளியும்
மெய் ஞானம் விசுவாசமும்
கொடுத்தென் பாவக் குணமே
அடங்கப் பண்ணுங் கத்தரே.

99 8, 7, 4. Greenville. Calvary.

Faith and love essential to partake of the Lord's Supper.

௧ யேசுக் கிறிஸ்து நமக்காக
வந்து மா அன்புடனே
தேவ ஆட்டுக்குட்டியாக
அன்று பலி போலவே

Digitized by Google

பாடுபட்டு
மாண்டு நம்மை மீட்டாரே.

உ தம்முடைய பரிசுத்த
மேனி ரத்தக் காட்சியை
தம்மை ஞாபகப்படுத்த
நமக்கிங்கே ஈகிறாரே,
அதை வாங்கி
தோத்திரிப்போமாகவே.

௩ வந்து சேர்பவன் நன்றாக
தன்னைத்தானே ஆராய்ந்தே
பாவம் யாவும் வெறுப்பாக
விட்டு நேராய் நடந்தே
நேசத்தோடு
தம்மைப் பற்றுமென்றாரே.

௪ இந்தப் பரிசுத்த நன்மை
நமக்காகும் பொழுதே
அந்தத் திரு ரத்தம் நம்மை
பரிசுத்தராக்கவே
தம்மை நோக்கி
நம்பிக்கொள்ளச் சொன்னாரே.

Digitized by Google

100 7's. Norwich. Benevento.

"Sinners turn, why will ye die?"

க பாவீ கேள்! ஏன் கெடுவாய்?
கர்த்தர் தாம் இரக்கமாய்
கேட்டுக்கொண்டு நிற்கிறார்,
மோட்ச செல்வந் தருவார்.

உ உன்னைச் சிஷ்டிசெய்தவர்
காத்துக்கொண்டு வந்தவர்
உன்னை மீட்ட யேசுவே
காயங் காட்டி நிற்கிறாரே.

௩ மீட்கப்பட்ட பாவியே!
தேவ அருட் சீவனை
தள்ளிவிட்டுக் கொடிதாய்
நித்த சாபம் ஏன் கொள்வாய்?

௪ சுத்த ஆவியானவர்
உன்னைச் சுத்தஞ்செய்தவர்
மோட்சானந்தம் பெறவே
உனக்கருள் ஈவாரே.

௫ பாவீ கேள்! நீ தீயிலும்
வெந்தெரிந்து என்றைக்கும்
வேதனை நிறைந்த சா
ஏன்கொள்வாய்? திரும்பிவா.

Digitized by Google

101 8, 7, 4. Greenville. Littleton.

Prayer for a right spirit.

௧ யேசுவே நீர் பிதாவோடும்
என்னை வந்திரட்சியும்,
பரிசுத்த ஆவியோடும்
என்னில் வந்து என்றைக்கும்
வாசம்பண்ணும்,
நற்சீரைத் தந்தருளும்.

௨ ஆத்துமாவுக்கின்பமான
உம்முடைய வார்த்தையே
நம்ப நீர் உறுதியான
நல்ல விசுவாசத்தை
எனக்கீயும்
தயவுள்ள யேசுவே.

௩ மோட்ச பாதை இன்னதென்று
உம்முடைய வார்த்தையால்
கேட்ட தானே அறிந் சென்று
போவதற்கு நீர் அன்பால்
என்னை நோக்கி
ஆவியைக் கடாட்சியும்.

௪ என்னில் நெடிதாய் உணர
அவர் என்னைப் போதிக்கே

Digitized by Google

என்னை வலினாலொழிய
மனத்திருள் நீங்காதே.
நல்ல ஆவி,
ஒளியை ஈந்தருளும்.

102 8, 7. **Middleton.**

Sense of guilt, and pardon sought through Christ alone.

௧ மா பொல்லாங்கை நடப்பித்தேன்,
பாவக்கேடு மிஞ்சிற்று,
நல்ல பாதை விட்டுவிட்டேன்,
உமக்கே விரோதித்து
கோபத்துக்குப் பயமாக
ஏதுவாய் இருக்கிறேன்.

௨ கல் நெஞ்செனக்குட்பிளந்து
அறஞ்செய்தும் ஆகாதே,
கண்ணீர் வெள்ளமாய்ப் புரண்டு
ஓடினாலும் நீங்காதே.
பாவம் போக்கும் பலியாக,
சீவன் தந்தும் போதாதே.

௩ நீரோ தேவ ஆட்டுக்குட்டி,
சிந்தின இரத்தமே

பாவமூக்கைச் சுத்தம்பண்ணி
ஆக்கினையை நீக்குமே,
அந்த ரத்தமே என்னையும்
சுத்தம்பண்ணச் செய்திடும்.

103 L. M. Windham. Armley.

Confession of sin, and prayer for sanctification.

௧ ஆ! உமது மா தயவால்
என்மேல் இரங்குங் கத்தரே,
என் பாதகந் தன் தோஷத்தால்
என்றும் என்முன் நிற்கின்றதே.

௨ அதை அன்பாக நீக்குமேன்,
நான் செய்த பாவம் உமக்கே
விரோதமென்றழுகிறேன்,
நீர் தண்டித்தாலும் நீதியே.

௩ நான் சென்மத்தால் அடைந்த சீர்
எல்லாம் பொல்லாங்கும் பாவமு
தல் உண்மையை விரும்பும் நீர் [ம்
அதைத் தானே இந்தருளும்.

௪ என் பாவக் குஷ்டரோகத்தை
அகற்றி என்னைக் கழுவும்,

Digitized by Google

நொருக்கப்பட்ட ஆவியை
திரும்பவும் உயிர்ப்பியும்.

ரு என் பாவத்தைத் தொலைத்தென்னில்
சுத்தாங்கமான மனதை
படைத்து எனதுள்ளத்தில்
அருளும் புது ஆவியை.

104 C. M. Bangor. Walsal.

Penitence and desire for pardon.

க கர்த்தரே, என்னைக் கோபமாய்
விசாரியாதிரும்,
என் செய்கைக்கேற்றதாகவே
சரிக்கட்டாதிரும்.

உ நான் சாபத்தைக் காணும்
என்றென்றும் வாழ்வே,
என் பாவத்தைப் பாராமலும்
மன்னியுங் கர்த்தரே.

ஙு ஆரோக்கியத்தை அளியும்,
நோவாய்க் கிடக்கிறேன்,
பாவமே என் நெஞ்சிற் புண்கள், எரியும்,
மனம்நருங்குண்டேன்.

Digitized by Google

௪ ஆத்தும மீட்பாகருவே!
திரும்பிச் சேர்ந்திடும்.
ஆ! உமதன்புக்காகவே,
கர்த்தாவே ரட்சியும்.

௫ பொல்லாரே! போங்கள் கர்த்தரே
என் சத்தங் கேட்கிறார்,
காப்பாற்ற மா சமர்த்தரே,
என் மேல் இரங்கினார். குவா

105 7's. Pleyel's Hymn.

Sinful state lamented and grace implored.

௧ ஏழைப் பாவியான நான்
கேடு வன்மமுள்ளவன்,
நான் மகா தரித்திரன்,
பாழ் நிலத்தைப் போன்றவன்.

௨ என் சரீர இச்சையும்
ஆவியைக் கெடுக்குமே,
உலகத்தின் மார்க்கமும்
மனதை நெருக்குமே.

௩ ஆ! நான் உம்மை யேசுவே
நல்ல பக்தியுடனே
பற்றிக்கொள்ளும் நேசமே

Digitized by Google

என்னெஞ்சில் உண்டாகவே.
௪ ஆ! இவ்வேழைக்கே உம்மால்
ஆதரிப்புண்டாகுமே,
என் இக்கட்டும் அதினால்,
மாறி நீங்கலாகுமே.

106 S. P. M. **Dalston.**

The penitent accepting the call of Christ.

௧ நான் எங்கே ஓடுவேன்?
மா பாதகனானேன்,
கேடென்னை மூடுகின்றதே!
ஆர் ஆதரிப்பவர்?
இவ்வீண் உலோகத்தார்
என் திகிலை நீக்கார்களே.
௨ அன்புள்ள யேசுவே,
வாவென்று சொன்னீரே,
என் மனம் உம்மைப் பற்றுதோ?
கிலேசம் மாறவும்,
இக்கட்டு நீங்கவும்
நற்கருணை அளியீரோ?
௩ என் ஆறுதல் நீரே,
உம்மால் மீட்பாயிற்றே,

Digitized by Google

என் கேடில்லாமல் அறவே,
நீர் அதைத் தீர்க்கவும்
நான் சுத்தனாகவும்
பாவநிவிர்த்தி செய்தீரே.

107 L. M. Armley. Wells.

The penitent imploring mercy.

௧ நிர்பந்தமான பாவியாம்
நான் இங்கே தேவரீருக்கே
முன்பாக மா கலக்கமாம்
பயமாய் வந்தேன் கர்த்தரே.

௨ என் பாதகத்தை மன்னியும்,
என் சஞ்சலத்தை நீக்கிடும்,
இரங்கித் தயை அளியும்,
ஆ! கோபமாய் இராதேயும்.

௩ என் குற்றத்துக்குத் தக்கதாய்
செய்யாமல் தயவாய் இரும்,
பிதாவே என்னைப் பிள்ளையாய்த்
திரும்ப நோக்கியருளும்.

௪ என் நெஞ்சில் திகில் தணியும்,
நீர் என்னைக் கேட்டிரட்சிப்பீர்,

Digitized by Google

யேசுவே ஆற்றல் அளியும்,
ஓர்காலும் என்னைக் கைவிடீர்.

108 **L. M.** **Brookfield.**

Mourning over sin.

O that! my load of sin were gone

௧ என் பூரமான பாவத்தை
நீக்கி அகற்றியருளும்,
என் ஆத்துமாவைத் தயவாய்
தாழ்மையிற் பார்த்திரட்சியும்.

௨ என் கர்த்தரே, என் மீட்பரே,
எப்போதும்மைத் தரிசிப்பேன்?
தேடித் தவித்தும் உமக்கே
வராமற் றூர நிற்கிறேன்.

௩ என் நெஞ்சுக்குச் சந்தோஷத்தை
நான் தேடுகிறேன் என் மீட்பரே,
சினேகஞ் சாந்தம் உணக்கத்தை
எனக்குத் தாரும் யேசுவே.

௪ கட்டான பாவ பாசத்தை
அறுத்தென்னை இரட்சியும்,
நான் உம்மிற் சேர்ந்து சுத்தத்தை
அடையும்படி அருளும்.

ரு வாருங் கர்த்தாவே, பாவிகளை
தாமதியாமல் தேற்றிடும்,
என் நெஞ்சிலும் நற்கிருபை
வெளிப்படுத்தியருளும்.

109 7s. Lovest thou me.

Sorrow for having fallen into sin.

க கர்த்தரே நான் எத்தனை
பாவப் பாதகங்களை
செய்து வந்தேனென்பதே
தோன்றப் பண்ணும் தேவனே.

உ ஆ, ஐயோ! மா பாவத்தில்
மாண்டு போயிருக்கையில்
என்றும் வாடி நோகிறேன்,
துக்கத்தாற் கலங்கிறேன்.

ஈ நெஞ்சம் என்னைக் குத்தவே
துன்பந் துயர் மிஞ்சவே
ஆவியுங் கலங்கவே
கண்ணீர் பாய்ச்சலாயிற்றே.

ச துக்கத்தோடு தேவனே,
வெட்கங்கொண்ட ஏழையே

வந்தேன், என்னை அன்புடன்
ஏற்று மன்னித்தருளும்.

110 8, 7, 4. Middleton.

Acknowledgement of depravity.

௧ ஆ! கர்த்தாவே பெரிதான
கேடு என்னில் இல்லையோ?
நான் முன்னோரின் தன்மையான
துற்குணத்தான் அல்லவோ?
கெட்ட நானே
வெட்கத்தோடு நிற்கிறேன்.

௨ என் நடக்கை மாறுபாடு,
மனமும் பொல்லாததே,
அது நன்மைக்கே சேராது,
பொய்களுக்கு ஓடுமே.
இந்தக் கேடு
என்னை விட்டு நீங்குமா?

௩ என்னை உமதாவியாலே
நீர் திருப்பி யாவையும்
உம்முடைய அன்பினாலே
என்னில் மாற்றி ரட்சியும்.
கெட்ட குணம்
போகப் பண்ணுங் கர்த்தரே.

Digitized by Google

111 C. M. Canterbury. Dundee.

Desire for a contrite heart.

௧ கற்போன்ற நெஞ்சத்தை நன்றாய்
திருத்திச் சாலவும்
கண்ணீருடன் உருக்கமாய்
கரையச் செய்திடும்.

௨ அதால் அன்புள்ள யேசுவே
எல்லாரின் மீட்புக்கும்
இறந்த தேவரீருக்கே
என் நெஞ்சு கீழ்ப்படும்.

௩ மன்னிப்புத் தந்து உள்ளத்தை
நடத்தி ஆண்டிடும்.
கடைசியிற் சுகிர்தத்தை
அளித்திரட்சியும்.

112 P. M. Luther's Hymn.

Christ healing the broken heart.

௧ அருளின் ஊற்றாம் யேசுவே!
வியாகுலமும் பாடும்
படுகின்ற என் நெஞ்சிலே
இருக்கும் நோவைப் பாரும்.
அனேக அம்புதைத்ததாய்

Digitized by Google

என் பாவங்கள் அதிகாரமாய்
என் மனதை வதைக்கும்.

௨ நொறுங்கின நெஞ்சுடனே
வந்தும்மைப் பற்றிக்கொள்ளும்
எல்லார் மேல் தாழ்ச்சி இன்றியே
அருள் உண்டென்று சொல்லும்
அவ்வார்த்தை நிலையானதால்
என் மனதைத் தன் இன்பத்தால்
முழுதும் உயிர்ப்பிக்கும்.

௩ மகிழ்ச்சியுள்ள ஆவியால்
இவ்வேழையைக் காப்பாற்றும்,
நீர் பாடுபட்டு மாண்டதால்
என் சாவில் என்னை ஆற்றும்.
என் நெஞ்சில் விசுவாசத்தை
முடியக் காத்தடியேனை
உம்மண்டை சேர்த்துக்கொள்ளும்.

113 *32 Ps* **S. M.** **Little Marlboro'.**

Blessedness of the pardoned penitent.

௧ தன் குற்றம் நீங்கினோர்
தேவருள் பெற்றோரே,

Digitized by Google

ஆண்டவர் குற்றஞ் சொல்லாதோர்
வாழ்வுள்ளவர்களே.
௨ தாஞ்செய்த பாவமே
தீர்ந்த துக்கந்தான்
நண்டையும் பேச்சுங் காட்டுமே
மெய் மனஸ்தாபமாம்:
௩ குற்றம் மறைத்ததால்
பட்டேன் மா துன்பம்
அந்த அறிக்கை செய்ததால்
அடைந்தேன் மன்னிப்பை.
௪ தீயோர் சீர் கொள்ளட்டும்,
பாவத்தை விடுவார்;
நல்லோர் கர்த்தாவைச் சேரட்டும்;
கிருபை பெறுவார்.
௫ துன்மார்க்கனுக்கையோ
வேதனை வருமே!
தேவனை நம்புவோனுக்கோ
மா தயை உண்டாமே.
௬ அன்புள்ள நீதரே,
மகிழ்ச்சிகொள்ளுங்கள்;
மனதிற் செம்மையுள்ளோரே,
களித்துக் கூடுங்கள்.

Digitized by Google

114 8, 7, 4. Greenville.

Seeking Christ.

க தேவரீரே, தாழ்மையாக
திருப் பாதத்தண்டையே,
தெண்டனிட ஆவலாக
வந்தேன் நல்ல யேசுவே,
உம்மைத் தேடி
காணவே விரும்புகிறேன்.

௨ தயவாக என்னைப் பாரும்,
நின் சித்தத்தின்படியே,
என்தனை நடத்திக்கொள்ளும்
என்னை மீட்டவர் நீரே,
உம்மைத் தேடி
உம்மைச் சேர்ந்த ஆளாவேன்.

௩ உமது சற்பிரசாதம்
மாத்திரம் வேண்டியது,
உம்முடைய தேவ பாதம்
முத்தஞ்செய்ய அரிது,
உம்மைத் தேடி
எல்லாம் உம்மோடடைவேன்.

Digitized by Google

௪ வல்ல கர்த்தாவினுடைய
சுத்த ஆட்டுக்குட்டியே,
கருத்தோடே என்னுடைய
ஞான மணவாளனே,
உம்மைத் தேடி
தரிசிக்கவே வந்தேன்.
௫ என் பிரார்த்தனையைக் கேளும்,
அத்தியந்த பணிவாய்
கெஞ்சிறேனைக் கேட்டுக்கொள்ளும்
உம்முடைய பிள்ளையாய்
உம்மைத் தேடி
உம்மிடத்தில் வருகிறேன்.
௬ லோக செல்வம் ஆசாபாசம்,
வேண்டாமென்று தள்ளினேன்,
இந்த மாய்கை மனத்துக்கம்,
மெய் வாழ்வை விரும்புகிறேன்.
உம்மைத் தேடி
மோட்சங்கூட அடைவேன்.

115 **P. M.**

Jesus died to deliver men from sin.

௧ யேசுக் கிறிஸ்துவே,
பூதலத்திலே

Digitized by Google

கேட்டிலுள்ள மாந்தர்க்கான
சீவ தீப ஆகியான
ரட்சகர் நீரே
யேசுக் கிறிஸ்துவே.

௨ என்னை மீட்க நீர்
சீவனை விட்டீர்,
குற்றம் யாவையும் தொலைக்க
ஆக்கினை எல்லாம் விலக்க
மாந்தர்க்காக நீர்
சீவனை விட்டீர்.

௩ ஆஸ்தி சீவனும்
மற்ற யாவையும்
தேவனுக்காய் நான் வெறுக்க
ஆசைகொண்டு வாழ்ந்திருக்க
என்னில் முழுதும்
நின்றிரட்சியும்.

116 P. M. Luther's Hymn.

Praise for Pardon and free Salvation.

௧ கர்த்தாவே, என் பிழைப்பினுவ்
உமக்குத் தாரமானு

Digitized by Google

நான் மீண்டு தேவ தயவால்
உமக்குப் பிள்ளையான
சீர் அடைதல் மா பாக்கியம்!
ஆ! உமக்கே இஸ்தோத்திரம்,
பிதாக் குமாரன் ஆவி.

௨ நீர் என்னைத் தள்ளிப்போடவும்
தண்டிக்கவும் என் பாவம்
என்னை நேரஸ்தனாக்கியும்,
நீர் என்மேற் பரிதாபம்
வைத்தென்னை உம்மண்டையிலே
அன்பாகச் சேர்த்துக்கொண்டீரே,
ஆ! தயவுள்ள சுவாமி.

௩ இதாலே என் பிதா நீரே,
நான் உம்முடைய பிள்ளை,
தவறுதல்கள் என்னிலே
நீர் கண்டும் மோசம் இல்லை.
நான் பத்தியாய் என் தாழ்மையில்
மன்னிப்புக் கேட்டுக்கொண்டாகில்,
என் விண்ணப்பத்தைக் கேட்பீர்.

Digitized by Google

117 P. M.

Praise, joy in God and prayer for faith and victory.

௧ ஜீவ கர்த்தரே!
பாவக்கேட்டிலே
சாகும் என்னையே ரட்சித்து
சேர்த்த உம்மை நான் துதித்து
போற்ற வேண்டுமே
ஜீவ கர்த்தரே.

௨ அன்பின் ரூபம் நீர்—
என்னைத் தேவரீர்
அன்பாய்ச் சேர்த்துக்கொண்டதா
என்னை மெய் மகிழ்ச்சியாலே [லே
பூரிப்பாக்கினீர்,
அன்பின் ரூபம் நீர்.

௩ உம்மைத் தேடினேன்,
என்னைத் தேற்றுமேன்,
நம்பிக்கையின் நியத்திற்கு
நல் வளர்ப்புண்டாவதற்கு
எண்ணெய் வாருமேன்,
உம்மைத் தேடினேன்.

Digitized by Google

௪ வல்ல கர்த்தரே,
துன்ப நாளிலே
லோக மோசத்துக்குத் தப்ப
என்னை வன்மையால் நிரப்ப
வாரும் யேசுவே,
வல்ல கர்த்தரே.

௫ தேவரீர் துணை,
நீர் உலகத்தை
வென்றுகொண்ட அன்பினாலே
ஆறுதலுடன் உம்மாலே
நானும் லோகத்தை
வெல்ல நீர் துணை.

118 8, 7, 4. Littleton.

Deliverance from spiritual foes through Christ alone.

௧ ரட்சகர் இல்லாமல் நாங்கள்
சாலவும் நிற்பாக்கியர்,
நன்மை ஏதுமற்ற நாங்கள்
கெட்டுப்போன மானிடர்!
என் கர்த்தாவே,
சிறைத் தந்திரட்சியும்.

Digitized by Google

௨ நீர் இராவிட்டால் பசாசும்
தீயுடன் பாதாளமும்
என்னைச் சாலவும் நடுங்க
பண்ணும் இந்த நேரமும்
என்னைக் கெட்டோன்
என்று சொல்லி வாதிக்கும்.

௩ கெட்ட வையகத்துள்ளோர்கள்
வைத்த கண்ணி மிகுதி,
தேவரீர் இல்லாமல் நாங்கள்
தப்பிப்போவதெப்படி?
அதுவென்னை
இச்சையாலே பீடிக்கும்.

௪ யேசுவே பலத்தைத் தாரும்,
பாவத்திருளை நீக்கும்,
உள்ளக் கண்ணைத் தெளிவாக்கும்,
நன் முகத்தைக் காண்பியும்.
ஞான தீபம்
என்னில் பிரகாசியும்.

119 8, 7. Good Shepherd.

Deliverance from sin by Christ.

௧ யாவிலும் பலத்த மீட்பர்
என்னை மீட்டிரட்சியும்,

Digitized by Google

ஆக்கினையைத் தீர்ப்ப நீர்ப்பட்ட
என்னிமித்த வேதனைக் கொண்டீரே,
தேவரீரையே துதிக்க
தூதர்போல ஆசிப்பேன்,
உம்மிடத்திலே தரிக்க
என்றென்றைக்கும் நேசிப்பேன்.

௨ தேவரீருடைய ஆவி
என்னில் தங்க அருளும்,
நான் மகா குரூர பாவி—
நீர் என் நெஞ்சைத் தேற்றிடும்.
பாவஞ் செய்வதற்கு ஆசை
என்னில் நீங்கச் செய்யுமேன்,
சாபந் தள்ளிச் சுத்த வாஞ்சை [ன்.
என்னில் தோன்றப் பண்ணுமே

120 S. P. M. Dalston.

Evil spirits conquered through Christ.

௧ ஆ! யேசு கிறிஸ்தின
இரத்தஞ் சகல
நரரை மீட்கத் தகுமே,
பாவத்தைத் தீர்க்கவும்

Digitized by Google

பேய் வாய்க்கு நீக்கவும்
பெலனைக் கொண்டிருக்குமே

௨ எல்லாப் பேய்க்கூட்டமும்
எதிர்ப் போராடியும்,
இளக்கரித்துப்போவதேன்?
மீட்பர் என்னுடனே
நிலைத்திருப்பாரே,
அவரால் வெற்றி அடைவேன்.

௩ இப்போதும் உம்மையே
நான் சார்ந்தோன் யேசுவே,
துக்கித்தும்மண்டையே சேர்ந்
மன்னிப்பை அடைந்தேன். [தேன்
ஆக்கினை தவிர்ந்தேன்,
பேரின்பத்துக்குமுள்ளாவேன்.

௪ இனி நான் உம்மிலே
பிரிவதின்றியே
தடையும் கேடும் அறவும்
உறுப்பாய் வளர
நீர் என்னைத் தளர
விடாதபடி நடத்தும்.

Digitized by Google

121 8, 7. Sicilian Hymn.

Spiritual conflict.

க மனமே, உன் தீய இச்சை [ள்.
மேற்கொள்ளாமற் பார்த்துக்கொ
அது நரகத்துக்குன்னை
கொண்டுபோம்-விழித்துக்கொள்.

உ இன்பமாகப் பேசினாலும்
அதின் சத்தங் கேளாதே,
கேட்டாயானால் பெரு மோசம்
நிசமாக வருமே.

௩ அல்லவென்று அதெழும்பி
பகைக்கில் எதிர்த்துக்கொள், [ணி
வென்றுவிட்டேனேயென்றெண்
சோம்பலற்று வீரங்கொள்.

௪ சில நாளாய் அமர்ந்தாலும்
அது இன்னம் உள்ளதே,
பின்னும் உன்னுடன் எதிர்க்கும்,
சற்றுந் தூங்கிக்கொள்ளாதே.

௫ ஆவிக்கு விரோதமாகும்
உனது சரீரத்தை
வெல்வதற்கு ஏற்றதாகும்
தேவ ஆயுதங்களை

Digitized by Google

[illegible] சாந்தி நின்று திடமாக
போர்செய்யாமல் விடாதே,
அப்போதே நீ பூரிப்பாக
வெற்றிகொண்டு வாழ்வாயே.

122 7s. Pleyel's Hymn.

"My soul be on thy guard."

௧ நெஞ்சே நீ விழித்திரு,
வஞ்சகர்க்கஞ்சாதிரு,
திரளான பாதகர்
உன்னை வெல்லத் தேடுகிறார்.

௨ எந்தக் காரியங்களுஞ்
செபத்தாலே முடியும்,
ஆதலால் நீ யேசுவை
கெஞ்சிக் கேள் ஒத்தாசைக்காய்.

௩ வென்றுவிட்டேனென்றெண்ணி
ஆற நினையாதே நீ
போர்விடாமல் நீயும் உன்
வெற்றி முடி சூட்டுமுன்.

Digitized by Google

123 8, 7. Bartimeus.

Christian Race.

௧ கரைசேர மனசான
மனிதன் பரத்துக்கே
போம் வழியிற்றிட்டமான
சீராய் ஓட வேண்டுமே.

௨ யேசுவே மகா அன்பாக
மோட்ச பந்தயத்தை நீர்
அதைப் பெறத்தக்கதாக
எனக்குங் காண்பிக்கிறீர்.

௩ அடியேனுக்கங்கே சேரும்
வாழ்வு எப்போது வரும்?
எனதாவி அதைத் தேடும்
ஆசை என்னிற் பெருகும்.

௪ ஆ! இப்பலவீனனுக்கு
நீர் இரங்கும் யேசுவே,
நீர்தான் என் சகாயத்துக்கு
வாருமேன் என் மீட்பரே.

124 8, 7, 4. Tamworth.

The way to heaven difficult.

௧ தேவ கிருபையைத் தேட
எச்சரிக்கையாயிரு,

Digitized by Google

மனப்பாரம் இன்றி வற
நன்றாய்ச் சாக்கிரதைப் படு.
அங்கே கிரீடம்
வைக்கப்பட்டதல்லவோ?

௨ மோட்ச வாசலே இடுக்கம்
தாழ்மையாகி உட்படு,
சீவ மார்க்கமே நெருக்கம்,
லோக நேசத்தை விடு.
வல்ல நாயன்
வல்லமை கொடுப்பாரே.

௩ வேண்டுதலினாலெதிர்த்து
ஆண்டவர் ரட்சிப்பதை
காத்துமட்டுக்கும் பொறுத்து
மீட்பரை நன்றாய் நினை.
அன்புள்ளோரே
உன் விண்ணப்பங் கேட்பாரே.

௪ கெட்ட இச்சையை அடக்கு,
உன்னில் அது ஆட்கொண்டால்,
நம்பிக்கை என்னும் விளக்கு
மங்கிப்போகும் அல்லவா?
சோதியாரை
உண்மையாகப் பற்றிக்கொள்.

௫ பின்னிருப்பதை உன்னமல்
முன்னிருப்பதைப் பிடி,
இச்சை வைத்தழுக்காகாமல்
தேவ சிந்தையைத் தரி.
சீவனுள்ளோர்
உன்னைச் செல்வனுக்குவார்.

125 **S. M.** **Aylesbury.**

Determination to persevere though tried.

௧ பசாசினாலேயும்
துன்பம் எழும்புமே,
பொல்லாத லோகத்தாலேயும்
ஓர் கிறிஸ்தவனுக்கே

௨ உபத்திரம் உண்டாம்,
அவன் நிஸ்காரமும்
சுமந்துகொள்ளத் தேவையாம்,
நோவதினால் வரும்.

௩ இதெல்லாந் தெரியும்,
ஆனாலும் பின்வாங்கேன்,
என் நோவுயாவும் அறியும்
கர்த்தாவைப் பற்றுவேன்.

Google

126 L. M. Rothwell. Hebron.

Watchfulness and prayer.

௧ இகத்தில் உன் தலைவர் போல்
உபத்திரவஞ் சகித்துக்கொள்,
பொல்லாத ஏது தோன்றிடில்
பெலன் தரித்தெதிர்த்து நில்.

௨ எல்லாத்திலும் நல்லறிவை
கொடுக்குந் தேவ வார்த்தையை
அந்நேரமுந் தியானித்து
பிராத்தித்தே விழித்திரு.

௩ வென்றோனுக்காக மோட்சத்து
கிரீடமே வைத்தாயிற்று,
பொல்லாத மார்க்கமுள்ளவன்
இகழ்ச்சிகொண்டு நீங்குவான்.

௪ இரக்கமுள்ள யேசுவே,
நான் மோட்ச ராச்சியத்திலே
உம்மோடிருக்க என்றைக்கும்
என்னில் தரித்தே ரட்சியும்.

127 7's. Hampton.

Watchfulness and prayer.

௧ ஆத்துமாவே, தீமைக்கே
தப்பத்தக்கதாகவே

Digitized by Google

நீ விழித்துக்கொண்டிரு,
நெஞ்சச் சாக்கிரதைப்படு.
௨ நீதியற்ற சாத்தானும்
கெட்டுப்போன லோகமும்
என்றும் உன்னைச் சூழவே
நின்று துன்பஞ் செய்யுமே.
௩ அந்தக் கேட்டை நீக்குதல்
சர்வ வல்லவர் செயல்,
நீ உன் சொந்த வன்மையாய்
ஒன்றுஞ் செய்யவே மாட்டாய்.
௪ பாவம் போக்கும் ஏதுவாய்
நீ ஜெபித்துத் திட்டமாய்
உன்னைச் சோதித்தாவிக்கு
உன்னை ஒப்புவித்திரு.
௫ தீமையோரைப் பார்க்கையில்
நீ கர்த்தாவின் நாமத்தில்
வேண்டிக்கொள்ளல் வன்மைதான்
தீயன் நீங்கி ஓடுவான்.
௬ பத்தியோடே பேணலாய்
நீ நடந்துகொள்ளுவாய்,
நித்தம் நல்ல ஆண்டவர்
உன்னை அன்பாய் ரட்சிப்பார்.

"*Why sleep ye my brethren?*"

௧ ஏன் தூங்கி நிற்கிறீர்கள்? சகோதரரே,
ஆ! வெற்றிசிறந்தோர் பின்விட்டீர்களே,
பூலோகத்தை விட்டுப் பரத்திற்சேர்வோம்,
எல்லாருஞ் சீர்கொள்ள விழித்திருப்போம்.

௨ ஏன் தூங்கி நிற்கிறீர்கள்? கத்தாவே வந்தார்,
கெட்டோர்களை மீட்க அழைத்தும் நிற்கிறார்,
இளைத்தோரைத் தாங்கி, சலிப்போரையே
மா ஆறுதல் செய்வார் யெகோவாதாமே.

௩ ஏன் தூங்கி நிற்கிறீர்கள்? ஆ! பாவிகளை
வளைந்து நெருக்கிக் கெடுக்க வகை
பார்க்கிறார்கள் அநேகர் அறிந்தாதலால்
மா சாபம் வராதோ, நாம் தூங்கிவிட்டால்?

௪ ஏன் தூங்கி நிற்கிறீர்கள்? குமாரன் வந்தார்,
போதித்து மரித்து, கெட்டோரைக் கொண்டார்,
இரக்கம் விளங்க, தீர்ப்பாகும் நீதி
ஒன்றான கத்தாவுக்கே என்றுந் துதி.

௫ ஏன் தூங்கி நிற்கிறீர்கள்? சா சீக்கிரமாய்
வந்திடும், ஆ! பாவிகள் மா கொடிதாய்
கலங்கிப் புலம்பிப் போகாப்படியே,
தூங்காமலிருங்கள் சகோதரரே.

௬ ஏன் தூங்கி நிற்கிறீர்கள்? ஆ! பாவிகளே,
விழித்துப்பாருங்கள் ஓதுக்கிடமே
உண்டோ? யேசுவண்டை வராமல் விட்டால்
மா சாபம் பலிக்கும் யெகோவாவினால்.

Digitized by Google

129 8, 7, 4. **Littleton.**

The one thing needful.

௧ ஒன்றே தேவையென்று சொன்னீர்,
யேசு அதை நாடுவேன்,
என்னை உம்மண்டைக்கழைக்கிறீர்,
மாயையை அரோசிப்பேன்.
இவ்வுலோகம்
தழுவாமல் விடுவேன்.

௨ நன்மை லோகப்பொருள்களில்
தேடினும் கிடையாதே,
யேசுசுவாமி உம்மண்டையில்
வாழ்வெல்லாம் இருக்குமே.
அதைத் தாரும்
மீட்பரான யேசுவே.

௩ இந்த நன்மை மரியாளே
வேண்டுமென்பதாகவே
வாஞ்சையாகத் தெரிந்தாளே,
கிறிஸ்தின் பாதத்தண்டையே
சாந்தமாக
கேட்ட நன்மை பெற்றாளே.

Digitized by Google

௪ நாளும் முழு வாஞ்சையோடும்
உம்மையே என் யேசுவே,
அண்டிக்கொண்டேன் - நீர் என்னோடு
ஐக்கமாகும் சிநேகனே.
உம்மைப் பற்றும்
விசுவாசம் ஈவீரே.

130 C. M. Mear. Irish.

Giving the heart to God.

௧ என் மகனே உன் நெஞ்சைத்தா
என்றென்னைக் கேட்டீரே,
பிதாவே நெஞ்சை நான் மகா
அன்பாய்ப் படைக்கிறேனே.

௨ இதை அப்பா இரக்கமாய்
அங்கீகரித்திடும்,
என் நெஞ்சை உள்ளவண்ணமாய்
தந்தேன் அன்பாயிரும்.

௩ மெய்யாக நான் சுகிக்கவே
இதைப் படைக்கிறேன்,
என்றைக்கும் ஆதரிக்கவே
பணிந்து கேட்கிறேன்.

Digitized by Google

131 C. P. M. Ganges. Norwich.

Rejecting the world and depending on God.

க நிலையில்லாத செல்வத்தை
இச்சித்து நாட மாட்டேனே,
என் மீட்பர் தேடின
மோட்சானந்த மா செல்வத்தை
கிடைக்கப் பண்ணுந் தயவை
அருளும் பிதாவே.

உ இந்நன்மை உமதீவுதான்,
என் ஆண்டவரே உம்மை நான்
இஸ்தோத்திரிக்கிறேன்;
நற்குணம் என்னில் என்றைக்கும்
நிலைக்கக் கட்டளையிடும்,
பலத்த தேவனே.

ங நீர் செய்த தயவை எல்லாம்
பார்த்தால் மகா திரட்சியாம்,
முடிய ரட்சியும்,
கிருபையுள்ள பிதாவே
என் கேட்டை நீர் விரும்பீரே,
கருணை அளியும்.

Digitized by Google

Rejecting the world and choosing God & heaven.

௧ மண்ணே! உன் இன்பத்தை
நாடேன் என் மனதை
பரத்தில் என்றும் நிலைக்கும்,
மேல்வாழ்வின் மேல் வைப்பேன்,
அதாலே அடைவேன்
நீங்காத நல்ல பாக்கியம்.

௨ உன் ஆஸ்தி லோகமே,
நிலைநில்லாததே
அதின்றதானே இருந்தும்
நாளைக்குப் போவதே,
அப்போதுன் நன்மையே
பற்றினோருக்குச் சஞ்சலம்!

௩ விண்ணில் இருப்பவர்
மெய்யாஞ் சிநேகிதர், [ர்,
அவர் நன்றாய்க் காப்பாற்றுவா
என் நோவை ஆற்றியும்
தம்மையே அளித்தும்
ஆசீர்வதித்தும் வருவார்.

Digitized by Google

௬ விண்ணில் வாழ்வெனக்கு
ஆயத்தப்பட்டது,
என்நாமம் அவ்விடத்திலே
சீவ புஸ்தகத்தில்
இருக்குங் களிப்பில்
என் ஆத்துமாப் பிழைக்குமே.

௭ வரும் மோட்சானந்தம்
நான் தேடும் பாக்கியம்,
அதின் நினைவும் அன்றன்றும்
தயிரியப்படுத்தும்,
யேசுவினால் என்றும்
நற்கதி வாழ்வுங் கிடைக்கும்.

133 L. M. Uxbridge.

Renouncing the world, and seeking heaven.

க போ அற்பமாஞ் சிற்றின்பமே,
போ கெட்ட லோக இச்சையே!
வா தேவ நேசமே வாவேன்,
நான் உனதாலயமாவேன்.

௨ நான் தேவ சுதன் சீவனை
கொடுத்த அந்த நேசத்தை

Digitized by Google

நினைத்து இச்சை யாவையும்
வெறுத்திருக்கச் செய்திடும்.

௩ ஓர் நிமிஷத்தின் இன்பமே
அனந்த நோவுண்டாக்குமே;
ஆ! என்னைச்சேர்த்தும்மண்டையே
சுத்தப்படுத்தும் யேசுவே.

௪ நான் மோட்சத்திற் பங்கற்றோனாய்
போகாதபடி நேர்த்தியாய்
சீர்ப்பட உம்மை நேசிக்கும்
இதயத்தை ஈந்தருளும்.

௫ நரருடைய இதயம்
அறிந்திராத ஆநந்தம்
அங்கெனக்குப் பரத்திலே
கிடைக்கப்பண்ணுங் கத்தரே.

134 S. M. Aylesbury.

Rejecting the world and choosing heaven.

௧ சீர்கெட்ட லோகமே,
உன் வாழ்வு எனக்கேன்?
என் மீட்பவர் என் கதியே-
நான் உன்னைச் சார்வதேன்?

௨ என் ஆஸ்தி யேசுதான்,
என் செல்வம் அவரே-

Digitized by Google

உன் மேன்மை அற்ப குப்பைதான்
சீர் கெட்ட லோகமே.

௩ என் யேசுவைச் சார்வேன்,
வின் நன்மை நிற்குமே, [ன்
உன்னில் யாதொன்றையும் நம்பே
சீர் கெட்ட லோகமே.

௪ ஓர் நிமிஷத்திலே
உன் வாழ்வும் அழியும்,
என் சாவு வருகையிலே
மகிழ்வும் முடியும்.

௫ ஆனாலும் வாழுவேன்,
என் வாழ்வு யேசுவே, [ன்
உன் செல்வத்தை நான் வெறுப்பே
சீர் கெட்ட லோகமே.

135 C. M. Dedham. Dundee.

Rejection of the world and consecration to Christ.

௧ என் முழு நெஞ்சையும் அன்பாய்
கர்த்தாவே என்றைக்கும்
அகமும் ஆலயமுமாய்
படைத்துக்கொண்டிரும்.

Digitized by Google

௩ நீர் அதை ஆளுங் கர்த்தரே,
அதால் நான் பாக்கியன்,
நான் உலகத்தோன் அல்லவே,-
நான் உம்முடையவன்.
௪ பசாசின் மணவாளியே,
ஓர்காலும் உன்னை நான்
சேரேன்-உன் பேச்சு மாயமே,
உன் செலவம் குப்பை தான்.
௫ போ லோகமே, போ பாவமே,
என் மனம் உமக்கு
எக்காலத்துக்கும் யேசுவே,
கொடுக்கப்பட்டது.

136 8, 7, 4. **Tamworth. Zion.**

Value of Christ and heaven and vanity of the world.

௧ மோட்ச மண்டலத்திலுள்ள
மாட்சிமை என் ஊதியம்,
கிறிஸ்துவென்னுஞ் சோதியுள்ள
ரட்சகர் என் பொக்கிஷம்.
மோட்சலோக
நன்மையே என் ஆறுதல்.

Digitized by Google

௨ மானிடர் பணத்தினாலே
தங்களைத் தேற்றட்டுமேன்,
என் உள்ளத்தை யேசுவாலே
தேற்றி விண்ணை நோக்குவேன்.
ஆஸ்தி போகும்,
நீரோ என்றும் நிற்கிறீர்.

௩ கிறிஸ்துவால் எனக்குயர்ந்த
ஆஸ்திகள் உண்டாயிற்று,
விக்கினங்களால் நிறைந்த
லோக ஆஸ்தி எதுக்கு?
கிறிஸ்துநாதர்
என்றுமுள்ள பொக்கிஷம்.

௪ அந்த மோட்ச மண்டலத்தில்
நான் என் பங்கடையவே
நீர்தான் இவ்வறுந்தரத்தில்
நீங்கிடாச் சகாயரே,
நான் என்றைக்கும்
உம்முடன் இருப்பேனே.

137 7's. Lancaster. Wilmot.

Christ our Intercessor.

௧ யேசுவே நீர் உம்மையே
எனக்காயிப் படைத்தீரே,

Digitized by Google

என்னைக் குற்றம் இன்றியே
சுவாமிக்குப் படைப்பீரே.

௨ மீட்பரே, நீர் ஒருவர்
உத்தம ஆசாரியர்,
உம்மைக் கொண்டாலன்றியே
பலி செல்ல மாட்டாதே.

௩ நீர் என் கெட்ட இச்சையை
நீக்கிப்போட்டு மனதை
நோ அழுக்கு யாவுக்கும்
தப்புவித்திரட்சியும்.

௪ என்னில் ஒன்றும் இயவே
இங்கிராமற் போகவே
பீடத்தில் நான் முழுதும்
சுட்டெரிக்கப்படட்டும்.

௫ அதினாலே உமது
கையினாற் பிதாவுக்கு
நீர் செலுத்தும் பலியே
ஏற்றப்படும் நிசமே.

138 L. M. Uxbridge.

Conformity to Christ.

௧ கர்த்தாவே உம்மைப் போல நான்
மிகுந்த அன்பு சுத்தவான்

Google

இரக்கமுள்ளோனாகவே
இருக்கச் செய்யும் யேசுவே.

௨ இங்கே இருக்கும்அளவும்
நம்பிக்கையுடன் வாழவும்
என்சித்தந் தேவரீருக்கும்
அடங்கவுஞ் செய்தருளும்.

௩ இறந்துபோகும் நேரத்தில்
சிறந்து நானும் மோட்சத்தில்
உம்மோடிருந்து வாழவே
கடாட்சியும் நன் மீட்பரே.

139 7's. German Air.

Following Christ.

௧ உம்மை ஆட்டுக்குட்டியே
எனதாவி தேடுமே,
எப்போதுமதடியேன்
உமக்கேற்றோனாகுவேன்!

௨ நான் ஓர் ஆட்டுக்குட்டியாய்
சாந்தமுள்ள விதமாய்
என் உள்ளத்தை உமக்கே
படைப்பேன் என் கத்தரே

Digitized by Google

௩ எனக்கு என் நோவிலும்
வருத்த இக்கட்டிலும்
திடன் தாரும் யேசுவே,
அதால் உம்மைப் பற்றுவேன்.

௪ பாவத்துக்குத் தூரமாய்
தேவரீரை உண்மையாய்
என்றென்றைக்கும் யாவிலும்
நான் பின்பற்ற அருளும்.

௫ மோட்சத்தில் உம்மண்டைதான்
மாசில்லாதோனாக நான்
நிற்கவும் என்றென்றைக்கும்
உமக்கே இஸ்தோத்திரம்.

140 L. M. Hebron. Wells.

Cleaving to Jesus.

௧ ரட்சகரான யேசுவே,
இரங்கி எனக்குதவும்,
பூலோகம் பற்றும் ஆசையே
அகற்றி என்னில் வந்திடும்.

௨ உம்மை எப்போதும் நேசிப்பேன்
வேண்டுதல் கேட்டிரங்குவீர்,

உம்மால் திருத்தியாகுவேன்,
சுத்தாங்கந் தாருந் தேவரீர்.

௩ பூமியில் தங்கும் நாளெல்லாம்
உலக வாழ்வை வெறுப்பேன்,
யேசுதானே என் விருப்பம்,
அவரை நாடிப் பற்றுவேன்.

௪ அவர் காலடிகளை நான்
பற்றிப் பின்றொடர்ந்தோடுவேன்,
மேலான அவர் அன்பைத்தான்
தினமும் எண்ணிக்கொள்ளுவேன்.

௫ சிற்றின்ப ஆசை இனிமேல்
என்னில் இராமற் புரியும்,
மனம் ஒடுங்காதாகையால்
ஆண்டே அடக்கியருளும்.

141 7s. **Warren. Lancaster.**

Learning of Christ.

௧ தேவ போதம் எனக்கு
இப்போதாகும்படிக்கு
குணம், ஆசை, தாழ்மையும்
யேசுவே தந்தருளும்.

Digitized by Google

௨ தன்மேல் நம்பும் நம்பிக்கை,
நானே என்ற பெருமை
இவை விட்டு முழுதும்
உம்மைப் பற்றப் புரியும்.

௩ சுபாவ ஞானத்தை விட்டு
பிள்ளைபோலக் கீழ்ப்பட்டு
நான் உம்மாலே கற்கவும்
பெலன் கொள்ளவுஞ் செய்யும்.

௪ அதால் நல்ல ஆவியே,
கல்வி தேவ ஞானமே
சீவன் முத்தி இவையும்
எனக்குத் தந்தருளும்.

142 7's. **Hotham. Lancaster.**

Christ a refuge.

௧ ஆ! அன்புள்ள யேசுவே
இந்த அந்தகாரத்தில்
மானிடர் தவிக்கவே
சூறைக் காற்றடிக்கையில்,
உம்மிடத்திற் சேருவேன்,
என்னைக் காத்துக் கொண்டிரும்,

Digitized by Google

மனதைக் கொடுக்கிறேன்,
அக்கரையில் ஏற்றிடும்.

௨ தேவரீர் இராவிடில்
வேறு துணை இல்லையே,
நான் தனித்திருந்திடில்
கேட்டுக்குள்ளே போவேனே.
ஆ! துணையில்லாத நான்
உம்மிடத்தொதுங்கிறேன்,
நீர் நல்லோடமாய் வந்தால்
அக்கரையிற் சேருவேன்.

௩ கிறிஸ்துவே, என் நெஞ்சுக்கு
நீர் நிறைவு செய்திடும்,
கீழ் விழுந்த ஏழைக்கு
செம்மையைக் கொடுத்திடும்.
உணக்கமற்ற இனனை
நீர் நிறுத்திரட்சியும்,
கல்தியுள்ள நெஞ்சத்தை
அன்பினாலே தேற்றிடும்.

௪ நான் மிகுந்த பாவிதான்,
நீர் மிகுந்த சுத்தரே,
நான் அநீதி கேடுள்ளான்,
நீர் நிறைந்த நீதியே.

Digitized by Google

நான் மிகுந்த ஆக்கினை
பெற்றுக்கொள்ளப் பாத்திரன்,
நீர் மகா ரட்சிப்பினை
ஈந்திடுந் தயாபரன்.

௫ மட்டில்லாத பாவத்தை
நீக்க நீர் பலத்தவர்,
தேற்றும் மா சந்தோஷத்தை
எனக்கீயும் ரட்சகர்.
சீவ ஆற்றின் ஊற்று நீர்,
உம்மில் தாகம் ஆறுமே,
என்றென்றைக்குந் தேவரீர்
என்னில்த் தோன்றும் பேசுவே.

143 7, 6. **Missionary.**

Christ the believer's treasure.

௧ அநேகர் ஆசை வைக்கும்
பொருளின் பேரிலே
சந்தோஷியேன் என்றைக்கும்
நில்லாமற் போகுமேன்.
என் பொக்கிஷம் பரத்தில்
எழுந்த கிறிஸ்துவே!

Digitized by Google

அங்கே அவரிடத்தில்
நன்மை எல்லாம் உண்டே.

௨ என் ரட்சகரைப் பற்றி
இருக்கிறேன் அவரே
என் துக்கத்தை அகற்றி
எப்போதும் ரட்சிப்பார், மீட்பரே
எனக்குச் சீவனை
மரித்தெழும்பினர்,
அவரைப் போல் அன்பாக
எவர் சிநேகித்தார்?

144 C. M. Howards. Dedham.

Christ precious.

176 Hymn

௧ நன் மீட்பர் ஆட்டுக்குட்டியே,
நீர் எங்கள் வாஞ்சனை,
உமது திரு நாமமே
கொடுக்கும் இன்பத்தை.

௨ உமது வார்த்தை இன்பமாய்
செவியிற் தோன்றவே,
கேட்டால் மகா மகிழ்ச்சியாய்
சேர்வோம் உம்மண்டையே

௩ இப்பூமியில் இருக்கையில்
யேசு எம் சிந்தனை,
பூலோகம் வானம் போவிடில்
அவர் எம் வந்தனை.

௪ தூதர்களோடும் அவரே
மேகம் மேல் வருகில்
மீட்டோரும் நாம் சம்பிரீத்தே
துதிப்போம் மோட்சத்தில். Martyn

145 8, 7. **Love divine.**

"*Love divine all love excelling.*"

௧ தேவ அன்பும் மோட்ச வாழ்வும்
பூமியில் வந்தானதே,
களிப்புடன் வாழ் என் நெஞ்சம்
ள அதுழ்க்குமாகுமே,
யேசுவே நீர் மா இரக்கம்
சுத்த அன்பாய்த்தோன்றுகிறீர்,
மீட்சி தாரும் பாரதுக்கம்
பட்ட நெஞ்சில் தங்குவீர்.

௨ உமதன்பின் ஆவி தாரும்,
எங்கள் நெஞ்சம் பூரிப்பாய்

Digitized by Google

௱௫௭

உம்மிற் சார நீரே வாரும்,
சுத்த நேச வழியாய்
பாவ ஆசை எல்லாம் நீக்கி
எங்களை இரட்சியும்,
விசுவாசத்தைத் துவக்கி
நிறைவேறச் செய்திடும்.

௩ உமதடியாரைப் பாரும்,
நாங்கள் உமதாலயம்,
எங்களுக்குத் தயை தாரும்,
என்றும் விலகாதிரும்.
என்றும் உம்மைத் தோத்திரித்து
வானோர் போலச் சேவிப்போம்,
குறைவற்ற அன்பைப் பெற்று
ஒழியாமல் துதிப்போம்.

௪ கறை குற்றமற்று நாங்கள்
சுத்த சிஷ்டியாகவே
தேவ பத்தி தேவ சாயல்
பெற்றோராகத் தோன்றவே.
நாங்கள் மோட்ச கரையேறி
வானோராகும் வரைக்கும்
தேவ சாயலுக்கு மாறி
தேறும்படி அருளும்.

Digitized by Google

146 7's. German Air.

Love to Christ.

க நெஞ்சே நீ இவ்வுலகின்
துக்கக் கவலைகளின்
பாரத்துக்கு நீங்கலாய்
ஆறி வாழத்தக்கதாய்
யேசு ஒருவரையே
பத்தியாய்ப் பிடிக்கவே.

உ அவர் உன்னதப் பொருள்,
அவராலே நெஞ்சுக்குள்
வாழ்வின் சோதி உதிக்கும்,
அவர் நேசந் தரிக்கும்,
அதால் இம்மை நமக்கு
மறுமைக்கொப்பாவது.

ங ஆகையால் என் நெஞ்சே நீ
வேதனைக்கு விலகி
என்றும் வாழத்தக்கதாய்
யேசுவை மா நேசமாய்
நோக்கி வாஞ்சையுடனே
தேடிப் பற்றி விடாதே.

Digitized by Google

147 L. M. Old Hundred.

Love to Christ.

௧ நான் உம்மை நித்தம் உள்ளத்தால்
சிநேகிப்பேன் என் யேசுவே,
நான் உம்மை நித்தம் வாஞ்சையால்
பின்பற்றுவேன் என் மீட்பரே.

௨ என் நேசரே, ரட்சிப்புக்கு
உதித்த தேவ மைந்தனே,
முன் உம்மைச் சேர்ந்திராதது
எனக்குத் துன்பமாயிற்றே.

௩ உம்மைப்பற்றாமல் வீணாய் [னேன்
பொல்லாங்கைச் செய்து சுற்றி
பரத்தை விட்டுத் தூரமாய் [ன்
நிலத்தை அன்பாய்ப் பற்றினே

௪ இப்போது நான் வணக்கமாய்
நடப்பதற்குத் தேவரீர்
என்னைத் திருப்பி மா அன்பாய்ப்
பிதாவிடத்திழுக்கிறீர்.

௫ இதே இரக்கம்! மா தயை! [வேன்
அன்புள்ள உம்மைப் போற்று

ஆ! யேசுவே, என் நெஞ்சத்தை
உமக்கன்பாய்ப் படைக்கிறேன்.

148 8, 7. Missionary.

Consecration to Christ and comfort implored.

க எவற்றிலும் உயர்ந்த
அன்பான யேசுவே,
பரத்திலே சிறந்த
பத்தாவே உமக்கே
என் நெஞ்சை வாஞ்சையாலே
கொடுத்திருக்கிறேன்,
நீர் பட்ட நோவினாலே
சுகமடைகிறேன்.

உ என் சோர்வை நீரே மாற்றி
என் நெஞ்சின் துக்கத்தை
கடாட்சத்துடன் ஆற்றி
புலம்பும் ஏழையை
ரட்சிக்கத்தக்கதான
இம்மானுவேலானீர்,
கத்தாவே நீர் மெய்யான
அப்பங் கொடுக்கிறீர்.

Digitized by Google

௩ ஆ! யேசுவே மலர்ந்த
முகத்தைக் காண்பியும்,
என் உள்ளத்தில் உயர்ந்த
அன்பாயைப் பிரகாசியும்.
என்னில் நீரே தரித்தால்
களிப்பன் யேசுவே,
என் உள்ளத்தை நீர் விட்டால்
சலிப்பன் மீட்பரே.

149 C. M. Howards.

Consecration to Christ in view of his love.

க அடியேனுக்கு யேசுவே,
நீர்செய்த கிருபை
நான் உம்மை நம்பும்படிக்கே
எனக்கு நற்கொடை.

உ மகா உயர்ந்த விதமாய்
நீர் எனக்கும்மையே
அளவில்லாத நேசமாய்
அருளிச் செய்தீரே.

௩ ஆ! என்னிலுள்ள நெஞ்சையே
உண்மையாய் அடியேன்

Digitized by Google

எனதென்றெண்ண மாட்டேனே
உமக்குத் தருவேன்.

௪ உம்மிலே நானும் மீட்பரே,
இனி என்றென்றைக்கும்
தரித்திருக்க என்னிலே
நீரும் தரித்திடும்.

௫ அப்பொழுது நான் வாழுவேன்,
என்றும் உம்மோடே
குறைவில்லாமல் அடைவேன்
நித்திய களிப்பே.

150 **C. M.** **Peterborough.**

The love of Christ constraining to his service.

௧ ஆ! யேசுவே நீர் எத்தனை
நன்றாகத் தேற்றுவீர்,
நீர் உம்மைத்தான் பேறாகவே
எனக்குத் தருவீர்.

௨ என் நேசரே அருமையாம்
இவ்வன்பு யாவுக்கும்
உமக்கெப்போதுந் தகுமாம்
தோத்திரம் உண்டாகும்.

Digitized by Google

௩ எத்தயவையும் நினைந்து
நான் என்றும் உமக்கே
என் இதயத்தைப் படைத்து
சன்மார்க்கனுவேனே.

௪ நான் செம்மையாக நடந்தே
நீர் காட்டும் பாதையில்
உம்மைப் பின்பற்றும்பொருட்டே
மெய் விசுவாசத்தில்

௫ வளர்ந்து நிலைநிற்கவே
தயை கூர்ந்தருளும்,
மரண பரியந்தமே
காப்பாற்றிக்கொண்டிரும்.

151 P. M.

Approach to Jesus.

௧ என்னை யேசுவே,
உம்மிடத்திலே [ளும்
சேரச் சொல்லும் ஏற்றுக்கொள்
யேசு நாதரே.

௨ தேவ வாக்கியம்
என் நட்சத்திரம்,

Digitized by Google

கிறிஸ்தைக் காட்டும் நல் உவாத்தி
தேவ வாக்கியம்.

௩ உம்மை ஏற்கிறேன்,
காட்சி தாருமேன்,
ஆவலோடும் பத்தியோடும்
உம்மை ஏற்கிறேன்.

௪ தேவ மைந்தனே,
நல்ல மீட்பரே,
உம்மை நாடும் நெஞ்சு வாழும்
தேவ மைந்தனே.

152 8, 7, 4. Littleton.

Grace of Christ declared and sought.

௧ என்னைத் தேவ சாயலான
சிஷ்டியாக்கிப் பின்பு நான்
கெட்டபோதென் மீட்பரான
கர்த்தரே நீர் நேசவான்.
என்னை என்றும்
உம்மில் நிற்கச் செய்திடும்.

௨ மானிடர்க்கு மார்க்கத்தையும்
மெய்ம்மையையும் நித்திய

Digitized by Google

சேனையும் மோட்சத்தையும்
இந்த மீட்பராகிய
நீரே என்றும்
என்னிற்றங்கி ரட்சியும்.

௩ எனக்காகப் பாடுபட்டு
நிந்தையுள்ளதாகிய
முடி பெற்று சாவுமட்டும்
கஸ்திபட்டும் ஏறின
யேசு சுவாமி
என்னைக் காத்திரட்சியும்.

153 C. M. Howards. Barby.

Desire to resemble Christ.

௧ தேவனைப் பாடிப் புகழ்ந்து
அவரின் பட்சத்தை
என்றும் உணரும் மனசு
என்னில் உண்டாகவே.

௨ என் இதயத்திற் தாழ்மையும்
நம்பிக்கை நேசமும்
கிறிஸ்துவை போல் நற்குணமும் ‸ ப்
தரிக்கச் செய்திடும்.

Google

௩ உமது திருவுள்ளத்தில்
மாசில்லையே என்றும்
அத்தேவ தேச சாயலில்
நான் ஓங்க உதவும்.

௪ தயாபரா! வந்துமது
சாயலை அளியும்,
என் இதயத்தில் தேவன்பு
என்ற பேர் எழுதும்.

154 C. M. Howards. Camden.

Presence of Christ desired.

௧ நொறுங்கப்பட்ட நெஞ்சிலே
பிரவேசிப்பேனென்றீர்,
அவ்வாக்குக்கேற்றதாகவே
என்னிற் பிரவேசிப்பீர்.

௨ இதில் உமக்கேராததை
அகற்றிப் போடுமேன்,
உம்மோடு சேரும் நெஞ்சத்தை
அன்பாய் நடத்துமேன்.

௩ இப்பாவியை எத்தினமும்
அன்பாக நோக்குவீர்,

Digitized by Google

நீர் இறந்ததின் நிமித்தமும்
என் குற்றம் மன்னிப்பீர்.

௪ என் லாபமே, என் பேளனே!
அழிந்து போயினேன்,
ஆனாலும் என்னிடத்திலே
இருமென்றேங்கிறேன்.

௫ அன்பாக என்னை நோக்கினால்
என் ஆவி வாழுமே,
அதற்கு நீர் தேவாவியால்
என்னை நிரப்புமேன்.

155 **L. M.** **Rothwell. Shoel.**

Christ welcomed.

௧ கர்த்தாவே வாழ்க, பாவியை
நீர் கைவிடாமல் இத்தனை
தாழ்வாய் என்னண்டை வந்தது
அளவில்லாத தயவு.

௨ மகிமையான யேசுவே,
மெய் ஆஸ்தியான உம்மையே
நான் பெற்றிருக்க என்றைக்கும்
என் நெஞ்சில் தங்கியருளும்.

Digitized by Google

௩ வெளிச்சந் தாரும் அறிவில்
மூடன்மை நெஞ்சில் அளியும்,
என் மனப் பலவீனத்தில்
பலம் உண்டாக்கியருளும்.

௪ அதால் நான் நித்தம் பூரிப்பாய்
இருந்து மா சந்தோஷமாய்
இவ்வுலகத்தை வெறுக்கிறேன்,
கதியாம் உம்மைப் பாடுவேன்.

156 7, 6. **Amsterdam.**

Holy walk.

௧ காருண்ணிய ஒளியாம்
அன்புள்ள யேசுவே!
நரசீவ கோலமாம்
உம்மாலே என்னிலே
சோதி தாழ்மை குணமும்
உண்டுபட்டாலன்றியே
மா சந்தோஷந் திடமும்
உண்டாக மாட்டாதே.

௨ பாவம் யாவும் மன்னித்து
அகற்றியருளும்,

Digitized by Google

கடுங்கோபத்தை விட்டு
  என் மேல் அன்பாயிரும்.
என்னுடைய நெஞ்சிலே
  நற்சீரை உண்டாக்குமேன்,
சமாதானம் தரவே
  பணிந்து கேட்கிறேன்.

௩ அடியேனை மீட்டோரே,
  நான் உம்மைச் சேவிப்பேன்,
முழுப் பத்தியாகவே
  எப்போதும் நடப்பேன்.
அப்படி உண்டாகவே
  பலத்தைக் கடாட்சியும்
யாவும் புதிதாகவே
  படைத்துக்கொண்டிரும்.

157 7, 6. **Amsterdam.**

Holy walk.

௧ தேவரீரைச் சார்ந்தோனாய்
  கர்த்தாவே உண்மையில்
நிலைநிற்கத் தயவாய்
  நீர் எனக்கறிவில்

Digitized by Google

வளர்த்தி செய்தன்பினுல்
என்னை நோக்கிக்கொண்டிரும்,
உம்முடைய வார்த்தையால்
வழியைக் காண்பியும்.

உ லோகத்தை நான் வெறுத்து
என் நெஞ்சை உமக்கே
என்றென்றைக்குங் கொடுத்து
பிழைக்கும்படிக்கே
என் பொல்லாத இச்சையை
தயவாகப் பாருமேன்,
நருங்குண்ட மனதை
நீர் தானே ஆற்றுமேன்.

158 C. M. Dundee. Stephens.

Holy walk.

க என் தயவுள்ள யேசுவே,
எல்லாரின் மீட்புக்கும்
நீர் சிந்தின இரத்தமே
போதுமாய் முடியும்.
உ மன்னிப்புண்டாக்கி உள்ளத்தை
சிராக்கும் உம்மையே

Digitized by Google

நான் கற்றுக்கொள்ளுந் திடனே
அளியுங் கர்த்தரே.

௩ எனக்குப் பரிசுத்தத்தின்
உடுப்புடுத்துமேன்,
அதால் மாசற்றுச் சுவாமியின்
முன்பாகவே நிற்பேன்.

௪ இருள் பகையுங் கவடும்
உம்மாலே போய்விட
வெளிச்சம் நேசம் மெய்ம்மையும்
உம்மாலே வரவ.

௫ இங்கென்னைத் தீயோர் கெட்ட சீர்
துன்மார்க்கம் மோசமும்
சூழ்ந்தாலுஞ் சுவாமிக்கென்னை நீர்
நற்பத்தனுக்கிடும்.

159 L. M. Duke Street.

Holy walk.

௧ நான் வாஞ்சையாய் என் மனதை
உயரப்பண்ணிப் பாவத்தை
வெறுக்கச் சுத்த நெஞ்சை நீர்
என்னிற் சிஷ்டிக்கக் கடவீர்.

Digitized by Google

௨ மனக்கலக்கமற்றோனாய்
நான் உமக்கேற்ற பத்தியாய்
நடக்க என்னை நித்தமும்
சன்மார்க்கனாக்கியருளும்.

160 7, 6. **Cheerful Hope.**

Prayer for holy dispositions.

௧ பரத்துக்குரித்தான
ஒழுங்காய் நடந்து
நற் சீருக்கேற்றதான
கனியைக் கொடுத்து
எந்நாளும் பிறருக்கும்
நான் நன்மை செய்யவே
எனக்கொத்தாசை பண்ணும்
அன்புள்ள யேசுவே.

௨ இக்கட்டில் தேவரீரை
விடாமற் பற்றியே
உமது திருவாக்கை
எவர்க்குஞ் சொல்லவே
எனக்குத் திடனையும்
அருளிச்செய்திடும்,

Digitized by Google

மெய் விசுவாசத்தையும்
என் நெஞ்சிற் கொளுத்தும்.

௬ சிநேகம் என்ற போர்வை
எனக்குத் தரியும்,
இடும்பை நீக்கித் தாழ்மை
மனசுக்களியும்,
சந்தோஷஞ் சமாதானம்
இருக்கும்படிக்கே
பசாசினாலே வரும்
தீங்கெல்லாம் நீங்கவே.

161 S. P. M.

Living near to God.

௧ மா இராசனே,
தாழ்மையாகவே
தேவரீருக்கே பணிந்து
திருவார்த்தையை அறிந்து
அதை நெஞ்சிலே
வைப்பேன் யேசுவே.

௨ என்னை முழுதும்
உம்மிடத்திழும்,

Digitized by Google

நேசத்தோடே பூரிப்பாக
உம்மோடொட்டிக்கொள்வேனாக,
என்னை முழுதும்
உம்மிடத்திழும்.

௩ லோக வாழ்வுக்கு
சாயும் நெஞ்சுக்கு
உள்ளத்தை நன்றாய்த் திருத்தும்,
நீர் என் வாழ்வு, நீர் என் முத்தும்,
லோகங் கேட்டுக்கே
ஏதுவாகுமே.

௪ நான் விழிக்கவும்
நித்தம் நித்தமும்
கெஞ்சவும் மகா அன்பாலே
நீர் பலத்த ஆவியாலே
என்னை நித்தமும்
விரட்சியும்.

162 P. M.

Walking under the guidance of God.

௧ கர்த்தாவே உமக்கு
அடங்கத்தக்கதாக

Digitized by Google

நடக்குஞ் சிந்தையை
கொடுத்த அன்புக்காக
உமக்கிஸ்தோத்திரம்
இப்போதும் நித்தமும்
அதற்குப் பாத்திரம்
உண்டாகச் செய்திடும்.

௨ என் யோசனையை நீர்
நடத்திக்கொள்வீராக,
என் இஷ்டத்தின்படி
நடக்கில் மோசமாக
போவேன் நீரோவென்றால்
என்வேலையை எல்லாம்
அன்பாய் நடத்தினால்
மிகுந்த நன்மையாம்.

௩ பொல்லாத ஆசையை
வெறுத்து உம்மைப் பற்றி
தகாத செய்கையை
சந்தோஷமாய் அகற்றி
உம்மோடு ஐக்கத்தை
எப்போதுந் தேடவும்
என் ஏழைச் சித்தத்தை
உம்மில் அன்பாய் இழும்.

Digitized by Google

௬ என்னில் இருக்கிற
நல்லீவை நித்தமாக
எழும்பிக்கொள்ள நான்
உம்மில் நிலைப்பேனாக,
அதால் உம்மோடுதான்
மகா பரத்திலும்
அனந்த பாக்கியம்
எனக்கு நேரிடும்.

163 C. M. Peterborough.

Prayer for holy affections.

௧ உள்ளான தேவ பயமும்
தீமையை வெறுத்து
விரோதிக்கிற குணமும்
என் வாஞ்சையானது.

௨ ஆங்காரமுந் துராசையும்
எழும்பும் போது நான்
அவை அடக்குங் காரணம்
அன்புடன் பயந்தான்.

௩ இனி நான் என்றும் உண்மையே
விடாத படிக்கு

Digitized by Google

பிள்ளைக்குத் தரும் பயமே
எனக்குக் கொடுத்து,
௪ நான் உம்மை விடும் நேரத்தில்
ஆ! என்னைக் கண்டியும்,
மெய்த் துக்கத்தை என் மனதில்
எழுப்பியருளும்.
௫ என் குற்றம் யாவும் மனதில்
நோப்படச் செய்திடும், [தை
கிறிஸ்துவின் அன்பால் மோட்சத்
நான் தேட அருளும்.

164 L. M. Shoel. Hebron,

Desire to honor God.

௧ என் தேவனே நான் உம்மிலே
அன்பாயிருந்து ஊரிலே
உள்ளோர்மேல் என்னைப்போலவும்
அன்பாய் இருக்கச் செய்திடும்.
௨ எல்லாருக்கும் நான் உண்மையை
யோக்கியம் நீதி சுத்தத்தை
காட்டி நடக்க அருளும்,
என் நெஞ்சத்தை உயிர்ப்பியும்.

Digitized by Google

௩ அஞ்ஞானியை ரட்சிக்கவும்
துன்மார்க்கனைத் திருப்பவும்
எப்போதும் நல்ல சித்தமே
இருக்கச் செய்யுங் கத்தரே.

௪ அதற்குச் சத்திய வேதமும்
அதை விரிக்கும் ஆவியும்
என் உள்ளத்தில் தரிக்கவே
கடாட்சியும் என் மீட்பரே.

165 **10's.** **Savannah.**

Committing one's self to Father, Son and Spirit.

௧ என் உள்ளமே என் முழு நெஞ்சே நீ
கத்தாவுக்குன்னை நன்றாய் ஒப்புவி,
உன்னுடவர் நல்லிலக்கமாகவே
நீ அவர் சொந்தமாயிருப்பாயே.

௨ பிதாவே, என்னை ஏற்றுக்கொண்டிரும்,
தப்பாய் நான் செய்ததைப் பாராதிரும்,
அபாத்திர என்மேலிரங்குமேன்; [வேன்
நான் பாவிதான் என்றேற்றுக்கொள்ளு
௩ என் மீட்பரே, நீர் என்னைச் சேர்த்திடும்,
என் அக்கிரமத்தின் பாரம் யாவையும்

Digitized by Google

நீர்தான் சுமந்தீர் ஆட்டுக்குட்டியே,
ஆ! அதற்கு நான் நீங்கலாவேனே.

௪ தேவாவியே, நீர் என்னை அப்புறம்
நற்பாதையில் நடத்தி என் மனம்
எந்நேரமும் உம்மண்டை சேரவே
பரம சிந்தையுங் கொடுப்பீரே.

௫ திரியேகரே, நான் எனக்கல்லவே,
உமக்குச் சொந்தமாயிருப்பேனே,
நான் இன்னமிங்கே மண்ணில் தங்கியும்
என் நெஞ்சு நித்தம் விண்ணை ஆசிக்கும்.

166 7, 6. **Amsterdam.**

Holiness and eternal life the object of our creation.

௧ அழிவற்ற ஆத்துமா
எனக்குத் தந்தவர்
அதில் தங்கும்படியாய்
உண்டாக்கி மீட்டவர்
யேசுவே இப்பொழுது
நன்மை நீதி நேசமும்
பலம் எனக்களித்து
என்றும் விடாதேயும்.

Digitized by Google

௨ தேவ சாயலை என்னில்
உண்டாக்கிச் சுத்தமும்
சாந்தம் ஞானமும் என்னில்
என்றும் வளர்ப்பியும்,
உமக்குள் மெய் வாழ்வையே
ருசித்து மோட்சத்திலே
வாழ்வது நீர் என்னையே
படைத்த எண்ணமே.

௩ தேவ சித்தம் என்னிலே
நடக்கச் செய்திடும்,
உம்மைப் பற்றும் அன்பிலே
நான் வளரப் பண்ணும்,
விண்ணினின்று வந்தோராய்
உம்மைக் கண்டு பார்க்கையில்,
என் உள்ளம் நற்பூரிப்பாய்
மகிழும் மோட்சத்தில்.

167 C. M. **Arlington.**

God's presence a comfort in life.

௧ கத்தாவே நாங்கள் பூமியில்
இருக்கும் நாள் நீரே

Digitized by Google

நேசத்தைக் காட்டி எங்களில்
தரித்திருப்பீரே.

௨ உம்மோடே பேசி இக்கட்டை
நோவையும் மறப்போம்,
நீர் இங்கேயாகில் துன்பத்தை
இன்பமென்றெண்ணுவோம்.

௩ கர்த்தாவே என்னில் தங்கியே
சந்தோஷிப்படுத்தும்,
என் உள்ளம் என்றும் உமக்கே
இணங்கச் செய்திடும்.

௪ உம்மண்டைக்கென்னை அழைத்தீர்,
கேட்டும்மை நாடுவேன்,
அன்பாய் என்னோடே பேசுவீர்,
அப்போதே களிப்பேன்.

௫ உள்ளளவும் நான் தினமும்
உம்மோடே நடப்பேன்,
பூமியில் நீர் என் செல்வமும்,
பரத்தில் பூரிப்பேன்.

Digitized by Google

Persecutions endured.

௧ கிறிஸ்துவைப் பின்செல்லுஞ் சபை,
முற்சிநேகத்தைப் பிடி,
கிறிஸ்துக்குள் நிலைகொண்டேறு,
சோம்பலைத் தவிர்த்திரு.
திடமாக
மோட்ச மார்க்கத்தில் நட.

௨ செல்லுகையிற் றுன்பத்துக்கு
நீ அஞ்சாமல் வீரங்கொள்,
சீவ முடியைத் தொடர்ந்து
கை பிடிக்கப் பார்த்துக்கொள்.
உண்மையான
நன்மையை விடாதிரு.

௩ லோகத்துள்ள வாழ்வு மேன்மை
என்று சிந்தியாதிரு,
நீ பசாசால் வரும் மாயை
செய்யும் இச்சையை வெறு.
லோக இன்பம்
துன்பமென்றறிந்துகொள்.

Digitized by Google

௪ நண்பனை மற்றோர்கள் போலே
நீதியைத் தள்ளாதிரு,
நீதிக்காகப் போயிருலே
துன்பந் தோன்றில் வென்றிடு.
கிறிஸ்துநாதர்
உன்னை மேன்மையாக்குவார்.

169 8, 7, 4. Helmsley.

Rejoicing in suffering for Christ.

௧ வாழ்க சிலுவையே வாழ்க!
பாரமற்ற பாரமே!
நீ வந்தால் இணக்கமாக
உன்னை ஏற்றுக்கொள்வேனே.
கர்த்தராலே
நீ அனுப்பப்பட்டது.

௨ இந்த நிந்தை லச்சையல்ல,
இது வெட்கம் அல்லவே,
சோதனை பொல்லாங்குக்கல்ல,
நீதிக்காக வந்ததே. சீருண்டாக்க
யேசுநாதர்
நிந்தைப் பாடுபட்டாரே.

Digitized by Google

௩ சிலுவையின் கீழ்த் தவிக்கும்
தம்முடையவர்களை
யேசுநாதர் ஆதரிக்கும்
அன்பிரக்கம் எத்தனை!
துன்ப காலம்
நீதிமானுக்கின்பமாம்.

௪ கர்த்தரைப் பின்செல்வோமாக
சிலுவையின் தோழரே,
கர்த்தரை மகிழ்ச்சியாக
தோத்திரிப்போமாகவே.
கர்த்தர் தாமே
அன்புடன் மரித்தாரே.

௫ லோகம் நம்மை மா இகழ்ச்சி
பண்ணிச் சங்கரிக்கவே,
கர்த்தராலே மா மகிழ்ச்சி
ஆறுதல் கிடைக்குமே.
அதற்காக
நாயனுக்கே தோத்திரம்.

170 7's. **Wilmot.**

Brotherly love.

௧ ஆ! சகோதரர் ஒன்றாய்
ஏகமான சிந்தையாய்

சஞ்சரித்தால் எத்தனை
நேர்த்தியான இனிமை!

௨ அதை ஆரோன் சிரசில்
ஊற்றுண்டோடும் எண்ணெயில்
வீசுஞ் சுகந்தத்துக்கு
ஒத்ததாயிருப்பது.

௩ அது எர்மோன் மேலேயும்
சீயோன் உச்சிகளிலும்
பெய்கிற ஆகாயத்து
நற்பனிக்கும் ஒப்பது.

௪ அங்கேதான் தயாபரர்
ஆசீர்வாதம் தருவர்,
அங்கெப்போதும் என்றைக்கும்
வாழ்வுண்டாகிப் பெருகும்.

171 7's. Hampton. Lancaster.

Brotherly love.

௧ மேய்ப்பரே நீர் கிருபை
செய்து சிதறுண்டதை
மந்தையாக்கி யாவையும்
சேர்த்தணைத்துக்கொண்டிரும்.

Digitized by Google

௨ எங்கள் நெஞ்சிற் சகல
நற்குணங்கள் பெருக
தேவ அன்பை அதிலே
வைத்தரும் யேசுக் கிறிஸ்துவே.

௩ நீரே நெஞ்சை நெஞ்சுடன்
கட்டி நேசத்தின் பெலன்
எங்கும் எந்த நாளிலும்
தோன்றக் கட்டளையிடும்.

௪ மூன்றொன்றாகிய பிதா
சுதன் ஆவியும் எல்லா
நாளும் ஒருமைப்படும்
போல் இம்மக்களையாக்கிடும்.

172 7, 6. Missionary.

Casting our cares on God.

௧ உன் நெஞ்சிலே உண்டான
விசாரம் யாவும் நீ
கர்த்தாவின் உண்மையான
நடத்தைக்கொப்புவி.
வையத்தை ஆண்டுகொள்ளும்
மகா தயாபரர்

Digitized by Google

உன் காரியங்களுக்கு
வகை உண்டாக்குவார்.

௨ சயமடைந்து வாழு
கர்த்தாவைப் பிள்ளைபோல்
நீ நம்பி மனதார
பணிந்து பற்றிக்கொள்.
உன் யோசனையிலே
பயம் வத்திக்குமே,
பொறுத்துப் பத்தியாலே
நீ வேண்டிக்கொண்டிரு.

௩ பராபரன் செய்யட்டும்,
தெய்வீக கைத்திறம்
நன்றாகவே நடத்தும்,
உன்பேரிலே உண்டாம்
மிகுந்த துக்கம் யாவும்
கர்த்தாவின் செய்கையாய்
தெளிந்துபோம் - என்றைக்கும்
மகிழ்ந்து பாடுவாய்.

௪ நீ பத்தியை விடாமல்
பொறுத்திருக்கையில்,

Digitized by Google

கத்தர் நீ சிந்தியாமல்
இருக்கும் நேரத்தில்
உன் துக்கத்தை அகற்ற
வகையைக் காண்பிப்பார்,
நிசத்துக்காகப் பட்ட
இக்கட்டை நீக்குவார்.

173 L. M. Portugal.

Trust in God.

௧ கத்தாவை நல்ல பத்தியால்
எப்போதும் நம்பும் நீதிமான்
எத்தீங்கிலேயுங் கத்தரால்
ரட்சிப்படைந்து பூரிப்பான்.

௨ சந்தோஷிஞ்செய்ய ஏற்ற நாள்
அவர் தெரிந் திருக்கிறார்,
தண்டித்த பின் மகிழ்ச்சியால்
சன்மார்க்கனை நிரப்புவார்.

௩ உன் காரியத்தை நலமாய்
திருப்ப வல்லவருக்கு
நீ ஒப்புவித்தால் நிசமாய்
விசாரிப்பார் - அமைந்திரு.

Digitized by Google

௪ மன்றாடிப் பாடி பத்தனாய்
நடந்துகொண்டும் வேலையை
மெய்யோடுசெய்து உண்மையாய்
பணிந்துகொள்-ரட்சிப்பாரே.

174 C. M. Arlington.

Trust in God.

௧ கர்த்தாவின் சித்தம் நல்லது,
விவேகமாகவே
விளங்கிடும் செயலுக்கு
அடங்க வேண்டுமே.
௨ இக்கட்டிலும் ரட்சிப்பாரே,
மந்தாரம் போக்குவார்,
மிகுந்த ஊக்கமாகவே
இரு-அருள் செய்வார்.
௩ கர்த்தாவின் சித்தம் நல்லது,
கெடுக்க மாட்டாரே,
தகப்பன் தான் தன் பிள்ளைக்கு
விஷத்தைப் போடானே.
௪ இதை அறிந்து நம்புவேன்,
அவர் ரட்சிப்பாரே,

Digitized by Google

இடைவிடாத அன்புடன்
சுகத்தைத் தருவாரே.

௫ கர்த்தாவின் சித்தம் நல்லது,
சந்தோஷ நாளிலும்
என்னைத் திருத்த நெஞ்சுக்கு
உண்டாகும் நோவிலும்

௬ அவர்க்கு நான் அடங்குவேன்,
பலத்த தேவனார்
இருட்டை நீக்கிச் சோதியே
விளங்கப் பண்ணுவார்.

175 C. M. Rochester.

Trust in God.

௧ கர்த்தாவுக்குட் சந்தோஷமாயி
இரு நிதானனே,
உன்னை மிகுந்த திட்டமாய்
விசாரிப்பாருண்டே.

௨ அவர் கொடுத்த வார்த்தையை
நீ நம்புவாயானால்
உன் நெஞ்சிலே சந்தோஷத்தை
அனுக்கிரகஞ் செய்வார்.

Digitized by Google

௩ உன் ரட்சகர் உன் வன்மையாய்
இருந்து ஆளுவார்,
உன் வேண்டுதற்குத் தக்கதாய்
பலத்தையே இவார்.

௪ ஓர்வேளை உன் சரீரக்கண்
அதைக் காணமற் போம்,
நம்பிக்கையான மனக்கண்
அதைத் தரிசிக்கும்.

௫ மிகுந்த சோதியாகவே
உன்னிற் பிரவேசிப்பார்,
சிறந்த மாதலத்திலே
உன்னை நடத்துவார்.

௬ அவர் சயித்தார் ஆகையால்
நீயுஞ் சயங்கொள்வாய்,
அவரிடத்தில் அன்பினால்
சிறப்பாய்ப் பூரிப்பாய்.

176 7, 6. Cheerful Hope.

Trust in God.

௧ கர்த்தரை நம்புவாரை
ஓர்காலுங் கைவிடார்,

Digitized by Google

கெட்டோரின் உக்கிரத்தை
அடக்கிப் போடுவார்.
சன் மார்க்கரைப் பலத்த
கையால்த் தயாபரர்
ரட்சித்துத் தாழ்ச்சியற்ற
அன்பாய் விசாரிப்பார்.

௨ கத்தாவின் சித்தத்துக்கு
உட்பட்டடங்குவேன்,
அதாலே சீவனுக்கு
எதிர்கொண்டேகுவேன்.
உலோக வாழ்வின் பாதை
செல்லேன்-இயேசுவை
பின்பற்றி இங்கு வாதை
சகிப்பதே நன்மை.

177 7, 6. Romaine.

Safety from trusting in God.

௧ கத்தர் உன் பக்கமானால்
பயமில்லாதிரு,
உபத்திரம் உண்டானால்
மன்றாடிக்கொண்டிரு,

Digitized by Google

அதால் உன்மேலே வந்த
பொல்லா வினை எல்லாம்
சயிக்கப்பட்டிறந்த
சவம் போல் நாசமாம்.

௨ கத்தர் தானே துணையும்,
உன் நேசருமாமே,
குறைவில் தேவ கையும்
உன்னை நிரப்புமே.
எல்லா இக்கட்டிலேயும்
உன் நோவு யாவிலும்
அதே சகாயஞ் செய்யும்,
சந்தோஷத்தைத் தரும்.

௩ உன் நெஞ்சின் அஸ்திவாரம்
மேலான கத்தரே,
அதில் நீ மா விஸ்தாரம்
அடைந்து நிற்பாயே.
அவர் உன் ஆஸ்தி தானே,
உன் சீவனிற் பெலன்,
நீயோ உன்னாலே தானே
மெய்யாய்த் தகாதவன்.

Digitized by Google

௪ உன் உள்ளமே களிக்கும்;
துக்கிக்க வேண்டுமா?
கர்த்தர் உன்மேல் உதிக்கும்
பகலோன் அல்லவா?
பரத்தில் வைக்கப்பட்ட
அனந்த பூரிப்பே
உன் ஆவிக்குப் பலத்த
திடன் உண்டாக்குமே.

178 C. M. Dedham.

Trust in God in view of past mercies.

௧ ஆ! களிகூர்ந்து பூரித்து
மகிழ் என் மனமே,
பராபரன் தாம் உனது
அனந்த செல்வமே.

௨ நெஞ்சில் இராவும் பகலும்
துக்கிப்பதென்ன நீ
உன் சிந்தனை அனைத்தையும்
கர்த்தாவுக்கொப்புவி.

௩ உன் சிறு வயது முதல்
பராபரித்தாரே;

கர்த்தாவால் வெகு மோசங்கள்
விலக்கப்பட்டதே.
௪ இந்நன்மையாற் கர்த்தாவுக்கு
நற்பிள்ளைக்கேற்றதாய்
எப்போதும் கீழ்ப்படிந்திரு,
அப்போது வாழுவாய்.

179 C. M. Cambridge.

"My God, my portion and my love."

௧ என் தேவனே என் செல்வமே,
நீர் நித்த மாட்சிமை,
விஸ்தார வையகத்திலே
நீரே என் வாஞ்சனை.

௨ இவ்வானமும் இப்பூமியும்
மிகுந்த அற்பமே,
இவைகளில் ஒன்றாகிலும்
உமக்கொப்பில்லையே.

௩ சினேகிதருஞ் செல்வமும்
கொடுப்பவர் நீரே,
அவையும் நன்மையாகிலும்
என் தேவன் அல்லவே.

Digitized by Google

௪ பிரகாசமான வெள்ளி பொன்
உமக்கொப்பாகுமா?
பொன் சுற்றத்தார் மகா அரணை
என்னை ரட்சிக்குமா?

௫ உலோக ஆஸ்திகள் எல்லாம்
என் சொந்தமாகிலும்,
நீரே என்னில் இராவிட்டால்
என் நெஞ்சு நோய்ப்படும்.

௬ அது நிமித்தங் கத்தரே
உம்மைக் கொடுத்திடும்,
நீர் நிறைவான ஆஸ்தியே,
நீரே சமஸ்தமும்.

180 S. M. Dover. Lisbon.

"My God, my life, my love."

௧ என் சீவனாகிய
அன்புள்ள கத்தரே,
ஆ! தேவரீரை விட்டோனாய்
பிழைக்க மாட்டேனே.

௨ உமது பெலனால்
எல்லாம் உண்டாயிற்று.

Digitized by Google

நீர் செய்யும் மா இரக்கத்தால்
எல்லாம் நிறைந்தது.

௩ ஆ! உம்மைக் கர்த்தரே
எப்போதுந் தேடுவேன்,
ஆ! உம்மை நோக்கி யேசுவே
நான் என்றுஞ் சிந்திப்பேன்.

௪ உம்மாலே தோன்றிய
கிருபை அதுவே
என் நெஞ்சிலுள்ள கொடிய
துக்கத்தை நீக்குமே.

௫ நீர் இங்கிருக்கையில்
பரம செல்வமே,
நீர் இங்கிராத வேளையில்
நரக வாதையே.

௬ உமது பட்சமே
மிகுந்த இன்பமாம்,
எனக்கும்மாலே தேவனே
கதி கிடைக்கலாம்.

௭ தூதர் அனைவரும்
நீர் செய்த தயவை

Digitized by Google

அதிசுதமக்குத் தோத்திரம்
செய்வார்கள் கர்த்தரே.

௮ நீரே இராவிட்டால்
பூமியும் வானமும்
மெய்யான களிப்பற்றதால்
வனாந்தரமாகும்.

௯ அன்பென்னுங் கடல் நீர்,
என் மனவாஞ்சையே,
நீர் ஸ்தோத்திரம் ஆற்றுகிறீர்,
எனக்கிரங்கவே. Winkler

181 **C. M.** **Howards. Christmas.**

"My God the spring of all my joys."

௧ என் களிப்புக்குக் காரணம்
என் செல்வச் சீவனே,
பகலிலே என் மகிமை
ராவில் என் சோதியே.

௨ இருளிலே நீர் தோன்றினால்
என் மனம் மகிழும்,
நீர் காலை வெள்ளியானதால்
எல்லாம் பிரகாசியும்.

Digitized by Google

௩ தன் தயை யேசு காண்பித்து
என் செல்வமானதால்
என் ஆத்துமாச் சந்தோஷித்து
நிறையும் வாழ்வினால்.

௪ பெறுவேனாகில் அதனை
பூமியை வெறுப்பேன்,
கர்த்தாவைக் கண்டு துதிக்க
விரும்பித் தேடுவேன்.

௫ நரகத்துக்குஞ் சாவுக்கும்
அஞ்சாமல் நடப்பேன்,
தேவன்பும் விசுவாசமும்
சிறகாய்ப் பறப்பேன்.

182 S. M. Silver Street.

"Come ye that love the Lord."

அன்புள்ள நேசரே
எல்லாருங் கூடுங்கள்,
மகிழ்ச்சியாய்க் கர்த்தாவுக்கே
சங்கீதம் பாடுங்கள்.

Digitized by Google

உ கர்த்தாவின் மார்க்கத்தில்
தவிப்பு இல்லையே,
அதே தவிக்கும் நெஞ்சத்தில்
மகிழ்வுண்டாக்குமே.

௩ அதைவிட்டோடினோர்
துக்கிக்க நியாயமே,
கர்த்தாவை அன்பாய்ப் பற்றினோர்
களிக்க ஏற்குமே.

௪. ஓ விஸ்தார லோகத்தை
விசாரித்தாள்பவர்
மின் காற்று மா கடல்களை
நடத்திக்கொள்பவர்.

௫ இவ்வல்ல தேவனே
நமக்குத் தந்தையார்,
பிள்ளைகள்போல நம்மையே
பரத்தில் ஏற்றுவார்.

௬ அங்கே மகிழ்ச்சியாய்
அவரைக் காண்போமே,
அங்கே அனந்த பூரிப்பாய்
சுத்தோர்களாவோமே.

௭ அங்கே எழும்புமுன்
அதை நினைக்கையில்,

Digitized by Google

ஆம்மாட்சிமை இந்நெஞ்சத்துள்
சந்தோஷிஞ் செய்யுமே.
அ இவ்வண்ணமாக நாம்
இவ்வையகத்திலே
மகிழ்ச்சியாகப் பாடலாம்
கலக்கம் இன்றியே.

183 8, 7. Sicilian Hymn.

Christian life a pilgrimage.

க நாங்கள் மோட்ச செல்வம் நோக்கி
போவோமென்று சொல்லுவோம்,
சுவாமி வாரும் வழி காட்டி
பெலனைத் தந்தருளும்.
துக்கம் இன்றி உம்மிற் சாய
அருள் செய்யுங் கத்தரே.
உ பூமி துன்பப் பள்ளமாகும்,
நாங்கள் பரதேசிகள்,
அதை விட்டு உம்மைத் தாவும்
நெஞ்சையுடையவர்கள்.
மோட்ச சோதி அக்களிப்பும்
எங்கள் மா சுதந்திரம்.
ங நாங்கள் தங்கும் ஊர் இதல்ல,
காணு ஊரைத் தேடுவோம், தேசங்

Digitized by Google

மோட்ச தேசம் நோக்கிச்செல்லு
தவறாமல் நடப்போம்.
சுத்தர் தங்கும் சீயோன் நகர்-
கத்தர் அதைக் கட்டினர்.

௩ பலனற்ற லோகம் விட்டு
முத்தி மார்க்கம் ஓடுவோம்,
பலத்திற் கதித்துக்கொண்டு
வெற்றியுள்ளோராகுவோம்.
புதுச் சீயோனைக் காண்பது
எங்கள் ஆவலானது.

௪ எங்கள் பாவந் தீர்த்துக்கொண்ட
உம்மாற் சுகமடைவோம்,
மோட்ச ஸ்தலங் கிட்டிவர
களிப்புடன் பாடுவோம்.
ரூபமாறும் நெஞ்சந்தானே,
அவர் சாயல் மோட்சமே.

184 8, 7, 4. Tamworth.

God the pilgrim's guide.

க ஆ! மகா உயர்ந்த நாதர்
நிலையற்ற லோகத்தில்
தவறின்றி நான் நடக்க
ஊக்கமற்ற நெஞ்சத்தில்

Digitized by Google

நீர் பலத்தை
அளித்தென்றும் போஷியும்.
௨ நற்சுகத்தை ஈயும் ஊற்றை
நீர் திறந்து ஊற்றிடும்,
மேகந் தீபமாம் ஸ்தம்பத்தை
முன்னும் பின்னும் வைத்திடும்;
மா பலத்த
மீட்பரே திடன் கொடும்.
௩ யோர்தான் ஆற்றை நான் கடக்கும்
போது என்னைத் தேற்றிடும்,
சாவு நாசரே நடத்தும்,
அக்கரையில் சேர்த்திடும்.
என்றென்றைக்கும்
உம்மைப் போற்றிப் பாடுவேன்.

185 8, 7, 4. Littleton. Zion.

"Guide me O thou great Jehovah."

௧ பாதை காட்டும் மா யெகோவா!
பரதேசியான நான்
பலவீனன் அறிவீனன்,
இவ்வுலோகங் காடுதான்.
வானகாரம்
தந்து என்னைப் போஷியும்.

Digitized by Google

௨ சீவ தண்ணீர் ஊறும் ஊற்றை
நீர் திறந்து தாருமேன்,
தீப மேக தம்பங் காட்டும்,
வழியில் நடத்துமேன்.
வல்ல மீட்பர்!
என்னைத் தாங்கும் யேசுவே.

௩ சாவின் அந்தகாரம் வந்து
என்னை மூடும் நேரத்தில்
சாவின்மேலும் வெற்றி தந்து [ல்
என்னைச் சேர்க்கும் மோட்சத்தி
கீத வாழ்த்தல்
உமக்கென்றும் பாடுவேன்.

186 S. P. M. Dalston.

Prayer.

௧ விண்ணப்பத்தைக் கேட்டும்
கத்தாவே இன்றைக்கும்
நமது வேண்டுதலையே
கேட்டுமதருளை
பெற அடியாரை
ஆசீர்வதியுங் கத்தரே.

௨ பிதாக்கள் பொருளை
பிள்ளைக்கு நேசமாய்

Digitized by Google

கொடுக்கும்போலத் தேவரீர்
உமது தொண்டரும்
கேட்கும் யாவற்றையும்
இரக்கத்தோடு தருவீர்.
௩ நீர் மோட்ச பிதாவாம்,
ஏழைப் பிள்ளைகள் நாம்-
உம்மைக் கண் நோக்க அருளும்,
உமது சித்தமே
எமக்கு நயமே [ம்.
என்றெண்ணி என்றுந் துதிப்போ

187 L. M. Duke Street.

The Lord's prayer.

௧ மா சோதியாம் பரத்திலே
இருக்கும் எங்கள் பிதாவே,
உமது நாமஞ் சுத்தமாய்
வழங்கப்பட உண்மையாய்.
௨ நீர் என்றும் ஆளும் ராச்சியம்
வருவதாக-நின் சித்தம்
பரத்திற் போல் இகத்திலும்
நடப்பதாக முழுதும்.
௩ தினமும் அடியாருக்கு
வேண்டும் ஆகாரங்கொடுத்து

Digitized by Google

நாங்கள் மன்னிப்பதற்கொப்பாய்
மன்னியும் நீரும் எங்களை.

௪ சோதனையை விலக்கியே
பொல்லாங்கில் நின்று நீக்கியே
பசாசை ஓட்டியருளும்,
எமக்கு வழிகாட்டிடும்,

௫ உமக்கே ராசரிக்கமும்
வல்லபமும் கீர்த்தியும்
என்றென்றும் அதிகரித்து
உண்டாகவே கடவது. ஆ.

188 L. M. **Hebron. Wells.**

Access to the throne of grace through the death of Christ.

௧ இரக்க ஆசனத்தைப்பார்-
அதற்குன்னை அழைக்கிறார்,
அங்கே அன்புள்ள தேவனார்
வேண்டுதல் கேட்டருளுவார்.

௨ ரட்சகரின் இரத்தமே
நமக்குச் சிந்தப்பட்டதே,
அதே கர்த்தர் முன்பாகவே
உன் பாவ நாசமாயிற்றே.

Digitized by Google

௩ என் சித்தமே, உன் இஷ்டத்தின்
படிக்குக் கேள்-நல் மீட்பரின்
இரத்தஞ் சிந்தப்பட்டதால்
அவர் கொடாதிருப்பாரா?

௪ உன் மீட்பரின் சாயலையும்
உனக்கு வேண்டும் யாவையும்
அவரில் அன்பு வல்லமை
கொடுக்குமே-அதை நீ கேள்.

189 C. M. Peterborough.

Faith.

௧ சுத்தாங்கமாக்கும் நெஞ்சத்தை
மெய் விசுவாசந்தான்,
காணாத காரியங்களை
காட்டும் விசேஷமாம்.

௨ தேவன் உலகஞ்சிட்டித்தார்
வான் பூவும் ஆழியும்
நீதி செலுத்த வருவார்
என்றிவையை நம்பும்.

௩ முன் பின் நடக்கும் யாவையும்
மெய்யென்று ஏற்குமே,

Digitized by Google

தற்செயலாய் ஒன்றாகிலும்
செல்லாதென்றெண்ணுமே.

௪ ஆபிரகாமே முதலாய்
அம்புவியிற் பத்தர்
யாவரும் விசுவாசமாய்
கதியை அடைந்தார்.

௫ நாமும் அவர்களுக்கொப்பாய்
சிற்றின்பை வெறுப்போம்,
பேரின்பம் பெறும்படியாய்
யேசுவை நம்புவோம்.

௬ மெய் விசுவாசம் அவரை
நம்பி பின்பற்றுமே,
இந்தருள் பெற்ற பாவியை
ரட்சிப்பார் யேசுவே. Bailey

190 **C. P. M.** **Ganges. Norwich.**

Faith the gift of Christ.

௧ நம்பிக்கை ஈயும் யேசுவே,
நான் அழியாமல் வாழவே
நீர் ஆசைப்படுகிறீர்.
என் கண் திறந்திரட்சிப்பை

Digitized by Google

அளித்து நித்திய ஜீவனை
கொடுக்கக் கடவீர்.

உ இருளை நீர் நீக்காவிட்டால்
உம்மை அவிசுவாசத்தால்
காணாமல் அஞ்சுவேன்.
உமது பேர் என் மனதில்
வெளிப்படுத்தி எழுதில்
அன்போடாராதிப்பேன்.

௩ தெய்வீக விசுவாசத்தை
அடைவது மா கிருபை
என்றறிவேனே - நீர்
சிலுவையில் எல்லோர்க்குமாய்
மரித்துப் போனீரென்றதாய்
காண்பித்துணர்த்துவீர்.

191 **L. M.** Old Hundred.

Insufficiency of human wisdom.

க என் சன்மத்தால் என் புத்தியில்
இருள் பிடித்திருக்கையில்,
என்னெஞ்சுக்குத் துற்குணமும்
உண்டே கலக்க நினைவும்.

Digitized by Google

உ யாதொருவன் மூர கல்வியை
கற்றாலுந் தேவ பயத்தை
அடையானேயாகில் அவன்
எல்லாரிலும் நிற்பாக்கியன்.

௩ தன் இச்சைப்படி செய்பவன்
பொல்லாங்குக்குத் தப்பாதவன்,
அகந்தையுற்ற சிந்தையான்
எத்திக்கிலும் இடறுவான்.

௪ அனேகர் தங்கள் புத்தியை
சார்வதினாலே தங்களை
பசாசுடைய கையிலே
அகப்படுத்துவார்களே.

192 L. M. **Uxbridge.**

Prayer for true wisdom.

௧ ஆ! என் பிதாவே என்னிலே
இருக்கும் அறிவின்மையே
அகற்றிப் புது நெஞ்சையும்
குணத்தையுந் தந்தருளும்.

உ என்றைக்குமுள்ள மூதலை
இருக்குந் தேவ ஞானத்தை

Digitized by Google

என் ஆத்துமாவுக்கருளும்,
இவ்வேண்டுதலைக் கேட்டிடும்.

௩ அதும்பிலே பிறந்தது
அதினுடைய மேன்மைக்கு
ஒப்பில்லைப் புண்ணியம் எல்லாம்
அதின் வரங்களால் உண்டாம்.

௪ பிழைக்கவுஞ் சுகிக்கவும்
அதே வழியைக் காண்பிக்கும்,
அதின் சொற்கேட்கும் மனிதன்
செத்தும் பிழைத்திருப்பவன்.

௫ ஆ! எனக்கும் நீர் தயவை
செய்துமுமுடைய ஞானத்தை
என் ஏழை ஆத்துமாவிலே
இருக்கச் செய்யும் பிதாவே.

193 **C. M.** **Dedham.**

Holy Scriptures.

௧ தேவாவியால் இரக்கமாய்
உண்டான வேதமே
உயர்ந்த ஞானமுள்ளதாய்
நமக்குண்டாயிற்றே.

Digitized by Google

௨ அதிற் பிறந்த போதனை
விளக்கைப் போலவே
கதிக்குப் போகும் மார்க்கத்தை
விளங்கக் காட்டுமே.

௩ மெலிந்து போன நெஞ்சத்தில்
மிகுந்த ஆறுதல்
கண்ணீர் உகுக்கும் பள்ளத்தில்
அதால் உண்டாகுமே.

௪ இருள் நிறைந்த பூமியில்
அதே நடத்துமே,
பரத்தை நோக்கிப் போகையில்
வெள்ளியைப் போலாமே.

௫ அதைக் கர்த்தர் கொடுத்ததே
மகா அன்பாயிற்று,
அதைக் குறித்தென் நெஞ்சமே
சந்தோஷமாயிரு.

194 **C. M.** **Arlington.**

Holy Scriptures.

௧ சத்திய வேதம் முழுதும்
நமக்குண்டாயிற்றே,

Digitized by Google

அதற்கு நாம் இஸ்தோத்திரம்
செலுத்த நியாயமே.

௨ நம்மாத்துமாவுக்கதனால்
வெளிச்சந் தோன்றுமே,
அதாலேயன்றி எங்களால்
இருட்டு நீங்காதே.

௩ அதை நாம் சாந்தவிதமாய்
ஆராய்ந்து வாசித்தால்,
அப்போது கத்தர் தயவாய்
தமது ஆவியால்

௪ அதின் மெய்யான பொருளை
விளங்கப் பண்ணுவார்,
அதோடே புத்தி ஞானத்தை
நமக்கு அருள்வார்.

௫ கத்தாவே உமதாவியை
என் மேலே ஊற்றிடும்,
வேதத்துக்கேற்றதாய் என்னை
நடக்க அருளும்.

Muller
Digitized by Google

195 **P. M.** **Luther's Hymn.**

Holy Scriptures.

௧ கர்த்தாவே நாங்கள் நெஞ்சத்தில்
மெய் ஞானமற்ற மாந்தர்,
நற்புத்தியைத் தாராவிடில்
எப்போதும் புத்தியீனர்.
உம்மால் உண்டான வேதமும்
அதோடே உமதாவியும்
நற்சிந்தை காட்ட வேண்டும்.

௨ வேதத்துக்காக தோத்திரம்
உமக்குண்டாவதாக,
தெய்வீக வார்த்தையைத் தினம்
எல்லாரும் பத்தியாக
தியானம் பண்ணி யோசித்து
கைக்கொள்ள நீர் கடாட்சித்து
நல்லாவியைச் செலுத்தும்.

௩ பிதாவே எங்கும் உமது
நல்வார்த்தை செல்வதாக,
இயேசுவே நீர் காட்டிய
வகையிற் போவோமாக,

Digitized by Google

தேவாவி எங்கள் உள்ளத்தில்
இறங்கி வார்த்தையால் அதில்
நற்சீரைச் செய்வாராக.

196 L. M. Duke Street.

Holy Scriptures.

௧ வானப் பிதாவே உமது
அருளால் வந்த வேதமே
பூரணமுள்ளதாயிற்று,
அதால் ஆன்மா சீராகுமே.

௨ தேவருளான வாக்கியும்
சத்தியஞ் சுத்தமானதே,
உமது கற்பனைகளும்
மிகுந்த செம்மையானவே.

௩ கர்த்தாவே நின் நியாயங்கள்
நன் நீதி சுத்தம் மேன்மையே,
தங்கத்தைப் பார்க்க அவைகள்
விரும்பப்படத் தக்கதே.

௪ அவைகளாலே மனிதர்
இருளை நீங்கி ஞானத்தில்

Digitized by Google

வந்தும்மைக் கண்டு களிப்பார்
என்றைக்குமுள்ளமோட்சத்தில்.

ரு இவ்வேதத்தை எத்தினமும்
படித்து ஓதி உமக்கே
என் நெஞ்சத்தைப் படைக்கவும்
கடாட்சஞ்செய்யும் கர்த்தரே.

Gregory

197 7's. Wilmot. Hampton.

"Holy Bible, book divine."

க பரிசுத்த வேதமே,
விலைபெற்ற செல்வமே,
நீயே தேவ புத்தகம்,
நீயே நல்ல பொக்கிஷம்.

உ நான் இன்னான் எவ்விடத்தான்
வரும் வாழ்வு என்னவாம்
சொல்லும் புத்தகம் நீயே,
நீ என் வழிகாட்டியே.

௩ யேசு உண்டுபண்ணின
பாவமீட்பைச் சொல்லிய
நல்ல சாட்சி நீ தானே
என்னை நியாயந் தீர்ப்பதே

Digitized by Google

ச துன்ப காலம் ஆறுதல்
உண்டு-உன்னுற் சாகுதல்
விசுவாசம் உள்ளோர்க்கே
இன்பமாகுமென்கிறுயே.

ரு மோட்ச பாக்கியத்தையும்
பாவி படும் பாட்டையும்
கூறுந் தேவ புத்தகம்
நீயே-நீ என் பொக்கிஷம்.

198 S. M. St. Thomas.

Holy Scriptures, (for a child.)

க நான் சிறுவயதே
மெய் வேத வாக்கியம்
ஆராய்ந்துபார்ப்பேன்-அதுவே
எனது பாக்கியம்.

உ நற்கதி வேதத்தில்
அடைந்ததால் நானே
மகிழ்ச்சியோடே அவரில்
அன்பாயிருப்பேனே.

௩ அறியாப் பேதைக்கு
வேதம் இலாபமே.

Digitized by Google

இருள் நிறைந்த பாதைக்கு
அதே நத்தீபமே.

௪ அதை ஆராயவே
நன் மதியைத் தாரும்,
அதால் என் பாவம் போக்கவே
சுத்தாவியைக் கொடும்.

௫ அவ்வீவுக்காக நான்
புகழ்ச்சி அவர்க்கே
நன் மனத்தோடே நித்தம் தான்
செலுத்த நியாயமே. Muller

199 L. M. Duke Street

The Sabbath welcomed.

௧. வெற்றி சிறந்த யேசுவே,
நாம் செய்த பாவம் யாவையும்
நிவிர்த்தி செய்த நாள் இதே,
புகழ்ச்சி கீர்த்தி என்றைக்கும்.

௨. வானோர் பாடின ஓசையால்
வானம் நிரம்பிக் களிக்கும்,
தூதர்கள் யாரும் மாஅன்பால்
சாட்டாங்கமாய் வணங்கவும்.

Digitized by Google

௩ ஆ! தோழரே, விண்ணோரைப்போல்
வெற்றிசிறந்த நாயனை
நாம் பாடிப் போற்றும் வேளையில்
சுத்தாங்கடாம் ஆராதனை.

௪ நாம் அங்கே சேர்ந்து பாடியே
மாட்சிமை கொண்டு வாழுவோம்,
பரத்திற் சேனையுடனே
வணக்கமாய்க் கொண்டாடுவோம்.

௫ வாழ என்றைக்கும், மீட்பரே
விண் மண் தலத்தோர் யாவரும்
கீர்த்தனஞ் செய்து அன்போடே
வணங்கிப் பாடிப் போற்றிடும்.

Rockwood

200 L. M. Uxbridge.

The Sabbath welcomed.

௧ என் கண் திறந்து பூரிப்பாய்
சந்திவெழுப்பைக் காண்கிறேன்,
என் சிந்தை உம்மிடத்திற்றான்
வணக்கமாய்ச் செலுத்துகிறேன்.

உ உமக்கேயன்றி இதயம்
வேறொருக்குங் கொடுத்திடேன்

Digitized by Google

அதில் உமது ஆசனம்
நிறுத்தி ஆளுங் கத்தரே.

௩ இவ்வுலகத்தை நீக்கியே
மாமிச இச்சை தள்ளிடும்
வீணாசை பாவ எண்ணமே
என்னைத் தொலைத்து விட்டிடும்.

௪ பரத்திற் சேருங் காலத்தில்
கம்பீரமாய் என் நெஞ்சமே
கத்தாவின் அன்பைக் கூறுகில்
தூதர்க்களோடிருக்குமே. *Rockwood*

201 **L. M.** **Old Hundred.**

The Sabbath.

௧ இதே கத்தாவின் ஓய்வாம்,
விசாரம் வேலையை எல்லாம்
மறந்து தேவ நன்மையை
சந்தோஷமாகவே நினை.

௨ கத்தர் படைத்தவை எல்லாம்
அவர்க்கு மா புகழ்ச்சியாம்,
இருள் இருந்த பொழுதே
வெளிச்சந் தோன்றச் செய்தாரே.

Digitized by Google

ரு விசேஷமாகப் பாவத்தை
நிவிர்த்திசெய்த மாதயை
அவர் விளங்கச் செய்ததால்
ரட்சிப்பு மாந்தருக்குண்டாம்.

ச அதின் மிகுந்த சோதியில்
இக்காலத்தோர் நடக்கையில்
எல்லாரும் மா அன்பாகவே
அதைப் புகழ்வோமாகவே.

202 L. M. Wells.

The Sabbath.

க உன்னதமான கத்தரே
இந்நாளை நியமித்தீரே,
அதற்காய் உம்மை நித்தமும்
போற்றிச் சேவித்துக் களிப்போம்.

உ அடியார் உமதாளுகை
இரக்கம் ஞானம் வல்லமை
பெலன் மகத்துவத்தையும்
மென்மேல் உணர அருளும்.

ங கெட்டோருக்கனுசாரமும்
ரட்சிப்பும் தித்தப் பூரிப்பும்

Digitized by Google

கிடைக்க இன்று ரட்சகர்
குழியை விட்டெழுந்தவர்.

௪ உயிர்த்தெழுந்த கிறிஸ்துவே,
நீர் எங்கள் ஆத்துமாவிலே
இருந்து எந்த நன்மைக்கும்
அடியாரை உயிர்ப்பியும்.

௫ தேவாவியே நல்லறிவும்
மெய் விசுவாசம் நேசமும்
சபையில் நீரே சொல்லிய
நல் வார்த்தையாலே பெருக.

௬ வெளிச்சந் தந்தடியாரில்
அன்பாகத் தங்கும் எங்களில்,
எல்லாங் கத்தாவின் மேன்மைக்கு
பலிக்கவே கடவது.

203 P. M.

"*Awake, awake &c.*" (*for a child.*)

௧ விழி விழி!
எழும்பு நீ
கத்தாவையே துதி,
விடிந்துபோக சூரியன்

Digitized by Google

உதிக்கப், போ நீ இந்நேரம்
வணக்கமாய்
களிப்புமாய்
கர்த்தாவையே துதி.

௨ இயேசுவே
காலையிலே
எழுந்து வெற்றியாய்
பசாசை சாவை யாவையும் [கும்
மேற்கொண்டாரே-நாம் என்றைக்
பின்பற்றுவோம்,
விண்ணிற் சேர்வோம்,
வெற்றி சிறந்தோராய்.

௩ ஆரம்பமாய்
எழுந்தோராய்
களிம்பு நோவின்றி
பளிங்கு போன்ற கடலில்
வணக்கஞ் செய்து நிற்கையில்
ஆ! யேசுவே,
என்றுமக்கே
செலுத்துவோம் துதி.

Digitized by Google

204 L. M. Old Hundred.

Divine worship.

௧ இங்கே சபையிடத்திலே
இரும் அன்புள்ள யேசுவே,
மெய் வேதமுஞ் சன் மார்க்கமும்
இங்கே விளங்கச் செய்திடும்.

௨ இதே நற்பிரியக் காலமாம்
கர்த்தாவே வேத வாக்கியம்
தன் முத்திரைகளோடேயும்
தரிக்கக் கட்டளையிடும்.

205 S. M. Dover.

Divine worship.

௧ அன்புள்ள யேசுவே
எங்களிடம் வாரும்,
உமது வாக்குப் படிக்கே
விண்ணப்பத்தைக் கேளும்.

௨ இன்றிங்கே ஏகமாய்
கூடியிருக்கிறோம்,

Digitized by Google

விண்ணப்பந் துதி உண்மையாய்
செய்யத் துணிகிறோம்.

௩ இவ்வாலயத்திலே
இங்குள்ள தேசத்தார்
கூடிவந்தும்மைத் தேடியே
வணங்கக் கடவர்.

௪ இத்தலமே பெத்தேல்
சாட்சியின் கூடாரம்
சீயோனின் தேவாலயமே
என்ற பேரிடலாம்.

௫ எங்கள் எல்லாரையும்
உமக்கே ஆலயம்
ஆக்கித் தெய்வீக மேன்மையும்
விளங்கப் பண்ணிடும்.

௬ பிதாச் சுதன் ஆவி
என்னுந் திரியேகரே
இன்றும் என்றும் எவராலும்
உமக்குத் துதியே.

Digitized by Google
Madura Assistant

206 L. M. **Rothwell.**

Divine worship.

௧ கர்த்தாவே இங்கே எங்களை
அன்பாய்ச் சேர்த்துமதாவியை
அதின் நல்லீவுகளையும்
அனுக்கிரகித்திரட்சியும்.

௨ பரத்தில் நாங்கள் சுவாமியே
நீர் சுத்த சுத்த சுத்தரே
என்றோதி உம்மை என்றைக்கும்
களித்துப் பார்க்குமட்டுக்கும்,

௩ தினமும் உம்மைப் பத்தியே
தேவன்பை நன்றாய் யோசித்தே
இருப்பதற்குப் புத்தியும்
நல்லாவியுங் கடாட்சியும்.

௪ ஒன்றாக ஆண்டிருக்கிற
திரியேக தெய்வமாகிய
பிதாக் குமாரன் ஆவிக்கே
இஸ்தோத்திரம் உண்டாகவே.

Digitized by Google

207 C. M. Howards. Dedham.

Divine worship.

௧ கர்த்தரே இந்த நேரத்தில்
சமீபமாயிரும்,
இங்கும்முடைய கோவிலில்
பிரகாசமாயிரும்.

௨ இங்கும்முடைய வார்த்தையை
பிரசங்கஞ் செய்கையில்
தேவாவி எங்கள் நெஞ்சத்தை
நிரப்பக் கேட்கையில்;

௩ வேண்டுதல் கேளுங் கர்த்தரே,
கடாட்சமாயிரும்,
அன்பினால் எங்கள் நெஞ்சமே
நிறையச் செய்திடும்.

௪ கடைசியில் அநேகம் பேர்
அங்கே குணப்பட்டேன்
என்றே அறிக்கை சொல்லுவார்
இருக்கச் செய்யுமேன்.

௫ பிதாவுக்குஞ் சுதனுக்கும்
தேவாவிக்கும் எல்லா

Digitized by Google

தலங்களிலும் என்றைக்கும்
புகழாம் அல்லவா?

208 **L. M.** **Wells.**

Divine worship.

௧ நன் மேய்ப்பரே இக்கூட்டத்தை
கண்ணோக்கிப் பார்த்திரட்சியும்,
அது பண்ணிநிருத்தலை
அரோசியாமல் ஏற்றிடும்.

௨ விண்ணப்பஞ் செய்ய வேண்டிய
நற்புத்தி கட்டளையிடும்,
தேவனைக் காட்டி ஏற்றதாய்
துதிக்கச் செய்திரட்சியும்.

௩ இவ்வாலயத்திற் சுத்தமாய்
பத்தியும் அன்பும் ஐக்கமும்
உண்டாயிருக்க மேன்மையாய்
கடாட்சம் பண்ணிரட்சியும்.

௪. உமது தேவ ஆவியால்
சனங்களுக்குப் புத்தியும்
தெய்வீக சிந்தையும் வந்தால்
நல்வார்த்தை மாட்சிமைப்படும்.

Digitized by Google

209 L. M. Uxbridge.

Divine worship.

க சபையே ஏக சித்தத்தை
அடைந்து பூரிப்பாகுங்கள்,
வணக்கமாகக் கத்தரை
எல்லாரும் வாழ்த்தல் செய்யுங்கள்.

௨ யெகோவாவே மெய்த்தேவனார்
எல்லாரையும் படைத்தாரே,
அவர் அனாதி தந்தையார்,
எல்லாரையும் ரட்சித்தாரே.

௩ இவ்வண்ணமான நன்மையை
குறித்து இவ்விடத்திலே
சந்தோஷிப்பட்டு நாயனை
துதித்தல் செய்யத் தக்கதே.

௪ தேவாவியே இரக்கமாய்
நல் யோசனையைத் தந்திடும்,
எல்லாரும் அன்பு உண்மையாய்
நல் வார்த்தை கேட்கச் செய்திடும்.

210 7's. Wilmot. Lancaster.

Marriage.

க லோகம் ஆளும் ஆண்டவர்
ஆணும் பெண்ணுஞ் செய்தனர்,

Digitized by Google

ரண்டு பேரும் வாழ்கவே
கட்டளை கொடுத்தாரே.

௨ ஆதலால் விவாகமே
நல் விசேஷமானதே,
அந்த நன்மைக்காக நாம்
நீதி செய்ய நியாயமாம்.

௩ தேவ சொல்லுக்கேற்றதாய்
தேவ பத்தியுள்ளோராய்
நடந்தால் மா நன்மையே
உங்களுக்கு ஈவாரே.

211 — L. M. — Portugal.

Marriage.

க இந்த இரண்டு பேரையும்
கர்த்தாவே பார்த்திரட்சியும்,
இவர்களாற் புகழ்ச்சியே
உமக்குண்டாவதாகவே.

212 — 7s. — Spaulding.

Marriage.

க வாழ்க நேசமுள்ளோரே,
இசைந்து சேர்ந்து கூடியே

களிப்புடன் கூடுவோம்,
வாழ்த்தல் சொல்லிப் பாடுவோம்.

௨ கர்த்தர் தாமே ஆதியில்
பாவமின்றிருக்கையில்,
தந்தை தாயும் ஏகமாய்
கூட்டினார் விவாகமாய்.

௩ ஆதிமுதலாய் வரும்
இந்த அருள் உத்தமம்,
மெய் விவாக தன்மைக்கே
தோத்திரிப்போமாகவே.

௪ நெஞ்சு நெஞ்சுடன் அன்பாய்
ஐக்கமாக்கித் தயவாய்
சமுசார வாழ்விலும்
காத்துக்கொண்டாட்டியும்.

௫ நாங்கள் யாரும் நேசமாய்
கூடுவோம் மா களிப்பாய்,
இன்றும் அன்றும் என்றைக்கும்
கர்த்தருக்குத் தோத்திரம்.

Digitized by Google

213 C. M. Rochester.

Morning Hymn.

க கர்த்தாவே போன ராவிலே
என்னை இரக்கமாய்
தற்காத்ததாலே உமக்கே
புகழ்ச்சி தக்கது.

உ இருளில் என்னை நீர் அன்பால்
எவ்விக்கினத்துக்கும்
விலக்கிக் காத்திராவிட்டால்
பொல்லாங்கு நேரிடும்.

ங அதற்கு நான் இஸ்தோத்திரம்
செலுத்த நிற்கிறேன்,
என்னில் நீர் பார்த்த தப்பிதம்
மன்னிக்கக் கேட்கிறேன்.

ச எந்நாளும் என்னைச் சத்துரு
கெடுக்கப் பார்க்குமே,
அனேகமான கண்ணிக்கு
நேர் போகப் பண்ணுமே.

ரு திரியேகரே இரக்கமாய்
என்னைக் காப்பாற்றிடும்,

Digitized by Google

விழித்துக்கொள்ள மா அன்பாய்
பலத்தைத் தந்திடும்.

214 **7, 6.** **Cheerful Hope.**

Morning Hymn.

க விடியற் காலமான
இந்நேரத்திலேயும்
வெளிச்சத்தை நான் காண
எல்லாப் பொல்லாங்கையும்
அடியேனை விட்டோட்டி
தற்காத்தீர் கத்தரே,
அதால் நான் உம்மைப் போற்றி
துதிக்க நியாயமே.

உ சபையை நன்றாய்க் காக்கும்
கத்தாவே இன்றைக்கும்
நீர் என்னை அன்பாற் பார்க்கும்
தகப்பனாயிரும்.
துரைகளை நடத்தும்
சபை அனைத்தையும்
இரக்கமாய்க் கடத்தும்
என்னோடேயும் இரும்.

Digitized by Google

215   7, 6.   Romaine.

Morning Hymn.

௧ நிர்ப்பந்தத்தை அன்பாக
நீர் போன ராவிலே
விலக்கினதற்காக
துதி என் கர்த்தரே.
ஆ! இந்த நாளின் வரைக்கும்
நான் செய்த தீமைக்கும்
எல்லாப் பிழைகளுக்கும்
மன்னிப்பையருளும்.

௨ மகா பொல்லாங்குகளை
பசாசு தனது
விஷமுங் கெடுமான
வினையால் எனக்கு
பொல்லாங்குகளையும் இன்று
செய்ய விடாதிருக்க,
நான் தப்பிக்கொள்வதற்கு
சகாயஞ் செய்திடும்.

௩ சருவத்துக்கும் வல்ல
உன்னத கர்த்தரே,
குறைவில்லாத நல்ல

விசாரிப்பட்டேன்
என் நோக்கம் நிறைவேற
கிருபை புரியும்,
அப்போதெல்லாம் முற்றுக
களிப்பாய் முடியுமே.

216 7's. Wilmot. Warren.

Morning Hymn for a child.

க பாலனுக்கும் எனக்கும்
பெற்றோர் சுற்றத்தாருக்கும்
என்றுஞ் சீவன் ஈந்தோரே
கர்த்தர் தான் என் மனமே.

உ சென்றுபோன ராவிலும்
துன்பம் மோசம் யாவுக்கும்
நீக்கிக் காத்த தேவனை
ஆத்துமாவே நீ நினை.

௩ துஞ்சலால் நல்லறிவு
அற்றுப்போன பொழுது,
உன்னைக் காத்து ரட்சித்தே
துதிசொல் என் மனமே.

Digitized by Google

ச பட்சி சாலம் ஓசையாய்
தேவனைத் துதிக்கவே
நீயுங் கூட இன்பமாய்
துதிசெய் என் மனமே.

ரு இன்றைக்கு நற்பாதையை
காட்டியே உன் அடியை
காத்துக்கொள்ள யேசுவை
வேண்டிக்கொள் என் மனமே. ஓ

217 • 8, 7. **Good Shepherd.**

Evening Hymn.

க என் கண்ணிமைகள் கர்த்தாவே
தூக்கத்தாலே மூடியும்
ஆத்துமா தன் வாஞ்சையாலே
தேவரீரைச் சார்ந்திடும்.
தூங்கினாலும் உம்மிடத்தில்
ஐக்கப்பட்டிருப்பேனே,
ராவிலே விழித்திருக்கில்
உம்மைப் பற்றிக்கொள்வேனே.

உ ஆசீர்வாதத்தை அளித்து
எனக்கிந்த ராவிலே

Digitized by Google

சுக நித்திரையைத் தந்து
என்னைக் காப்பீராகவே.
என் வீட்டாரும் இனத்தாரும்
நேசரும் பகைஞரும்
யாரும் பர வாழ்வு பெறும்
அன்பைக் காட்டி ரட்சியும்.

௫ அமளி திகில் வியாதி
மா யுத்தத்தின் கலகம்
வெள்ளந் தீ முதல் உபாதி
பெருவாரி விக்கினம்
உமதடியேனிடத்தில்
அணுக ஒட்டாதிரும்,
காலையில் எழும்ப உம்மில்
பாடக் கிருபை செய்யும்.

218 C. M. **Arlington.**

Evening Hymn.

௧ இருட்டுண்டாகவே இந்நாள்
முடிந்துபோகையில்,
இளைத்த யாவுந் தூக்கத்தால்
படுத்துக்கொள்கையில்,

Digitized by Google

உ கர்த்தாவே நீர் விழிக்கிறீர்,
உறக்கமற்றவர்;
இருட்டிலேயுந் தெளிவீர்
வெளிச்சமானவர்.

௩ கர்த்தரே என்னை மா அன்பாய்
நீர் இந்த ராவிலும்
நினைத்து என் தகப்பனாய்
என் பக்கத்தில் இரும்.

௪ என்றால் உண்டான பாவத்தால்
மனங் கலங்குமே,
ஆனாலுங் கிறிஸ்தின் ரத்தத்தால்
என் குற்றம் நீங்குமே.

௫ பரத்திலே இரட்சகர்
பிணையைச் செய்கிறார்,
மரித்துயிர்த்தெழுந்தவர்
மன்னிப்பை ஈகிறார்.

௬ இரக்கஞ்செய்த உமக்கிதை
புகழ்ச்சி நித்தமும்
செலுத்த வேண்டும் கர்த்தரே,
[illegible] [illegible].

Digitized by Google

219 C. M. Barby.

Evening Hymn.

க என் ஜீவன் இந்த ராவிலே
தூங்கும்போதிலும்,
என் ஆவியை உம்முடையே
அன்பாய்ச் சேர்த்தருளும்.

உ மரித்தும் உயிர்த்துங் கர்த்தரே
நான் உம்முடையவன்,
இந்தவாறு கேடில்லையே,
நீர் என் மகா தேவன்.

220 C. M. Stephens. Dundee.

Evening Hymn.

க இப்போது தூங்கிக்கொள்ளுவான்
என் கண்ணை மூடுவேன்,
என் காவற்காரர் கர்த்தர்தான்
கலக்கமாயிரேன்.

உ அகன்றுபோக நீங்குங்கள்
துர்ச்சொப்பனங்களே,

Digitized by Google

கர்த்தாவுக்கென்னைப் பிள்ளைபோல்
நான் ஒப்புவித்தேனே.

௩ என் சீவன் இந்த ராவிலே
சென்றாலுங் கர்த்தரே,
என் ஆத்துமாவை உம்மிலே
எடுத்துக்கொள்வீரே.

௪ உயிர் நின்றாலும் மீட்பரே
நான் உம்முடையவன்,
மரித்துங் கேடும் இல்லையே
நீர் என் பராபரன்.

221 L. M. Hebron.

Evening Hymn.

௧ மெய்ப்பொழுதான கிறிஸ்துவே
நீர் மங்கிப்போவதில்லையே,
எப்போதும் எங்கள் யாருக்கும்
வெளிச்சங் காண்பித்தருளும்.

௨ பொல்லாத விக்கினங்களை
விலக்கிப் போட்டு எங்களை
நீர் இந்த ராத்திரியிலே
அன்பாய்க் காப்பாற்றுங் கர்த்தரே

Digitized by Google

௩ அடியார் தூங்கிக் கொள்ளவே
அடியார் நெஞ்சும்முடனே
சஞ்சாரம்பண்ண அதை நீர்
எழுப்பி வரக் கடவீர்.

222 8, 7, 4. Greenville.

Evening Hymn.

௧ நல்ல சிந்திப்பாய் விழித்து,
தெளிவாய் என் நெஞ்சமே
தேவ அன்பையே சிந்தித்து,
தோத்திரி என் உள்ளமே.
இந்த நாளில்
என்னிடத்திருந்தாரே.

௨ ஆ! பிதாவே மா அன்புள்ள
சுவாமி நீர் என் வேலையை
வாய்க்கப் பண்ணித் துன்பமுள்ள
பார விக்கினங்களை
நீக்கப்போட்டீர்,
உமக்கே இஸ்தோத்திரம்.

௩ ஆ! என் கெட்ட சுபாவத்தாலே
தேவரீர் என் நெஞ்சிலே

Digitized by Google

கண்ட பயத்தை அன்பாலே
நீர் துடையுங் கர்த்தரே,
நித்திரையைக் கொண்டு
என்னையும் இரட்சியும்.

௪ கிருபையின் சோதியான
சுவாமி இந்த ராவிலும்
என்னில் தேவரீர் அன்பான
சோதியாய்ப் பிரகாசியும்.
என்றென்றைக்கும்
என்னைக் கைவிடாதிரும்.

௫ எனதாவி தேகமீ ஆஸ்தி
வீட்டார் சுற்றத்தாரையும்
தேவரீர் அன்பாகக் காத்து,
என் பகைஞர் பகையையும்
கேட்டினின்று
நீக்கிக் காத்திரட்சியும்.

223 L. M. Uxbridge.

"Glory to thee my God this night"

௧ இந்நாள் முற்றுக நன்மையை
தயவாய்த் தந்த தேவனே.

Digitized by Google

உமக்கு நல்ல தோத்திரம்
செய்கின்றதே என் ஆத்துமம்.

உ தேவர் மன்னர்க்கு மன்னனே
கிருபைச் செட்டையின் கீழே
என்னை அணைத்துச் சேர்த்திடும்,
இரக்கமாகக் காத்திடும்.

௩ நித்திரை கொள்ள முன்னமே
எல்லாரோடும் இணங்கவே
ஆ! யேசுவின் நிமித்தியம்
என் குற்றம் யாவும் மன்னியும்.

௪ உறக்க நேரந் தன்னிலும்
எனக்குத் தஞ்சமாயிரும்,
பரத்தின் வாஞ்சை நெஞ்சிலும்
ஊற்றாக ஊறச் செய்திடும்.

௫ நித்திரை கொள்ளுநர் தன்மையாய்
பயப்படாமல் ஊக்கமாய்
மரிக்கும் நாளும் மோட்சத்தில்
களிக்கச் செய்யும் இன்பத்தில்.

௬ பிதாவே என்றும் எனது
அடைக்கலம் நீர் [illegible]

முகத்தைக் காணுங் காட்சிதான்
ஆனந்த செல்வம் முத்தியாம்.

௭ அருளின் ஊற்றாந் தேவனை
பிதாக் குமாரன் ஆவியை
துதிசெய் வான சேனையே,
பூலோகமும் நீ துதிசெய். உ

224 L. M. Uxbridge.

Evening Hymn for a child.

௧ ஏழைகளுக்கன்பாகவே
செவிகொடுக்குந் தேவனே
சகல நன்மை ஊற்றாரும்
நீரே எனக்குத் தஞ்சமாம்.

௨ உன்னதமான பரனே,
கேளும் என் விண்ணப்பத்தையே,
நீர் இன்று பாலரும் என்னை
தற்காத்த தயை எத்தனை!

௩ செய்கை நினைவு வாக்கிலே
தீயவை உண்டு-மன்னித்தே
நித்திரை பண்ணமுன்னமே
ஒப்புரவாகுந் தேவனே.

Digitized by Google

௪ அல்லில் உம்முது கரத்தில்
தூஞ்சி அடியேன் காலையில்
விழித்துத் தோத்திரத்தையே
செலுத்தச்செய்யும் யேசுவே.

௫ அல்லும் பகலும் மாறியே
சென்றோட என் வாழ்நாளையே
நிமிஷவேளையாக நீர்
எண்ணிக் கணக்கிடுகிறீர்.

௬ மரிக்கும் போது நித்திரை
செய்வதுபோல் உம்முடைய
மடியிற் சாய்ந்து பூரித்தே
விழிக்கச்செய்யும் யேசுவே. ட

225 L. M. Old Hundred.

Children brought to Jesus.

௧ குழந்தை என்னிடத்திலே
வரட்டும் என்றிரட்சகர்
உரைத்ததாற் பெற்றோர்களே,
அவரிடத்தில் வாருங்கள்.

௨ குழந்தைகளுக்காகவும்
இரட்சகர் மரித்தாரே

Digitized by Google

கைமாறில்லாத நன்மையும்
அவர்க்குண்டாகச் செய்தாரே.

௩ அன்புள்ள கிறிஸ்துநாதரே
இப்பிள்ளையைக்கைக்கொண்டருளும்,
இதற்கு நன்மை தோன்றவே
இதை அன்பாக ரட்சியும்.

226 S. M. Watchman. Dover.

Children brought to Jesus.

௧ குழந்தைகளை
தம்மிடம் அழைத்து
தழுவி ஆசீர்வதித்தார்,
அன்புற அணைத்து

௨ சேரட்டுமென்றாரே,
தடைசெய்ய வேண்டாம்,
சுதந்திரம் பரத்திலே
இவைகளுக்குண்டாம்.

௩ ஆ! யேசு இவைகள்
என்றைக்கும் உம்மோடும்
இருக்கச் செய்யுங் கர்த்தரே
உமக்கே தோத்திரம்.

Digitized by Google

227   7s.   Hampton.

"Gentle Jesus meek and mild."

க சாந்தமுள்ள யேசுவே
பாரும் பாலன் முகத்தை,
என்னில் தயை வைத்திடும்,
என்னிலே தரித்திடும்.

௨ உம்மைத் தேடிப் பற்றுவேன்
என்னை ஏற்றுக்கொள்ளுமேன்,
மோட்ச ராச்சியத்திலே
தாரும் எனக்கிடமே.

௩ கை என் தலைமேல் வையும்,
உம்மால் நான் பிழைக்கட்டும்.
தேவ மார்பிற் சார்ந்திடும்
நான் உறங்க அருளும்.

௪ திருமுகங் காட்டிடுமே
என்னை ஏந்திக் கையிலே
உமக்கேற்றோனாகவே
தாரும் ஆசீர்வாதத்தை.

ரு பாவமற்றுக் களித்து
மன இருள் தெளிந்து

Digitized by Google

பாவத்தைத் தொடாமலும்
நான் நடக்கச் செய்திடும்.

௬ தீயோர் செய்கை போலவே
நான் செய்யாதிருக்கவே
எனக்குதவி செய்யும்,
என்னைச் சுத்திகரியும்.

௭ ஆ! அன்புள்ள யேசுநான்
ஏழை என்னைப் பாருமேன்,
என்னை அன்பால் ரட்சியும்,
மோட்ச வீட்டிற் சேர்த்திடும்.

228 **C. M.** **Arlington.**

God every where (for a child.)

௧ கர்த்தர் உயர்ந்த வானத்தில்
இருக்கிறார் அல்லவோ?
பாலன் விண்ணப்பம் பண்ணுகில்
அதையுங் கேட்பாரோ?

௨ பயப்படாதே பாலனே
உன் பரம பிதா
மழலைப் பேச்சுப் பிள்ளையை
அன்புடன் கேட்கிறார்.

Digitized by Google

௨௱௪௯

௧ கத்தர் உயர்ந்த வானத்தில்
இருக்கிறார் அல்லவோ?
நான் தீமைசெய்யும் வேளையில்
என் குற்றங் காண்பாரோ?

௨ ராவும் பகலும் அவரே
எல்லாரையுங் காண்கிறார்,
அவரே இந்த லோகத்தை
நடத்திக்கொள்ளுகிறார்.

௩ கத்தர் உயர்ந்த வானத்தில்
இருக்கிறார் அல்லவோ?
ஓர் அற்ப பொய் நான் சொல்லுகில்
அதையுங் கேட்பாரோ?

௪ நீ மெத்த மெல்லச் சொல்லினும்
நன்றாக அறிவார்,
நீ எப்படி ஒளிக்கினும்
பிடித்துக்கொள்ளுவார்.

௫ கத்தர் உயர்ந்த வானத்தில்
இருக்கிறார் அல்லவோ?
அவரைப் போற்றிச் செய்திடில்
நான் அங்கே சேர்வேனோ?

Digitized by Google

அ இக்கரையின் காலம் உன்னதை
இவ்வுலகத்தில் நீ
அவனை நம்பி சேவித்தால்
பின் மோட்சத்தில் நாடி. ட

229 7s German Air.

A child's Hymn.

௧ எனது பிள்ளைபாயிலும்
கத்தர் உடை உணவும்
தந்து என்னைக் காக்கிறார்,
என்னில் நேசம் வைக்கிறார்.

௨ நித்திரை விழிப்பிலும்
வேலைசெய்யும் வேளையும்
யேசுவின் நிமித்தியம்
என்னைக் காக்கிறார் நித்தமும்.

௩ அவர் மோட்ச பாதையே
காட்டி என் செபத்தையே
கேட்க சகல் செவியை
௯௪ சாய்க்கிறார் மனதுடை.

௪ வானம் பூமி ஆண்டவன்
என்னைப்போலப் பாலகன்

Digitized by Google

ஆகி நீதி செய்யவே
ஏழை ரூபெடுத்தாரே.

௩ குருவிக்கும் நரிக்கும்
உண்டு கூடும் குழியும்,
தலைசாய்க்கத் தேவனே
இடம் இல்லையென்றாரே.

௪ இங்கிருக்கும் மட்டுக்கும்
என்னை ஆசீர்வதித்தும்
சீவன் போகும் பொழுதே
மோட்சம் எனக்கீவாரே.

230 **S. M.** **Watchman.**

Hymn for a school.

௧ அன்புள்ள யேசுவே,
இப்பள்ளிக்கூடத்தில்
இருக்கும் எந்தப் பிள்ளையே
சேரட்டும் மோட்சத்தில்.

௨ நான் கற்குங் கல்வியை
மெய்ப் பத்தியோடேயும்
என்னை நடத்தும் படிக்கே
ஊக்கந் தந்தருளும்.

Digitized by Google

௩ சிற்றின்பம் பாவையும்
வெறுத்து உமக்கே
புசித்துக் கற்று எதையும்
முடித்துச் செய்வேனே
௪ உவாத்தி குருவும்
சொல்வதை மதிப்பேன்,
அடுத்த பிள்ளைகளையும்
நேசித்து நடப்பேன்.
௫ இவ்வருள் யேசுவே
என் நெஞ்சிற் செய்திடும்,
என்றைக்கும் இதற்காகவே
உமக்குத் தோத்திரம். பி

231 P. M. Luther's Hymn.

Error overthrown and true worship established.

௧ பலத்த தேவ வார்த்தையே
எல்லா இடமுமாக
ரட்சிப்பின் மா விசேஷமே
எல்லாருக்குள்ளுமாக
சித்திக்கப் பண்ணும் யேசுவே
எல்லாரையும் ரட்சிக்கவே
இவ்வுலகிற் பிறந்தீர்.

Digitized by Google

உ கர்த்தாவே பொய் மதங்களை
இரக்கமாய் அழித்து
நாருக்கு மெய் ஞானத்தை
அன்பாகவே கொடுத்து
எல்லா வகைத் துன்மார்க்கமும்
ஒழிந்துபோகச் செய்திடும்,
அவைக்குப் பாடுபட்டீர்.

௩ கர்த்தாவே எந்தத் தேசமும்
உமக்குள்ளாவதாக,
எல்லாவகைச் சனங்களும்
துதித்தல் செய்வதாக.
நீர் மாத்திரம் மெய்த் தேவனே-
புகழ்ச்சி உமக்கேற்றதே,
அதை நீர் வாங்கிக்கொள்க.

232 L. M. Shoel.

Prayer for the conversion of men through the truth.

க மெய்ச்சோதியான யேசுவே,
இருளின் மாந்தர்பேரிலே
இரங்கி அவர் யாருக்கும்
பிரகாசங் கட்டளையிடும்.

Digitized by Google

உ பொய்ப்போதகத்தால் ஆருக்கு
தகாத சிந்தனை உண்டோ,
அவர்கள் ஆத்துமாவிலே
மெய் வரப் பண்ணும் பேசுவே.

௩ காணமற்போன பாவியை
அன்பாகத் தேடி அவனை
நெறிப்படுத்தியருளும்,
கெடாதபடி ரட்சியும்.

௪ அதற்கு வேத வாக்கியம்
எல்லாருடைய நெஞ்சிலும்
பெலன் உண்டாகச் செய்திடும்,
தேவாவியே பிரகாசியும்.

233 7's. **German Air.**

Prayer for the diffusion of benevolence.

க ஆ! இவ்வையகத்திலே,
நேசங் குறைவாயிற்றே,
தன் உயிரைப்போல ஆர்
மன்னுயிர்க்கிரங்குவார்?

Digitized by Google

உ லோகத்தாருக்கைக்கரும்
அன்பும் இல்லை-யாவனும்
தன் சுகத்தைப் பார்க்கிறான்,
அன்னியனைச் சிந்தியான்.

௩ மீட்பரே, இக்குணத்தை
நீக்கிப் பிறர் நன்மையை
சுயநயம் பார்க்கிலும்
தேடும் நேசத்தைக் கொடும்.

௪ மெய்ம்மையுள்ளதாகிய
வேதம் மாட்சிமைப்பட
இந்த வேண்டுதலையே
அன்பாய்க் கேளுங் கர்த்தரே.

234 L. M. Hebron.

Worldliness of men deplored.

க பிதாவே கிறிஸ்தின் வேதத்தை
கொடுத்த தேவ தயவை
நரர் நன்றாய் எண்ணார்களே,
அசட்டை செய்கிறார்களே.

உ நல் வார்த்தையை அரோசித்து
மண்ணும் பொருளைக் கும்பிட்டு

Digitized by Google

பயம் இல்லாமல் மாந்தரே
மதத்திருக்கிறார்களே.

௩ துன்மார்க்கமான வண்ணமாய்
பணத்தைச் சேர்க்க ஆசையாய்
அனேகர் தங்கள் நெஞ்சத்தை
கெடுத்திருக்கிறார்களே.

௪ கர்த்தாவே இந்த ஆசையை
விலக்கி லோகத்தார்களை
நெறிப்படுத்தி ரட்சியும்,
நீர் பட்ட சாவைச் சிந்தியும்.

235 **8, 7, 4.** **Zion.**

Prayer for the success of the gospel.

௧ தேசத்தார்கள் யாரும் வந்து
நல்ல மா விசேஷத்தை
கேட்டு அதின் சோதி கண்டு
சீர்கொள்வார்களென்றீரே.
ஆ! கர்த்தாவே,
சொற்படிக்குச் செய்திடும்.

௨ வையகம் எல்லாம் மிகுந்த
புத்தியீனமுள்ளது,

Digitized by Google

அதால் மாந்தர்க்குட்புகுந்த
கேடு மா பலத்தது.
ஆ! கத்தாவே,
மாந்தரை இரட்சியும்.

௩ உம்முடைய வார்த்தை சொல்ல
எங்கும் போகுஞ் சீஷரை
நீர் பலப்படுத்தி நல்ல
புத்தி தாரும் மீட்பரே.
உமதாவி
போதகர்க்கு ஈந்திடும்.

௪ வார்த்தை கேட்கும் ஊர்ச்சனங்கள்
உண்மையை அடையவும்
அங்கங்குள்ள பொய் மதங்கள்
பூதலத்தில் நீங்கவும்
நீர் மெய்யான
ஆவியைக் காட்டியும்.

236 L. M. Rothwell.

Effusion of the Spirit on the day of Pentecost.

க இரட்சகர் எழுந்த பின்
தேவாவி சீஷர் நெஞ்சத்தில்

பிரவேசமான நாள் மகா
பிரகாசமானதல்லவா?

௨ அப்போது தேவ ஈவுகள்
மா மேன்மையானதிராணிகள்
அவர்களுக்குண்டாயின,
அவை மற்றோர்க்குந் தோன்றின.

௩ அப்போதனேகம்பேர்களே
மெய்யானதைக் கண்டார்களே,
கத்தர் சகித்த சாவுக்கு
உண்டான ஏது தோன்றிற்று.

௪ தம்மில் இருந்த குற்றத்தை
உணர்ந்து நின்ற மா சபை
ரட்சிக்கப்பட வேண்டுமே
என்னத்தைச் செய்வோமென்றதே.

௫ அதற்குச் சொன்ன வார்த்தையை
அவர்கள் கேட்டுத் தீமையை
அகற்றி நல்ல மீட்பர்மேல்
நம்பிக்கையை வைத்தார்களே.

௬ கத்தாவே, அந்த நாளிலே
நடந்ததற்கொப்பாகவே

Digitized by Google

இப்போதனேகம் பேர்களும்
மனந்திரும்பச் செய்திடும்.

237 **L. M.** **Hebron.**

Blessedness and unity of the church.

௧ கத்தாவை விசுவாசித்து
பிறரையுஞ் சினேகித்து
தேவாபிஷேகம் பெற்றவர்
மற்றெல்லாரிலும் பாக்கியர்.

௨ யேசுவைப் பின்சென்றோர்களாய்
சீவித்து, நோக்கமுமொன்றாய்
அவருக்கென்றுந் தோத்திரம்
செய்வதுதானே காரியம்.

௩ சுத்தமும் விசுவாசமுஞ்
பத்தியும் பரச் சாயலும்
பெற்றிவ்வுலகை வென்றவர்
வெற்றியாய் முத்திசேருவர்.

௪ கத்தாவுக்கேற்ற சீஷரை
அணைத்துக்கொள்வதென் ஆசை,
கூடப்பிறந்தோர் யாரிலும்
இவர்களே என் உறவும்.

Digitized by Google

௫ சபையார் வெவ்வேறாகவே
சிதறுண்டு போனார்களே,
எங்குள்ள யாரும் தேவரீர்
ஒன்றாகச் சேரப்பண்ணுவீர்.

௬ நம்பிக்கை ஞானமும் ஒன்றே,
மெய்ப் பத்தியுள்ளோராகவே
தேவாவியால் நிறைந்தோராய்
நீர் சேர்த்துக்கொள்ளுந் தயவாய்.

238 8, 7, 4. Helmsley.

"O'er the gloomy hills of darkness."

௧ காரிருளால் மூடப்பட்ட
பர்வதங்கள் மேலே பார்,
வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட
சோதி தோன்றச் செய்கிறார்.
அதற்காக
சாலவும் மகிழ்ச்சிகொள்.

௨ ஆ! கர்த்தாவே இந்துதேசர்
கல்வியற்ற காப்பிரிகள்
பிரமர், சீனர், யூதர், கிரேக்கர்,
தீவார், துஷ்டர், ஏழைகள்

Digitized by Google

மற்றெல்லாரும்
உம்மைப் போற்றச் செய்திடும்.

௩ கொல்கத்தாவில் பட்ட பாட்டை
கொண்டு மானிடர்களில்
அன்புவைத்து மா ரட்சிப்பை
செய்து மோட்ச மார்க்கத்தில்
முன் நடந்து
மோட்சத்தைச் சம்பாதித்தீர்.

௪ அதைத் தேசத்தார் எல்லாரும்
காணச் செய்யுங் கத்தரே,
அந்தகாரமுள்ள யாரும்
அதால் சீர்கொள்வார்களே.
நீர் சகித்த
சாவுக்கே அதே பலன்.

௫ இந்தக் காலம் லட்சமான
பேர்கள் நன்மை சேர்ந்தது
உம்முடைய உண்மையான
அன்பினாலே ஆயிற்று,
அதிற்காக
உமக்கே இஸ்தோத்திரம்.

Digitized by Google

239 L. M. Duke Street.

Prayer for Idolaters and Papists.

க கர்த்தாவே பூதலத்திலே
உண்டான கேட்டைப் பாருமேன்,
அனேகம் பேர் இருளிலே
இருந்து நீங்க வாருமேன்.

உ நீரே மெய்த் தேவன்-மானிடர்
பொல்லாத இஷ்டமாகவே [ன்
பொன், வெள்ளி, மண், கல், வீரர்க
தேவர்களென்கிறார்களே.

௩ சிலர் மிகுந்த ஞானத்தால்
தெய்வீகசொற் புரட்டியும்
பாப்பென்பவனைத் தேவனால்
நிறைந்தோனென்று சொல்லியும்

௪ இருந்து பொய்யைப் போதித்து
இலக்கமற்ற பேர்களை
கெடுக்கும்படி யோசித்து
தப்பாயிருக்கிறார்களே.

௫ பலத்த யேசுவே, நீரே
அப்பொய்களை அகற்றுமேன்,

Digitized by Google

தெய்வீக வார்த்தையால் நீரே
துன்மார்க்கரை அதட்டுமேன்.

௩ எல்லாரும் ஏக சித்தமாய்
மெய்த் தேவனை உம்மையே
அறிந்து கிறிஸ்தின் மேல் அன்பாய்
இருக்கச் செய்யுங் கத்தரே

240 — 7's. — Pleyel's Hymn.

Prayer for the conversion of men.

க எங்கும் மாந்தர் தேவனே,
தங்கள் கேட்டைக் காணவே
புத்தியைக் கடாட்சியும்,
கேட்டை நீக்கி ரட்சியும்.

௨ உமது விசேஷித்தை
அதினல் இரக்கத்தை
மாந்தர் யாரும் பார்க்கவே
செய்யும் நல்ல மீட்பரே.

241 — 8, 7, 4. — Greenville.

Necessity of the aid of the Spirit.

க மானிடர் எல்லாருங் கூடி
தங்கள் சொந்தப் புத்தியால்

Digitized by Google

போசித்தாலுந் தேவ ஆவி
உண்மையைக் கொடாவிட்டால்
ஒன்றும் நன்றாய்
செய்ய எதுவில்லையே.

௨ ஆ! கத்தாவே, உம்முடைய
வார்த்தையை நான் சாலவும்
எங்கும் கூற என்னுடைய
நெஞ்சிலே பிரகாசியும்.
அன்பின் தீபம்
என்னை எவச் செய்யுமேன்.

௩ இவ்விதம் நடந்துகொள்ள
யேசுவே தேவாவியை
என்னிடத்தில் நீர் கொடுக்க
வேண்டும்-இவ் விருப்பத்தை
நீருங் கண்டு
கொள்ளும் நல்ல மீட்பரே.

242 L. M. Wells.

Speedy conversion of the world desired.

௧ ஆ! எங்கும் வெகு பேர்களும்
இந்நேரமாம் வரையிலும்

Digitized by Google

தேவன்பின் பாக்கியமற்றோராய்
நடக்கிறார்கள் அல்லவா?

௨ ஆதாம் கத்தாவின் பார்வைக்கே
முன் நின்று தள்ளப் பட்டதே
அநேககாலமாகியும்
அலைகிறார்கள் யாவரும்.

௩ கத்தாவே ஏழை மானிடர்
அலைந்திராமற் பாக்கியர்
நிகர்க்கவே எப்போது நீர்
அவர்களுக்கிரங்குவீர்?

௪ இரங்குவேனென்றே சொன்னீர்,
அதற்குச் சீவனும் விட்டீர்,
விட்டும் அநேகம் மாந்தரே
அதை அணைக்கவில்லையே.

௫ கொடுத்த வாக்குத்தத்தத்தை
முடித்து நீர் விசேஷித்தை
உலோகத்தார் எல்லாருக்கும்
அனுக்கிரகிக்குமட்டுக்கும்

௬ நான் உம்மைநோக்கி விண்ணப்பம்
இடைவிடாது பண்ணுவன்,

Digitized by Google

நல் மீட்பரே எல்லாரையும்
நெறிப்படுத்திரட்சியும்.

243 L. M. Duke Street.

The Jews.

க மெய் விசுவாசமுள்ளோரே, [ரே
மெய் வேதம் பெற்றுக்கொண்டோ
பூர்வீகத்தில் யெகோவாதாம்
தெரிந்துகொண்ட சனமாம்.

உ என்றும் வந்த யேசுவை
வெறுத்துக் கொன்ற பாவத்தை
செய்ததினால் எத்திக்கிலும்
சிதறிப்போனார் யாவரும்.

ங போனாலுங் கத்தர் மீளவும்
உடன்படிக்கைப் படியும்
யாக்கோப்பின் வமிசத்தாரே
திரும்புவார்களென்றாரே.

ச திரண்ட கூட்டங் கூட்டமாய்
பற்பல தேச வழியாய்
சீயோனில் வந்து சேருவார்,
கத்தாவின் பத்தராகுவார்.

Digitized by Google

௫ முன் அறையுண்ட யேசுதாம்
மேசியாவென்று கண்டோமாம்
மகா களிப்பாய்ச் சொல்லுவார்,
நம்பிக்கையோடும் பணிவார்.

௬ பற்பல தேசத்தார்களும்
இச்செய்தி கண்டு கூடவும்
ஒன்றாகி வருவார்களே,
மா கோடாகோடி சனமே.

௭ விழி, விழி, சீயோனைப் பார்,
விழுந்த மதில் கட்டுவார்,
கிரேக்கர், யூதர் ஏகமாய்
செய்வார்களே விவேகமாய்.

௮ கர்த்தாவின் மேன்மை சோதியும்
லோகத்தை முற்றும் நிறைக்கும்,
எங்கெங்குமுள்ள தேசத்தார்
தேவாபிஷேகம் பெறுவார்.

௯ ஆ! களிகூர்ந்து பாடுங்கள்,
சீயோனில் வாழ வாருங்கள்,
பூலோகம் வானம் புதிதாய்
சிஷ்டிக்கப்படுஞ் சுத்தமாய்.

Digitized by Google

244 L. M. Truro.

Triumph and universal reign of Christ.

௧ வெற்றி சிறந்த சபையும்
மெய் விசுவாசமுள்ளோரும்
எல்லாரும் ஏகக் களிப்பாய்
துதியுங்கள் குமாரனை.

௨ இராசாக்கட்கிராசாவே,
பூலோகப் பாவப் பலியே,
மரித்தெழுந்த தேவரீர்
செங்கோல் செலுத்தி ஆளுவீர்.

௩ பூமியிலுள்ள தேசத்தார்
அந்தந்தப் பாஷை பேசுவார்
எல்லாரையும் ஒன்றாகவே
இழுத்துக்கொள்வோமென்றீரே.

௪ கிரேக்கர், யூதர், தீவார்கள்
இராயர், குடிசனங்கள்
படித்தோர், மூடர், யாவரும்
வந்தும்மைப்போற்றச் செய்திடும்.

௫ பொன், வெள்ளி, முத்து, மாணிக்கம்
பூமியின் மேன்மை யாவையும்

Digitized by Google

காணிக்கையாக உமக்கே
செலுத்தப்படும் யேசுவே.

௬ சிட்டிக்கப்பட்ட உலகம்
கர்த்தாவின் சுத்த ஆலயம்
எங்கெங்குமுள்ள தேசத்தார்
குமாரனை வணங்குவார்.

௭ வானங்களே! பூலோகமே!
சுந்தரங்கக் களிப்புடனே
பிதாக்குமாரன் ஆவிக்கும்
துதிசெய்யுங்களென்றுரைக்கும்.

245   8, 7.   Good Shepherd.

Charity.

௧ சங்கங் கூடி ஏழைக்கென்று
நல்ல மனதுடனே
தருமத்தைச் செய்ய நீரே
தயை தாரும் பரனே.
நன்மை செய்யப் பிறனுக்கு
தங்கள் கடனாகவே
பணமற்றோர் செல்வர்களும்
மனஞ் சாய அருளும்.

Digitized by Google

௨ ஏழைக் கைம்பெண் நேசமாக
நல்ல மனதுடனே
தாழ்மையாக ஈந்த போது
மேன்மையாய் விதந்தீரே.
தேவனே உம்மாலே நாங்கள்
காக்கப்பட்டோராகவே
சுகம், கல்வி, பல நன்மை
பா இவும் பெற்றேமே.

௩ சைவ சமயத்தின் கட்டாம்
ஆகமம் புராணமும்
மேன்மையான பரிசுத்த
வேதநூலால் அழியும்.
உண்மையான மனதோடே
நித்தமும் பத்தியாய்
நிறைவாகத் தருமத்தை
செய்ய அருள் புரியும்.

௪ சுகமுள்ள காலம் யாவும்
சொல்லப்பட்ட விதமாய்
அகம் பூரிப்பாக யாரும்
மிகு நன்மை செய்யவும்

Digitized by Google

பத்தி விசுவாசத்தோடும்
சுத்த மனதுடனே
கிறிஸ்து செய்த தருமத்தை
நோக்கவுஞ் செய்தருளும்.

246 8, 7. Vesper Hymn.

The new year.

௧ வருஷப்பிறப்புண்டென்று
புதுப் பத்தியுடனே
தேவரீரை நான் பின்சென்று
தொண்டு செய்ய யேசுவே
உமதாவியை எனக்கு
பூரிப்பாக அளியும்,
அடியேனை ஆதரித்து
வழிகாட்டியாயிரும்.

௨ இது கிருபை பொழியும்
வருஷமாகட்டுமேன்,
என்னில் ஒளி தோன்றச் செய்யும்,
என் அழுக்கை அடியேன்
மனச் சஞ்சலத்தைக் கொண்டு
பார்த்து அருவருக்கும்

Digitized by Google

நல்ல குணத்தை அளித்து
பாவம் யாவும் மன்னியும்.

௩ நீர் என் அழுகையைக் கண்டு
துக்கத்தாலே கலங்கும்
அடியேனைத் தேற்றிக்கொண்டு
திடன் அளித்தருளும்.
இந்தப் புது வருஷத்தில்
பாவத்துக்குங் கேட்டுக்கும்
தப்புவித்தே என்னிடத்தில்
தயவை ஈந்தருளும்.

௪ பூரிப்பாய் இவ்வருஷத்தை
நான் முடிக்க என்னை நீர்
தாங்கி உமது கரத்தை
என் மேல் வைக்கக் கடவீர்
வருத்தம் வந்தாலும் உம்மை
நம்பிப் பற்றிக்கொள்வேனே,
மரித்தாலும் பேரின்பத்தை
அடைவேன் மோட்சத்திலே.

247 7's. Pleyel's Hymn.

The new year.

௧ சீவன் தந்த கத்தரே,
அத்தியந்தமாகவே

உண்மையாகப் பணிவாய்
தோத்திரிப்போம் களிப்பாய்.
௨ நாட்கள் சொற்போற் கழியும்,
தண்ணீர்போல வடியும்,
போயினும் இவ்வரைக்கே
சீவனோடிருக்கிறோமே.
௩ வலு சற்பஞ் செய்வினை
நெஞ்சிலாகுந் துரிச்சை
மற்றும் யாவுந் தப்பினோம்
தேவ மீட்சியைக் கண்டோம்.
௪ வல்ல கர்த்தர் நீட்டுங் கையில்
பட்ட பாடு சிலுவை
நோக்கி நம்பும் எவனும்
துதிசெய்வான் என்றைக்கும்.
௫ வழி, சீவன், சத்தியம்
ஆயிருக்கும் மெய்த் தெய்வம்
பெலன் தந்தால் ஆகுமே,
செய்யார் போகில் வீணே.

248 S. M. **Dover.**

The new year.

௧ தினமும் புதிசாய்
அனுக்கிரகத்துக்கே

Digitized by Google

இன்றைக்கும் மா வணக்கமாய்
துதி உண்டாவதே.

௨ தப்பாமல் எங்களை
நேரிட்டு ரட்சியும்,
எல்லா இக்கட்டும் பாவத்தை
விலக்கிச் செய்திடும்.

௩ துன்னாளிற் றீவினை
திரட்சி வந்தாலும்,
நிலைத்திருக்க எங்களை
பெலப்படுத்திடும்.

௪ பரத்துக்கோட்டமாய்
மா வாஞ்சையுடனே
அடியார் ஓடத் தயவாய்
ஆளுந் தேவாவியே.

249 C. M. Dundee.

The new year.

௧ ஆதி பராபரா, உம்மை
தாழ்வோடு பணிகிறோம்,
சாவுக்குரிய தேகத்தை
உடையோராகிறோம்.

Digitized by Google

௨ வருஷந்தோறுஞ் சாவுக்கு
அணுகி வருகிறோம்,
எங்கும் எப்போதுங் குழிக்கு
தீவிரம் பண்ணுகிறோம்.

௩ அளவில்லாத களிப்பு
அனந்த வாதையே,
மரணம் அடைபவர்க்கு
அப்பொழுதாகுமே.

௪ கர்த்தாவே, இந்த வருஷம்
எங்களைக் காத்திடும்,
அடியாருக்கு மரணம்
வந்தால் இரட்சியும்.

250 **8, 7, 4.** **Greenville.**

Brevity of life.

௧ மனமே உன் சீவன் இங்கே
எப்போதும் நிலைக்குமா?
தோன்றிப்போகும் புகை போலே
அதிருக்கும் அல்லவா?
அதினாலே
சீவகாலம் மீட்டுக்கொள்.

Digitized by Google

௨ இந்தப் பூமியுள்ள பொருள்
போன நாளைப் போலாமே,
மேல் இருக்கும் பொக்கிஷங்கள்
என்றென்றைக்கும் நிற்குமே.
திடங்கொண்டு
இவையே நீ தேடிக்கொள்.

௩ மனிதரின் அலங்காரம்
பூவைப்போல் உதிர்ந்துபோம்,
என்றும் நிற்கும் அஸ்திவாரம்
கர்த்தர் சொன்ன வார்த்தையாம்.
அதினாலே
தோன்றும் மா சிறப்பைப் பார்.

௪ மனிதரின் மகிமைகள்
புல்லைப்போல் உலர்ந்துபோம்,
லோகக் கல்வி யோசனைகள்
சீக்கிரம் ஒழிந்துபோம்.
பெலவானும்
பெலனற்றவனாவான்.

௫ தேக சொஸ்தமுள்ளவர்கள்
நினையாத நேரத்தில்
நம்மை விட்டுப் போகிறார்கள்
மறைவுள்ள லோகத்தில்.

அதை எண்ணி
சாவு வரக் காத்திரு.
௯ மரணத்தை சயங்கொண்ட
ஆண்டவரைப் பற்றிக்கொள்,
அப்போதென்றுஞ் சீவனுள்ள
யேசுவினுடைய சொல்
நீயுங் கேட்டு
மோட்சத்துக்கு ஏறுவாய். Muller

251 **C. M.** Canterbury.

Immutability of God and frailty of man.

க கர்த்தாவே அடியாருக்கு
அடைக்கலமானீர்,
சகாயஞ் செய்யுந் தஞ்சமும்
என்றைக்கும் இருப்பீர்.

உ நாங்கள் உமது நிழலால்
மகிழ்ச்சி அடைவோம்,
உமது கையை நீட்டினால்
அஞ்சாமல் நடப்போம்.

௩ மலைகள் தோன்றுமுன்னமே
அனாதி காலமும்

Digitized by Google

கடவுளாயிருந்தீரே,
இருப்பீர் என்றைக்கும்.
௪ உமக்காயிரம் வருஷம்
ஓர்நாளுக்கொக்குமே,
ஓர் யுகமும் ராச்சாமமும்
கடவுளுக்கொன்றே.
௫ சாவுக்குரிய மனிதர்
நிலைக்கவே மாட்டார்,
உலர்ந்த பூவைப்போலவர்
ஒழிந்து போகிறார்.
௬ கர்த்தாவே அடியாருக்கும்
அடைக்கலமானீர்,
சகாயஞ் செய்யுந் தஞ்சமும்
என்றைக்கும் இருப்பீர்.

252 **P. M.** **Ganges.**

"*Lo! on a narrow neck of land.*"

௧ ஓரம் இல்லாச் சமுத்திரம்
முன் பின் இருக்கச் சாகும் நான்
ஓர் கணப்பொழுதில்
முத்தி அடைந்திருப்பேனோ?

Digitized by Google

பாதாளத் தீ கிடைக்குமோ?
ஆ! மிஞ்சுமே திகில்.

௨ தயாபரா, என் நெஞ்சிலே
நித்தியமுள்ள இவையே
பதியச் செய்திடும்,
கெட்டுண்டழிந்து போகுமுன்
தேவனைப் பெற்றோனாகவும்
என்னைக் காத்தருளும்.

௩ சுத்தாங்கத் தூத சேனையும்
ஆரம்பஞ், சோதி, துதியும்
தோன்றும் அப்பொழுதே,
மரித்தோர் உயிரோர் கூடவும்
எழுப்பித் தீர்க்கப்படவும்
நான் கூட நிற்பேனே.

௪ இங்குள்ள நாட்கள் யாவிலும்
நம்பிக்கை பத்தி அன்பிலும்
கதிக்கும் நோக்கமே
என் நெஞ்சில் தாக்கும்படிக்கு
தேவாபிஷேகம் எனக்கு
அருளும் யேசுவே.

Digitized by Google

ரு சாவரநான் களிப்புடன்
பரத்திற்சேர்ந்து உம்மைத்தான்
என்றைக்கும் போற்றுவேன்,
நம்பிக்கை காட்சியாய் வரும்
மெய்ஞானம் சுத்தம் அன்பிலும்
பூரணம் அடைவேன்.

253 S. M. Aylesbury.

Joy in view of death.

க என் சீவன் கிறிஸ்துவே,
அதாலே எனக்கு
மரணம் நயமாகுமே,
நெஞ்சே மகிழ்ந்திரு.

உ நான் யேசு வசமாய்
சேர்ந்தென்றும் வாழ்வே
மிகவும் மகிழ்ந்தவனாய்
பிரிந்துபோவேனே.

௩ நான் மரணிக்கும் நாள்
என் நோவின் முடிவு,
என் பாவமே என் யேசுவால்
நிவிர்த்தியாயிற்று.

Digitized by Google

௪ அப்பொழுதமைந்து
 கலக்கம் இன்றியே
நான் நித்திரையே அடைந்து
 தூங்கட்டும் யேசுவே.
௫ நான் உம்மைக் கெட்டியாய்
 பிடித்தும்முடனே
நித்தம் அனந்த பூரிப்பாய்
 வாழ்வேன் என் யேசுவே.

254 L. M. Brookfield.

Trust in Jesus in view of death.

௧ என் யேசுவே தயாபரா,
என் மீட்புக்காகச் சகல
உபாதியோடுஞ் சாவையே
அனுபவித்த கத்தரே.
௨ ஆரோக்கியமில்லாதோனாய்
கிடக்கிற இப்பாவிக்காய்
நீர் பட்ட வாதை நோவையும்
நினைத்திரங்கியருளும்.
௩ என் பார்வையும் என்கேள்வியும்
என் வாயிலான சத்தமும்

Digitized by Google

எல்லாம் இல்லாமற் போகையில்
என் மூச்சொடுங்கும் காலத்தில்

௪ அறிவில்லாமற் போவதால்
நரர் துணை வீணாகையால்
நீர் வந்து என் இக்கட்டிலே
சகாயராகும் யேசுவே.

௫ என் ஆத்துமாவை உமது
கை ஏற்றுக்கொண்டால் நல்லது,
மண் பாண்டமுடிவாகிய
நாள் மட்டும் இளைப்பாறுக.

௬ தலையுடன் இணைந்தவன்
என்றைக்கும் பிரியாதவன்
நீர் எனக்காய் மரித்ததே
என் நம்பிக்கைக்கு முத்திரை.

255 L. M. Windham.

Trust in Christ's word in view of death.

௧ ஆவியைக் கத்தர் தமது
வசத்திற் சேர்த்த பிறகு
என் தேகந் தீர்ப்பு மட்டுக்கும்
குழியில் இளைப்பாறிடும்.

Digitized by Google

உ நான் பூரிப்பாய் அந்நாளிலே
எழுந்திருக்கக் கர்த்தரே
நீர் சாபத்தீர்ப்பினைத்தாக்கும்
இவ்வேழை என்னை விலக்கும்.

௩ என் தயவுள்ள யேசுவே,
உமது வேத வாக்கிலே
ஆர் என்னைப்பற்றிக்கொண்டானோ
என் வார்த்தையைக் கைக்கொள்வா

௪ அவன் இரட்சிப்படைவான், [னோ
தன் ஆக்கினைக்குத் தப்பினான்,
மெய்யாக மரணத்தையும்
ருசிப்பதில்லை என்றைக்கும்.

௫ சாவவனைக் கொல்லாதேபோம்,
நாம் அவனை எழுப்புவோம்,
என் மோட்ச ராச்சியத்திலே
என்னோடே வாழ்வானென்றீரே.

256 7, 6. Cheerful Hope.

Presence of Christ in death sought.

க அகல் துன்மார்க்கமான
பொல்லாத லோகமே!

Digitized by Google

என் ஆத்துமாவுக்கான
தலம் நீ அல்லவே.
கத்தாவின் மோட்சத்துக்கு
எதிர்கொண்டேகிறேன்,
என் நேச யேசுவுக்கு
முன்பாக வாழுவேன்.

௨ என் நெஞ்சில் உம்முடைய
சுகிர்த நாமமே
திகில் எல்லாம் மறைய
விளங்கும் யேசுவே.
அவஸ்தையில் நீர் கிட்ட
இருந்தெந்நேரமும்
மரத்திலே மரித்த
உருவைக் காண்பியும்.

௩ என் ஆவியை அன்பாக
எல்லாப் பயத்துக்கும்
விலக்கி நேசமாக
கையேந்திரட்சியும்.
இவ்வண்ணமாய் இறந்தால்
இக்கட்டைத் தாங்குவேன்,
மோட்சானந்தத்தில் வந்தால்
என்றுஞ் சந்தோஷிப்பேன்.

Digitized by Google

ச பரத்தின் புத்தகத்தில்
என் பேரை வைத்திடும்,
உம்மால் உயர்ந்த வீட்டில்
நிறைந்த வாழ்வோடும்
இருக்குங் கூட்டத்தோடே
என்னை அழையுமேன்,
அங்கும்மை நல்லோரோடே
என்றைக்கும் போற்றுவேன்.

257 C. M. Colchester.

Heaven desired and assistance sought.

க எப்போதழைப்பீர் யேசுவே?
நான் உம்மை நித்தமும்
களிப்பாய்த் தரிசிக்கவே
தயை ஈந்தருளும்.

உ ஆ! பரிசுத்த ஆவியே
நான் என்று ந்தப்பியே
போகாதபடி என்னிலே
தரித்திருப்பீரே.

ங வழியைக் காட்டி எனது
மாற்றோடே நீர் தாம்

Digitized by Google

போர்செய்யும் அப்போதெனக்கு
உம்மாற் சயம் உண்டாம்.
௪ கர்த்தாவே உன்னதத்திலே
இருந்து பாருமேன்,
நற்சாலவைத் தாரும் யேசுவே,
உம்முடன் வாழுவேன்.

258 **L. M.** **Portugal.**

Comfort in affliction from the hope of Heaven.

௧ உலக செல்வத்தைப் பாரேன்,
அநித்தியத்தை நான் நாடேன்,
நான் பற்றிக்கொள்ளுந் நித்திய
பொருள் என் பரம பிதா.
௨ என் ஆவிக்குந் தேகத்துக்கும்
நெருக்கம் பாரமாகியும்,
நான் பர வழ்வை நோக்க நீர்
கருணை செய்யக் கடவீர்.
௩ இக்கட்டினால் என் மனதில்
ஆகுலங்கொண்ட காலத்தில்
மோட்ச தலத்தைத் தேடவும்
அதிற் சேரவும் அருளும்.

Digitized by Google

௪ ஓர் நேசன் சென்றுபோகையில்,
நான் துக்கப்பட்டும் மோட்சத்தில்
நானும் அதிற் பிரவேசிப்பேன்
என்றென்னை ஆற்றித் தேற்றுவேன்.

259 C. P. M. Norwich.

Comfort in death.

௧ நீர் என் மகிழ்ச்சி கத்தரே,
மிகுந்த தயவுடனே
என்னோடே தரியும்,
விண் மண்ணிலும் ஏதேதுண்டோ
அதும்மையன்றித் தேற்றுமோ?
தேற்றரவளியும்.

௨ என் தேகம் மாண்டுபோகியும்
நீரே என் செல்வஞ் சீவனும்
அரணுமானவர்,
நீர் என்னை மீட்ட ரட்சகர்
ஆ! யேசுவே தயாபரா,
நீர் என் தேற்றரவர்.

௩ என் ஆத்துமாவை உம்மண்டை
எடுத்துவரத் தூதரை

Digitized by Google

அப்பொழுதனுப்பும்,
பாவத்திலே அழியும்
தேகத்தை வரும் பொழுது
சிறப்பாய் ரூபியும்.

௪ அப்பொழுதும்மைக் கத்தரே,
மகா சந்தோஷித்துடனே
கண்ணுற் கண்டென்றைக்கும்
பிழைக்கக் கட்டளையிடும்,
இம்மீட்பை யாரும்பெறவும்
கிருபை அளியும்.

260 **L. M.** **Uxbridge.**

Death gain and heaven glorious.

க மரணத்தாலே செல்வமும்
அளவில்லாத மேன்மையும்
எனக்குண்டாம் அதாலே நான்
மரிக்கும்போதே மோட்சவான்.

௨ அப்போது சேர்ந்த ஆத்துமம்
தூதர்களோடே பாக்கியம்
நிறைந்த பரதீசிலே
களிக்கும் என்றுங் கத்தரே.

Digitized by Google

௩ அதால் நல்லாறுதல் உண்டே
அச்சணம் எனதாவிக்கே
கத்தாவைக் காணும் மேன்மையும்
இன்பமும் பெற அருளும்.

௪ என் ஆவியில் அப்பரம
இஸ்தோத்திரத்தைக் கேட்கிற
நான் இந்த லோகத்தை இனி
இச்சித்துக்கொள்வதெப்படி?

௫ அங்கே சேர்ந்தோரின் பாக்கியம்
மா உறுதி, மா பத்திரம்,
பரத்தின் நன்மை என்றைக்கும்
இருக்கும் இன்பந் தந்திடும்.

௬ விரும்பப்பட்ட சீவனே
என் ஆவி நாடுஞ் செல்வமே
உம்மால் எப்போதும் பூரிப்பேன்,
எப்போதும் அங்கே சேருவேன்.

261 8, 7, 4. Helmsley.

Hope of heaven our support.

௧ மனமே சந்தோஷிப்பட்டு
உன் உபாதியை மற,

Digitized by Google

உரகயி

இங்கே நோவையே சகித்து
கஸ்தியால் மயங்கின
உன்னை யேசு
மோட்சத்துக்கழைக்கிறார்.

௨ எனது கத்தாவை நோக்கி
நித்தம் நித்தங் கூப்பிட்டேன்
நாயன் என் இக்கட்டைப் போக்கி
ஆதரிக்கக் கெஞ்சினேன்,
நான் என் சாவை
காணவும் விரும்பினேன்.

௩ யேசுவைப் பின் செல்லும் யாரும்
மா உபாதியுள்ளோராய்
தீயில் இட்ட பொன்னைப் போலும்
புடமிடப்பட்டோராய்
நிலைநிற்பார்
உம்மில் விசுவாசமாய்.

௪ ஆதலால் அன்பாய் விளங்கும்
சோதியே பிரகாசியும்,
யேசுவே என்மேல் இரங்கும்
தூரத்திற் செல்லாதிரும்,

Digitized by Google

நான் உவப்ப
என்னைக் காத்துக்கொண்டிரும்.

262 C. M. Arlington.

"When I can read my title clear."

௧ பரத்திலே சுதந்திரம்
எனக்குண்டாம் என்றே
அறிந்திருக்கையால் பயம்
இல்லாமற் போயிற்றே.

௨ என்னில் பசாசு மூர்க்கமாய்
வந்தாலும் பாடுவேன்,
உலோகம் யாவுங் கோஷ்டமாய்
எழும்பினும் நிற்பேன்.

௩ விசாரம் யாவுங் கூட்டமாய்
என்னைப் பிடிக்கிலும்,
அம்மோட்சத்திற் சந்தோஷமாய்
சென்றால் எல்லாம் விழும்.

௪ இளைப்படைந்த ஆத்துமா
அங்குள்ள வாழ்விலே
நீராடி நித்தமும் மகா
மகிழ்ச்சிகொள்ளுமே.

Digitized by Google

263 8, 7, 4. Middleton. Zion.

Hope of heaven our support.

க கொஞ்ச நாளாய்ப்பாடுபட்ட
பின்பு மோட்ச வாழ்விலே
ம் துன்பம் நோவு யாவும் அற்ற
மேன்மையோடிருப்பேனே,
நெல் விளைந்த
பின் அறுப்புண்டாகுமே.

உ மோட்ச வாழ்வு இங்கிராது,
அங்கே தான் இருக்குமே
இங்கே துன்பம் நீங்கிடாது,
அங்கே வரும் இன்பமே.
அங்கே என்றும்
கர்த்தரைத் தரிசிப்பேன்.

ங ஆதலால் வருத்தத்தையும்
நான் சகிப்பேனாகவே
கிறிஸ்துவும் இடுக்கண்ணையும்
அன்பினாற் சகித்தாரே,
அங்கென்றைக்கும்
கிறிஸ்துவுடன் தங்குவேன்.

Digitized by Google

264 7's. Lancaster.

Christ our triumph in death.

௧ தோழனே உன் ஜீவன் போம்
நாம் எல்லாரும் மாளுவோம்,
ஜீவன் கொண்டு சாவுக்கே
யாவருந் தப்பார்களே.

௨ ஆதலால் உன் சாவிலே
உன் நடக்கை நெஞ்சிலே
பாடில்லாமல் நன்மையை
காட்டத்தக்கதை நினை.

௩ கிறிஸ்துநாதர் மாத்திரம்
நோவை நீக்கும் பாத்திரம்
கிறிஸ்துநாதர் நீதிமான்
தப்பில்லாத மீட்பராம்.

௪ உன்னுடைய நீதியே
எவ்விதமும் அற்பமே,
கிறிஸ்தின் நீதி பூரணம்
அதுவே உன் வஸ்திரம்.

௫ பாவஞ் சாபந் துஷ்டபேய்
கிறிஸ்தின் கீழ் விழுந்ததே,

Digitized by Google

பேசவாலே மாத்திரம்
தோன்றுமே மகா சயம்.

௪ இப்படி நீ சாவையே
நோக்கி ஆ! உன் கூர் எங்கே
என்றுரைத்துச் சாந்தமாய்
சாவை வென்று ஏறுவாய்.

265 L. M. **Hebron.**

"Oh for a sight, a pleasing sight."

௧ பிதாவின் வலப்பக்கமாய்
குமாரன் வீற்றிருக்கிறார்,
பரத்தின் சேனை ஓசையாய்
ஆரம்பத்தோடே துதிப்பார்.

௨ தூதர்கள் சுத்தோர் யாவரும்
மா கோடாகோடி லக்கமாய்
சிங்காசனத்தைச் சுற்றிலும்
வணங்குவார்கள் பணிவாய்.

௩ கர்த்தாவே நானும் மோட்சத்தில்
சேர்ந்தும்மைக் கண்டு களிப்பேன்,

Digitized by Google

எப்போது வந்து சோதியில் [ன்.
என்றைக்கும் உம்மைத் துதிப்பே

௪ அச்சோதி சாயல் செல்வமும்
அடைந்திருந்து பாடுவேன்,
பேரின்ப வாழ்வில் என்றைக்கும்
களிப்புடன் வணங்குவேன்.

௫ நான் சஞ்சரிக்கும் லோகத்தில்
தியானம் ஆசை இதுவே,
பின்வந்தும்மோடே முத்தியில்
இருக்கச் செய்யும் யேசுவே.

266 7, 6. **Amsterdam.**

"Rise my soul and stretch thy wings."

௧ நெஞ்சமே விழித்திரு!
பரத்தைத தேடிவா,
கெட்டழிந்து போவது
பேரின்பந் தருமா?
வெள்ளி, பூமி, சந்திரன்
சூரியனும் அழிய

Digitized by Google

நெஞ்சமே களிப்புடன்
பரத்தில் நீ பற.

௨ நீர் ஆழத்தை, தீ ஆதித்தற்
சேரும் இயல்பாய்,
சிட்டி யாரும் பரத்திற்
கத்தாவை பணிவாய்
தேடும் போல் ஆ! நெஞ்சமே
மீட்பரை நீ தேடினால்
முத்தியாகும் உனக்கே
கத்தாவின் அருளால்.

௩ தூதரோடிராசாவாய்
இயேசு வருகில்
உன்னைப் புது சிட்டியாய்
சேர்ப்பாரே பரத்தில்,
துன்பம், துக்கம், பாவமும்
விட்டொழிந்து போவதே,
சுத்தம், செல்வம், மோட்சமும்
உன் சொந்தமாகுமே.

Digitized by Google

267 7's. Hampton.

Bliss of glorified saints.

க கேளுந் தேவ வாக்கியம்
வானத்தில் உண்டாவதாய்
என்றுமுள்ள பாக்கியம்
கர்த்தரின் பக்தர்களாய்
மரித்தோர்கள் அடைவார்,
தங்கள் வேலையை விட்டு
என்றும் இளைப்பாறுவார்
என்று ஆவி சொன்னது.

உ யேசு போன ஸ்தலத்தை
சேர்ந்தவர்கள் பூமியில்
யேசுவின் நற்கருணை
அடைந்தார்கள் மனதில்
நீதி பாவ மன்னிப்பு
பரிசுத்தம் இவையே
இங்கே தயவாற் பெற்று
வாரோராக வாழ்ந்தாரே.

ந யேசுதாம் வாய் மலர்ந்து [ய்,
சொல்லுவார் நன்றாய்ச் செய்தா

Digitized by Google

வாடா முடி அணிந்து
நம்மோடென்றும் ஆளுவாய்,
வானோர் கேட்டு அவனை
வாழச் சொல்லிப் பாடுவார்;
அவன் முடி மகிமை
அவன் சோதி தேவனார்.

268 7's. German Hymn.

"Who are these in white robes?"

க வெள்ளை அங்கி தரித்து
சுடர் ஒளியுள்ளோரார்?
தேவனைப் பிரார்த்தித்து
பூரிப்போர் களிப்பாரார்?
சிலுவையை எடுத்து
யேசுவின் நிமித்தமே
யுத்தம் பண்ணிப் பொறுத்து
நின்றோர் இவர்கள் தானே.
வெற்றிகொண்டு நின்றோரே

உ மா துன்பத்தில் இருந்து
வந்து விசுவாசத்தால்
தேவ நீதி அணிந்து
சுத்தமானோராதலால்

Digitized by Google

ஒழியாமற் கத்தரை
கிட்டி நின்று சேவிப்பார்,
கத்தர் பார்த்துச் சுத்தரை
சேர்ந்து ஆசீர்வதிப்பார்.

௩ அவர் சயங்கொண்டோராய்
இனிச் சோதனைப்படார்,
தீமை நீங்கிச் சுத்தோராய்
பசிதாகம் அறியார்.
மத்தியான உஷ்டணம்
இனிப் பட மாட்டாதே,
அவர்கள் மெய்ப் பாக்கியம்
வளர்ந்தோங்கும் நித்தமே.

௪ தேவ ஆட்டுக்குட்டியும
அவர்களைப் போஷித்து
சீவ மரக் கனியும்
சீவ நீரும் அளித்து
துக்கந் துன்பம் அழித்து
குறை நிறைவேற்றுவார்,
கண்ணீரையுந் துடைத்து
அன்பினால் நிரப்புவார்.

Digitized by Google

269 8, 7, 4. **Tamworth.**

Second coming of Christ.

க பாவிக்காய் மரித்த யேசு
வானத்தில் இறங்குவார்,
கோடி தூதர் அவரோடு
வந்தே ஆரவாரிப்பார்,
அல்லேலூயா!
கர்த்தர் பூமி ஆளுவார்.

உ பயங்கர மகிமையில்
எல்லோர் அவரைப் பார்ப்பார்,
துன்புறுத்த சிலுவையில்.
அவரைக் கொன்றோர் காண்பார்
அழுகையில்
அன்றவரை அறிவார்.

௩ அவர் தேகம் பட்ட காயம்
இன்னங் காணப்படுமே,
நம்புவார் மகிழ்ச்சியாயும்
நோக்குவார் அப்பொழுதே
அவர் காயம்
பெ. - தரும் நித்த ரட்சிப்பு.

Digitized by Google

௬ உமது நித்திய ஆசனத்தில்
யாரும் போற்றச்செய்திடும்,
ராச்சியத்தை உலகத்தில்
ஆண்டுகொள்ளும் என்றைக்கும்,
ஆதி கர்த்தர்,
சீக்கிரம் வந்தருளும்.

270 C. P. M. Luther's Hymn.

Day of Judgment.

௧ யாரையும் நியாயந் தீர்ப்பராய்
கர்த்தாவின் மைந்தனை
அதிபதி பிரஸ்தாபமாய்
இறங்கும் பயமான
நாள் வரும் போது தீயினால்
எல்லாங் கரைந்துபோவதால்
நகைப்பதரிதாகும்.

௨ எக்காளத்தை நற்றூதர்கள்
எத்திக்கும் ஊதுவார்கள்,
சடுதியாய் இறந்தோர்கள்
யாரும் எழும்புவார்கள்,

Digitized by Google

உயிரோடிருந்தோர்களும்
ஓர் நிமிஷத்திற் கூடவும்
அழியா ரூபமாவார்.

௩ எல்லாருஞ் சிந்தை செய்கையும்
வெளிப்படுவதற்கு
இரண்டு புத்தகங்களும்
திறந்தவரவர்க்கு
நடந்ததற்குத் தக்கதாய்
பலன் அனந்த காலமாய்
கொடுக்கப்பட்டிருக்கும்.

271 C. P. M. Luther's Hymn.

Day of Judgment.

க மகா பெரிய ஆண்டவர்
சனங்கள் யாவருக்கும்
நிறைந்த நீதி செய்பவர்
இறங்கும் நாள் பிறக்கும்
அப்போது மா பிரஸ்தாபமாய்
நம்மையும் மாற்றுஞ் சோதியாய்
மின்போலத் தோன்றுவாரே.

Digitized by Google

௨ இலக்கமற்ற தூதர்கள்
அவர்க்குக் கீழ்மையாக
பலத்த சத்தத் தாரைகள்
உடையவர்களாக
முழக்கஞ் செய்யப் பூமியும்
விஸ்தாரமான வானமும்
அதிர்ந்து வெந்துபோகும்.

௩ அத்தூதரின் எக்காளங்கள்
எத்திக்கிலும் முழங்கும்,
அந்நேரம் மாந்தரின் திரள்
உயிரடைந்தெழும்பும்.
ஓர் பக்கத்திற் சன்மார்க்கரும்
ஓர் பக்கத்திற் றுன்மார்க்கரும்
வணக்கமாய் நிற்பார்கள்.

௪ அப்போதவர்கள் பூமியில்
நடந்துவந்த யாவும்
அவர்கள் தங்கள் நெஞ்சத்தில்
நினைத்திருந்த யாவும்
ஆண்டவர் கையால் வெளியாம்,
அதற்கதற்கு ஏற்றதாம்
பலனைத் தந்தருள்வார்.

Digitized by Google

௫ சன்மார்க்கர் மோட்ச மார்க்கத்தில்
நடந்ததால் மகிழ்ந்து
சிறப்படைந்து போகையில்
துன்மார்க்கத்தார் அதிர்ந்து
பல்லைக்கடித்துச் சாபத்தை
அடைந்து சன்னிதானத்தை
விட்டோடி மாளுவார்கள்.

௬ அதிப்படி இருப்பதால்
என் ஆத்துமாவே நில்லு,
மா பயங்கரமானதால்
இப்போதே புத்திகொள்ளு,
அங்கென்ன போக்குச் சொல்லுவாய்
எங்கே நீ ஓடிப்போகுவாய்?
இங்கே கத்தாவைப் பற்று.

௭ இகத்திலே துன் மார்க்கத்தை
சந்தோஷமாக விட்டு
அன்புள்ள யேசுக்கிறிஸ்துவை
நம்பிக்கையாய்த் தரித்து
குணப்படு இவ்வண்ணமாய்
அவர் வரில் மகிழ்ச்சியாய்
அவர் முன்பாக நிற்பாய்.

Digitized by Google

272 **P. M.**

Judgment Hymn.

௧ புலம்புதலிருக்கும் நியாயத் தீர்ப்பிலே
லோகம் வெந்தெரிந்து அழிந்த போதிலே
பெற்றோர் மக்கள் விட்டு
விட்டென்றுங் காணாரே,
கடுங்கோபம் என்றும்
பாவி பட்சிக்குமே.
ஐயையோ! என்றைக்கும்
பாவி பட்சிக்குமே.

௨ புலம்புதலிருக்கும் நியாயத்தீர்ப்பிலே
லோகம் வெந்தெரிந்து அழிந்த போதிலே
புருஷன் பாரி விட்டு
விட்டென்றுங் காணாரே,
கடுங்கோபம் என்றும்
பாவி பட்சிக்குமே,
ஐயையோ! என்றைக்கும்
பாவி பட்சிக்குமே.

௩ புலம்புதலிருக்கும் நியாயத்தீர்ப்பிலே
லோகம் வெந்தெரிந்து அழிந்த போதிலே
உவாத்தி சீஷன் விட்டு,
விட்டென்றுங் காணாரே,
கடுங் கோபம் என்றும்
பாவி பட்சிக்குமே.
ஐயையோ! என்றைக்கும்
பாவி பட்சிக்குமே.

Digitized by Google

௪ புலம்புதலிருக்கும் நியாயத்தீர்ப்பிலே
லோகம் வெந்தெரிந்து அழிந்த போதிலே
அண்ணர் தம்பி விட்டு
விட்டென்றுங் காணாரே,
கடுங் கோபம் என்றும்
பாவி பட்சிக்குமே.
ஐயையோ! என்றைக்கும்
பாவி பட்சிக்குமே.

273 L. M. Armley.

Hell.

க நரகமென்ற சொல்லையே
நினைக்க நெஞ்சம் ஏங்குமே,
அது தீயுங் கந்தகமும்
எரியும் நித்திய பாதாளம்.

உ பசாசும் அதின் தூதரும்
பத்தியில்லாத மாந்தரும்
அதில் விழுந்தழுந்துவார்,
அக்கினிக்கிரையாய்ப் போவார்.

௩ நூராத சுவாலை பூச்சியும்
கர்த்தாவின் கோபஞ் சாபமும்
சொல்லுக்கெட்டாதவிதமாய்
வாதைப்படுத்தும் நித்தமாய்.

Digitized by Google

௪ அங்கே தீயோர் பற்கடித்து
ஐயோ! ஐயோவென்றழுது
புலம்பி நித்த தீயிலே
கரைந்தெரிந்துஞ் சாகாதே. ௭
௫ ஓர் சொட்டு நீர் கிடையாது,
நாக்கை நனைக்கக் கூடாது,
மா கோடாகோடி காலமாய்
பட்டாலும் படும் புதிசாய்.
௬ ஆ, ஐயையோ! இச்சாவை யார்
பொறுத்துத் தாங்கிக்கொள்ளுவார்?
கர்த்தாவே நானும் நரகில் [தில்.
போகாமற் சேர்த்தும் மோட்சத்
ட

274 8, 7. Sicilian Hymn.

"Lord dismiss us with thy blessing."

௧ தேவ ஆசீர்வாதத்தோடே
அடியாரை அனுப்பும்,
வார்த்தையாகும் அப்பத்தோடே
போஷித்து வளர்ப்பியும்.
௨ இப்போதும்மைத்தேடிக்கொண்டு
மனதாரப் போற்றிறோம்,

Digitized by Google

மோட்சலோகத்திற் களித்து
உம்மை வாழ்த்தித் தொழுவோம்.

Doxologies.

L. M.

௧ ஒன்றாக ஆண்டிருக்கிற
திரியேக தெய்வமாகிய
பிதாக் குமாரன் ஆவிக்கே
இஸ்தோத்திரம் உண்டாகவே.

L. M.

௨ அருளின் ஊற்றாந் தேவனை
பிதாக்குமாரன் ஆவியை
துதிசெய் வான சேனையே,
பூலோகமும் நீ துதிசெய்.

C. M.

௩ பிதாவுக்குஞ் சுதனுக்கும்
தேவாவிக்கும் எல்லா
இடங்களிலும் என்றைக்கும்
புகழாம் அல்லவா.

Digitized by Google

P. M.

௪ மேன்மை, கனம், துதி, பலம்
கத்தருக்கென்றும் இருக்கும்,
எங்கள் மீட்பர் யேசுக்கிறிஸ்து,
அல்லேலூயா - அல்லேலூயா!
கத்தருக்கிஸ்தோத்திரம்.

P. M.

௫ தோத்திரம் புகழ்ச்சி கீர்த்தி
யேசுவுக்கு என்றும் எற்கும்,
கிறிஸ்துநாதர் லோக மீட்பர்,
அல்லேலூயா, ஆமன்.

Digitized by Google

ஞானப்பாட்டுப் புத்தகத்திற் கண்ட பிழைகள்.

பாட்டு	வரி	பிழை	திருத்தல்
௫௧	௰௧	கொழுந்து	கொளுந்து
௯௯	௧	உம்மலே	உம்மாலே
௨௪௯	௯	பூலோகம்பாவ	பூலோகப்பாவ

Digitized by Google

1 "*O tell me thou life and delight of my soul.*"

க. என் சீவன் கிரீடம் புகழ்ச்சியுமே,
உமதாடுகள் மேயும் மைதானம்
எனக்கும் நீர் காட்டி மா அன்புடனே
அடியேனுக்குத் தாரும் மெஞ்ஞானம்.

உ. மின், காற்றும், முழக்கமும், மாகொடிதாய்
அடிக்க நான் ஏங்கிக் கலங்க,
அன்பாம் செட்டைக் கீழே புகவிடமாய்,
ஓடுவேன், ஆ! என் மேய்ப்பன் இரங்க.

ங. அலைந்து கலங்கிக் கண்ணீரும் விட்டேன்,
என் பாவம் மிகுந்த மாபாரம். [வேன்.
ஆ! பாதை விட்டோடில் நான் மாண்டுபோ
என் சீவன் ரட்சிக்கவே வாரும்.

ச. மா பாரஞ் சுமந்தோர் வாருங்கள் என்றார்,
போவேன் அவரண்டை இந்நேரம், [வார்,
என் மேய்ப்பன் கை தூக்கி அணைத்துக்கொள்
சந்தோஷமாய் மாறும் கிலேசம்.

ரு. நோ பட்டும் சாவந்தும் நான் பயப்படேன்
என் மேய்ப்பனின் தண்டம் நடத்தும்.
அக்கரையிற் சேர்ந்து களிப்படைவேன்,
என் யேசுவால் மோட்சங் கிடைக்கும்.

2 "*The Prince of Salvation in triumph is riding,*" &c.

க. பூலோகத்தின் மீட்பர் சிங்காசனமேறி,
செங்கோலுஞ் செலுத்த மெய்யாய் வருவார்.
இச்செய்தி இப்போதும் எங்கெங்குமாய் தேறி,
பூவெங்கும் வத்திக்கச் செய்வார்.

Digitized by Google

உ. தேசா தேசமாக அநந்தச் சனங்கள்
இராசாக்கள் கூட மா சந்தோஷமாய்
ஒரே கூட்டமாகப் பணிந்துகொள்வார்கள்
என் யேசுவிடத்தில் அன்பாய்.

௩. பூலோகத்தார் யாரும் விண்ணோர்களைப் போல
சுத்தாங்க வணக்கஞ் செலுத்திருப்பார்
சங்கீதங்கள் பாடி மகா களிப்போடே
மோட்சானந்தச் சாயல் கொள்வார்.

௪. பூலோகத்தின் மீட்பர் சிங்காசனம் ஏறி
செங்கோலுஞ் செலுத்த மெய்யாய் வருவார்
விண் மண் தலத்தோருங் கம்பீரமாய்த் தேறி
முன் பின் சேனையாய்ப் பணிவார்.

3 *"Jesus I my cross have taken," &c.*

௧. சிலுவை சுமந்தோனாக
உம்மைப்பற்றி வருவேன்.
ஏழைப் பரதேசியாக
மோட்ச ஸ்தலந் தேடுவேன்.
உற்றார் மேன்மை ஆஸ்தி கல்வி,
முன்னோர் சொல்லுஞ் ஞானமும்,
அற்பகுப்பையென்று சொல்லி
வர என்னையே இழும்.

௨. உமக்கேற்ற பாடுபட்டோன்
நஷ்டப்பட மாட்டானே,
உமக்கென்று சீவன் விட்டோன்
சாகா சீவன் பெற்றானே.

Digitized by Google

உம்மை அப்பா பிதாவென்று
சொல்லி என்றும் வாழுவேன்
கஸ்திபட்டுஞ் சாவும் வென்று
விண் கிரீடம் அடைவேன்.

௩. நெஞ்சமே, உன் மேன்மை எண்ணு
வருஞ் செல்வம் நோக்கிப்பார்
மோட்ச சாயல் இங்கே கொண்டு
உன் சுதந்திரத்தைக் கார்.
கொஞ்ச வேளைக்குட் பறந்து
யேசுவண்டை சேருவேன்,
தேவ தூதரோடே நின்று
என்றெறைக்குந் துதிப்பேன்.

4 *"Tossed upon life's raging billows," &c.*

௧. கொந்தளிக்குங் கடலேறும்
கப்பல் ஆடி ஆடிப் போம்.
காற்று சீறி சீறி வீசும்
பாய் கிழிந்து போயினும்
யேசு சுவாமி, நீரே வந்து
கப்பலோட்டியாயிரும்
காற்றமைத்து வழி தந்து
கரையேறச் செய்திடும்.

௨. கப்பலேறிப் போவோருக்கும்
வரும் மோசம் பயமும்

Digitized by Google

மின் முழக்கம் சூறை கல்லும்
உமக்கெல்லாந் தெரியும்.
காரிராவிற் பிரகாசம்
உட்டணத்தில் மேகமே
யாவையும் நடத்தும் ராசன்.
சாவிலும் என் சீவனே.

௩. நெஞ்சம் உம்மை எண்ணியெண்
இன்பந் துன்பம் வருகில் [ணும்
சீவன் உம்மில் வாசம்பண்ணும்.
லோக மோட்ச வேளையில்
யேசு சுவாமி நீரே வந்து
கப்பலோட்டியாயிரும்
காற்றை ஆளும் வழி தந்து
கரையேறச் செய்திடும்.

௪ வாசம்பண்ணும் உலகத்தில்
அங்கும் எங்கும் அலைவேன்
கஸ்திப்பட்டும் உம்மிடத்தில்
தஞ்சமென்று ஓடுவேன்.
தேகக் கப்பல் மோதிப்போகில்
சேதமின்றிச் சேருவேன்
மோட்சம் பெற்று உம்மிடத்தில்
அக்களிப்பாய்த் துதிப்பேன்.

Digitized by Google

8, 7, 4.

5 *Sabbath.*

க. வாழ்கச் சீயோன் பத்தர்யாரும்
கீதம்பாடி வாழவே
நித்தம் மோட்சத்துக்கச்சாரம்,
களிப்பான நாள் இதே.
துதியுங்கள்
நம்மை மீட்ட யேசுவை.

உ. லோக சோலி, ஆசை, வேலை
அற யாரும் சுத்தமாய்
சூழ நிற்கும் மோட்ச சேனை
துதிசெய்யுந் தன்மையாய்
சொல்வோமாக
நம்மை மீட்ட யேசுவை.

௩. கோடாகோடி தூதரோடும்
பாடிப் பாடித் துதிப்போம்
மோட்ச கதி சோதியோடும் [ம்
தோன்றும், தோன்றும் நம்புகிறோ
என்றென்றைக்கும்
அவர் சாயல் ஆகுவோம்

ச. லோகமெங்குந் தேசத்தார்கள்
வந்து சுத்த ஆவியால்
ஸ்நானம் பெற்றுத் துதிப்பார்கள்
வானம் பூமி அவரால்

Digitized by Google

புதிதாகும்,
அல்லேலூயா மாந்தரால்.

6 "*Behold how the Lord has girt on his sword.*"

௧. யெகோவாதாமே
சிறந்தவரே
செங்கோலுஞ் செலுத்தியிருக்கிறார்
தேசா தேசமாய்
மகா நீதியாய்
பூ யாவையும் ஆண்டுகொள்வார்.

௨. பாரேன் மாந்தரே,
சீயோன் சபையே,
கிருபை விளங்கச் செய்வார்.
தென் வட வழியாய்
கீழ் மேலுந் திசையாய்
அறிந்தோரையே அழைப்பார்.

௩. பூலோகத்தாரே,
வானோர்களுமே,
மா பூரிப்பாய்க் களியுங்கள்.
லோகா லோகமாய்
ஞாயாதிபதியாய்
ஆள்வார் யேசுவைப் பாருங்கள்.

8, 6. Lanesboro.

7 *"There is an hour of peaceful rest."* &c.

க. லோக சஞ்சார ஏழைக்கே
மா ஆறுதலுண்டாம்
இக்கட்டை நீக்குந் தஞ்சமே
இருக்கும் யேசுக்கிறிஸ்துவே
அருளும் மோட்சமாம்.

உ. பாவத்தின் சூறைகாவினால்
அடிக்கப்பட்டோர்க்கே
சுகிர்த வீடிருக்கையால்
அஞ்சாமல் யுத்தஞ் செய்வதால்
கிடைக்கும் மோட்சமே.

ங. பூலோக ஆசாபாசத்தால்
உண்டாகும் மாய்கையே
மெய் விசுவாச நேசத்தால்
தெளிந்து போம் என் யேசுவால்
கிடைக்கும் மோட்சமே.

ச. மின், சதி, கேடு, வாதையும்
வதைக்கும் யாவுமாய்
மோதியடிக்கும் நாளிலும்
சுத்தாங்க பத்தர் யாருக்கும்
கிடைக்கும் மோட்சமாய்.

Digitized by Google

௫. ஆ! யேசுவே, என் சோதியே,
என் ஜீவன் மீட்சியாம்,
உம்மில் அன்பாயிருக்கவே
என்னெஞ்சம் வாசம்பண்ணுமே
இதே என் மோட்சமாம்.

௬. ஆனந்த அன்பாய் வாழுவேன்
சஞ்சாரியாகையில்
பின் வந்து உம்மைக் காணுவேன்
கிரீடஞ் செங்கோல் பெறுவேன்
என்றைக்கும் மோட்சத்தில்.

8 *Blind Bartimeus.*

"Mercy o thou Son of David" &c

௧. ஆ! இரங்கும் யேசு சுவாமி,
தாவீதின் குமாரனே,
கண் குருடன் துன்பவாளி
பார்த்திமேயு கேட்டானே.

௨. பொன்னும், வெள்ளி, கல்வியென்னு[ம்
லோக ஆஸ்தி வேண்டாமே
கண்திறந்து பார்வை தாரும்
நேசமுள்ள யேசுவே.

௩. நெஞ்சே ஏங்கி இட்ட சத்தம்
சனங் கேட்டுக் கோபமாய்
அவனைக் கடிந்துகொண்டும்
கூப்பிட்டான் விடாமையாய்.

Digitized by Google

ச. யேசு நின்று கண் கடாட்சஞ்
செய்ய, பார்வை பெற்றேனாய்
சோதி கண்டு நேசத்துடன்
பின் சென்றேனே களிப்பாய்.

ரு. கண்ணில்லாத மாந்தர் யாரும்
சொஸ்த சீர் அடையவே
நேசம்பத்தி ஆவலோடும்
சேரப்பண்ணும் யேசுவே.

9 "*Mary to the Saviour's tomb Hasted at the early dawn.*" &c.

க. வைகறை இருக்கையில்
ஓடி வந்த மரியாள்
சேமம் வைத்த இடத்தில்
நின்றுகொண்டு அழுதாள்.
எங்கள் யேசு எங்கேயோ!
சீவன் விட்ட மீட்பரே,
காணவில்லையே, ஐயோ!
யாவனோ எடுத்தானே.

75 – Martyn

உ. ஏங்கிச்சொல்ல, நேசமாய்
மரியாளே, கேள் என்றார்,
கேட்டுக்கொண்டு ஆவலாய்
பற்றி விசுவாசித்தாள்.
தேவ வாக்குச் சீவனும்.
அத்தால் இன்பம் மாறுமே,

Digitized by Google

லோகதாபம் மோட்சமாம் [வே.
தாழ்மையாய்ப் பின்செல்வோர்க்

10 **Praise to the Trinity.**

"come thou Almighty King Help us thy name to sing" &c

க. வாரும்/மா தேவனே,
உம்மைத் துதிக்கவே
எம்மை ஏவும்
உமக்கே வல்லமை
உமக்கே மகிமை
உமக்கே துதியை
செலுத்துவோம்.

உ. ஆதியில் வார்த்தையே,
நீர்தான் என் பேசுவே,
தயையைத் தாரும்.
ஆசீர்வதிக்கவும்
நம்மைப் போதிக்கவும்
உம்மைப்போலாக்கவும்
நம்மோடிரும்.

௩. ஆ! சுத்த ஆவியும்
நாம் உமதாலயம்
நெஞ்சந் தானே
இங்கும் இருக்கிறீர்
உள்ளத்தை பார்க்கிறீர்
உண்மை விரும்புவீர்
சுத்தாவியே.

Digitized by Google

௪. ஏக திரியேகரே,
அனந்த சீவனே,
உம்மாலேயாம்,
வானோர் பூவோர்களும்
இகம்பரத்திலும்
தோத்திரஞ் செய்வதும்
மோட்சந்தானே.

11 *Mat.* 25. 10—12. "*And the door was shut.*"
௧. ஆ! ஐயையோ! என் நெஞ்சமே,
விண் வாசல் பூட்டப்பட்டதே!
மறுதலித்தாய் யேசுவை,
ஐயோ, ஐயோ! மா சோதனை.
௨. இனிச் சகாயமில்லையே,
எரிந்தெரிந்து தீயிலே
நானே பட்டாலுஞ் சகிப்பேன்,
என் உறவார்கள் வந்தேதன்?
௩. நீ தான் நீதானே ஒவ்வொன்றாய்
சொல்வார்களே, மா கசப்பாய்.
விரோதம், பகை, கோபமும்
சாதித்துக்கொள்வார் என்றைக்கும்.
௪. என் தோழனே, என் தோழனே,
பசாசோடும் இத்தீயிலே.

L. M. Windham

Digitized by Google

நான் விழுவதறிந்தையோ!
என் சொல்லவில்லை? ஐயையோ!

ரு. அறிந்தாயே, அறிந்தாயே,
என் நேசனல்ல அல்லவே.
ஆ! துரோகி, துரோகி! என்றுமாய்
சாபங்கொண்டேன் உன் வழியாய்.

சு. அண்ணா, அண்ணா, நான் உன்னையே
நேசித்து நம்பிக்கொண்டேனே
பசாசு, பேய், தீ, இந்தநோ
எந்நேரமும் முடியாதோ?

எ. முடியாதே, ஐயோ, ஐயோ!
சபிக்கப்பட்டோம் அல்லவோ?
சிற்றின்ப விலையாகவே
இந்தாத்துமாவை விற்றேமே.

அ. பிதா மாதாக்கள் பிள்ளையும்
கூடப்பிறந்த எல்லாரும்
ஒருத்தரோடொருத்தராய்
குற்றஞ் சொல்வார்கள் கோபமாய்.

கூ. ஆ! பாவி கேள், ஏன் கெடுவாய்?
உன் இனஞ் சனங் கொடிதாய்
நரகத்தீயிற் படுவார்
அறிந்த நீ திகைத்துப் பார்.

Digitized by Google

Digitized by Google

Digitized by Google

Digitized by Google

Digitized by Google

Ge.-Al.

Ald 100. –
Portugal
Galt
(Uxbridge).
Aubrook
Ninfham
Wells
Armley.
Shaw.

St. Ald.

St. Thomas
Watchman
Shirland)
(Dover

Digitized by Google

Digitized by Google

C. M.

Ileas
Arlington
Peterboro'
St Martins
Dundee
St Anns
Walsal
Windsor
Howards
[illegible]
Orkneyville 104.
[illegible]

7s.

[illegible]
Children's tune
[illegible]
[illegible]
Lancaster
[illegible]
Benevento
Pleyel's Hymn

8s & 7s.

[illegible]
[illegible]
Sicilian.

Digitized by Google

Digitized by Google

8. 7. & 4.

Grenville

Lyttelton

Dartmouth

7 & 6.

[illegible]

[illegible] 2d

Digitized by Google

[illegible] [illegible] Keeley.

Luther's

(Dalston

"Gentle Jesus"

"Sweet Spring [illegible]"

"Wins [illegible] [illegible]"

Granger

Mistow

The Prince [illegible] [illegible]

Digitized by Google

Digitized by Google

Digitized by Google

Digitized by Google

Digitized by Google

Digitized by Google

NOV 3 - 1932

Digitized by Google

Digitized by Google